வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 தைத் திங்கள் 11-ம் நாள் (24-1-1965) ஞாயிற்றுக்கிழமை ரமழான் 20 இதழ் 25




# 'போட்டியிட வேண்டாம்!'

## காங்கிரஸ் வேட்பாளருக்கு விடுத்துள்ள வேண்டுகோள்

## தீவுப் பகுதி மக்களின் எதிர்ப்புப் பிரச்சாரம்



அளவெட்டியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாபெரும் கூட்டத்துக்கு தலைவர் செல்வநாயகம் மாட்டு வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டபொழுது எடுத்தபடம்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. என். ரி. சிவஞானம் அவர்களைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகுமாறு ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த கொழும்பு வாழ் இளைஞர்கள் கடித மூலம் வேண்டியுள்ளதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் திரு என். ரி. சிவஞானம் அவர்களைத் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்தும் விலகுமாறும் அக்கடிதத்தில் இவ்விளைஞர்கள் கேட்டுள்ளார்களாம்.

தீவுப் பகுதி மக்களைக் குறிப்பாகப் பெண்களை இழிவு படுத்திய தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக ஒருவர் ஊர்காவற்றுறை தொகுதியில் போட்டியிடுவது ஊர்காவற்றுறைத் தொகுதி வாக்காளர்களாகிய எங்களைப் பெரிதும் கேவலப்படுத்துவதாக உள்ளது என்றும் அக்கடிதத்தில் இவர்கள் குறிப்பிட்டுள்ளார்களாம்.

மேலும் அக்கடிதத்தில் "ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த யாரும் இனி தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் எத்தகைய உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே நீங்கள் (திரு. என். ரி. சிவஞானம்) தேர்தலிலிருந்து விலகுவதுடன் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்தும் உடன் இராஜினாமாச் செய்ய வேண்டும்.

நமது வேண்டுகோளை ஏற்று நீங்கள் இவ்விதம் நடந்து கொண்டால் நமது அன்பும் மதிப்பிற்கும் மட்டுமல்ல ஊர்காவற்றுறை தொகுதியைச்சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களை மதிப்பார்கள். நீங்களும் ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்குப் பெருமை சேர்த்தவராவீர்கள்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்களாம்.

யாழ்ப்பாண நகரிலுள்ள 'தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கத்திற்'கும் இக்கடிதத்தின் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக திரு. வீரசிங்கம் என்பவர் நமது நிருபரிடம் கூறினார். தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகிய திரு. என். ரி. சிவஞானம் தமது வேண்டுகோளை ஏற்க மறுத்தால் தமிழ் காங்கிரஸ் போட்டியிடும் சகல தொகுதிகளுக்கும் சென்று எதிர்ப்பிரசாரத்தை தாங்கள் மேற்கொள்ளப் போவதாக இவ்விளைஞர் மேலும் கூறினார்.

கடந்த 28-12-64 அன்று யாழ்ப்பாணம் முற்றவெளி

(9-ம் பக்கம் பார்க்க)

## இன ஒழிப்பிலீடுபடுவோரை ஒழிகக வல்லவருக்கே உங்கள் வாககு!

### இலண்டன் தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள வேண்டுகோள்

"தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், சிங்களத் திணிப்பு தமிழ் மக்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நாடுகடத்துவது ஆகிய முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடும் எந்த அரசாங்கத்தையும் முறியடிக்க தமது பாராளுமன்ற வாக்குகளை உபயோகிப்போம் என வாக்குறுதியளிப்பவர்களுக்கே தமிழ்பேசும் மக்கள் வாக்களிக்கவேண்டும்!" இவ்வாறு இலண்டன் மாநகர தமிழ்ச்சங்கச் செயற்குழு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு உங்களால் தெரியவிருக்கும் பிரதிநிதிகளில் முற்றாகத் தங்கியிருப்பதால் உங்கள் வாக்கைக்கோரும் நபரிடம், அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராய் இருந்தாலும், கீழ்காணும் இரு கோரிக்கைகளுக்கும் இணங்குவதாக வாக்குறுதி தரும்படி கேளுங்கள்.

தமிழ்மக்களின் உரிமைகள் மேலும் பறிபோவதைத் தடுக்கும் உடனடி நடவடிக்கையாக தமிழ்ப்பகுதிகளில், கல்வி, கமதொழில், கைத்தொழில் முதலியவற்றையும், மற்றும் தமிழ் மக்களைப் பாதிக்கும் ஏனைய கருமங்களையும் கண்காணிப்பதற்குத் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவுக்குப் பொறுப்பாகவுள்ள ஒரு உத்தியோகத்தரை நியமனம் செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

இக்கோரிக்கை, உலகத்துக்குப் புதியதல்ல. பெரிய பிரித்தானியப் பாராளுமன்றத்தில், ஸ்கொட்லாந்து விவகாரங்களைக் கண்காணிப்பதற்குத் தனியாக ஒரு அமைச்சரும், அவரின் கீழ் அநேக துணை அமைச்சர்களும் உள்ளனர்.

இரண்டாவதாக, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டம், தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் சிங்கள திணிப்பு, இலங்கையிற் பிறந்த தமிழ் மக்கள் எவரையும் அவரின் விருப்பத்துக்கு மாறாக நாடுகடத்தப்படும் முயற்சி ஆகியவற்றைத் தொடர்ந்து செய்ய எத்தனிக்கும் எந்த அரசாங்கத்தையும் முறியடிக்கத் தமது பாராளுமன்ற வாக்குகளை உபயோகிப்பதாக ஒவ்வொரு தமிழ்ப் பிரதிநிதியும் உறுதியளிக்க வேண்டும்.

## தமிழரசுக் கட்சியின் தீவிர பிரச்சாரம்

### தினந்தோறும் நடைபெறும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்கள் இத் திங்கள் 15-ம் நாளிலிருந்து வடகிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணப் பகுதியில் வல்வெட்டித்துறையிலேயே முதற் கூட்டம் நடைபெற்றது. 15-ம் திகதி வல்வெட்டித்துறையிலும், 16-ம் திகதி கருகம்பானையிலும், 17-ம் திகதி சித்தங்கேணி உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும், 18-ம் திகதி ஊர்காவற்றுறையிலும், 19-ம் திகதி பளையிலும், 21-ம் திகதி அரியாலையிலும், 22-ம் திகதி பாலியிலும் பல பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

23-ம் திகதியிலிருந்து 31ம் திகதி வரை பின்வரும் இடங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும்.

23-1-65-நாவாந்துறை
24-1-65-குருநகர், நீர்வேலி

(9-ம் பக்கம் பார்க்க)



11-1-65 நியமனதினத்தன்று திருகோணமலை கச்சேரியில் தங்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்து விட்டு தமிழரசு ஆதரவாளர்கள் புடைசூழ ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி அவர்களும், திரு. எஸ். எம். மாணிக்கராசாவும் ஊர்வலமாகச் சென்ற போது எடுத்த படம்.

—அருணா போட்டோ.




"வாலிபர்களிடம் தோன்றும் காதலின் முதல் அறிகுறி கோழைத் தனம். பெண்களிடம் தோன்றும் காதலின் அறிகுறி துணிச்சல். இந்த கோழைத்தனமும், துணிச்சலும் ஒன்றையொன்று நெருங்கும் போது, ஆணின் கோழைத்தனம் பெண்ணுக்கும், பெண்ணின் துணிச்சல் ஆணுக்குமாக மாறிவிடுகின்றன"

—விக்டர் ஹியூகோ.

## 2. விபத்து!

என் கணவருடைய இந்தப் பச்சையான கேள்வி என்னை மிகுந்த பதற்றத்துள் ஆழ்த்திவிட்டது. என் மனத்தின் அடித்தளத்தில் நன்கு ஆழப் புதைந்துவிட்ட, எனக்கு மட்டும் தெரிந்த அந்த ஊமைப் பிறவியைத் தம் சாகசத்தால் பேச வைத்துவிடுவாரோ என்ற அச்சம் என் உடல் முழுக்கப் பரவியது. அவ்விதம் அந்த உண்மையை அவர் பேச வைத்துவிட்டால், என்னுடைய தாம்பத்திய வாழ்வு என்ற ஆலமரம் சாய்ந்துவிடாதோ என்று அஞ்சினேன் நான்.

என் அச்சத்தையும், தயக்கத்தையும் புரிந்துகொண்டு என் கணவர் மிகுந்த நிதானத்துடன் பேசினார்:

'இதில் அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை சரோ! இப்படி அஞ்சித்தான் மனிதர்களெல்லாம் நடிகர்களாக மாறிப் போனார்கள். உண்மையான அன்பு மடிந்து, போலித் தன்மை தலை தூக்கி நிற்கின்றது. ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வதன் மூலம், பண்பைக் காக்க முயலுகின்றனர். ஒவ்வொருவரும் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால், சன்மார்க்கம் பற்றியும், பண்பு, ஒழுக்கம் பற்றியும் ஏதேதோ பேசி மனச்சாட்சிக்கு வேட்டு வைக்கின்றனர். சமுதாயத்தைப் பற்றியுள்ள இந்தக் கொடுமைக்கு எப்போ விடுதலை கிடைக்கின்றதோ அன்றுதான் சமுதாயத்தில் நாகரிகம் பிறக்க வழி தோன்றும். இப்பொழுது உன்னைப் பற்றியுள்ள இந்த அச்ச உணர்வுக்கு இதுவரை நீ வாழ்ந்த சமுதாய ஒழுங்குதான் காரணம். தம்மைத் தாமே ஏமாற்றும் இந்தப் போலி ஒழுங்கு நமக்கு வேண்டாம். அச்சம் சிறிதும் இன்றி உன் மனதை எனக்குத் திறந்து காட்டு!'

விளங்காத மொழிகளில் ஏதேதோ வெல்லாம் சொல்லிக்கொண்டு வரும் சித்து வேலைகள் கற்றவரா என் கணவர். 'நெஞ்சுள் புகுந்து அதில் படிந்துள்ள நிகழ்ச்சிகளை வெளிக்குக் கொண்டு வரும் சித்து வேலைகள் கற்றவரா என் கணவர்?' என்று எண்ணத் தோன்றியது எனக்கு. இன்னும் இன்னும் எனக்கு எத்தனை தைரியத்தை ஊட்ட முடியுமோ அத்தனை தைரியத்தையும் ஊட்டி என் வாயைக் கிழறினார் அவர். நான் கூறிய ஒரு வாசகத்தைக் கொண்டே என் மனக்கிடங்கைத் தோண்டினார் அவர்.

'சரோ'. சற்று முன் நீயே சொன்னாய், 'நான் கனவு கண்டு பெருமூச்சு விட்டது வீண் போகவில்லை' என்று. உண்மையைச் சொல். நீ கனவு கண்டது சாட்சாத் என்னையேதானா? நீ பெருமூச்சுவிட்டது எனக்காகத் தானா? என்னைத் தவிர வேறு ஒருவனாவது உன் உள்ளத்தைத் தொடவில்லையா?'

'ஐயோ! இந்த மனுஷருக்குச் சாத்திரம் கூடத் தெரிகின்றதே' என்று வியப்பு மிகக் கொண்டேன் நான். சற்றில் அந்த உண்மையை அவரிடம் தெரிவிப்பதை விட வேறு வழியில்லாது போனதால், எல்லாவற்றையும் அவரிடம் ஒன்றுவிடாமல் கூறி முடித்தேன். தைரியம், வீரம் என்றெல்லாம் ஏதேதோ பேசுகிறார்கள் அல்லவா? பாரதியார் கூட, 'நச்சை வாயில் கொண்டு வந்து நண்பர் ஊட்டும் போதிலும் அச்சமில்லை அச்சமில்லை' என்று முழக்கமிட்டார்.

என் கணவரைப் பொறுத்தவரை யாரும் அவர் வாயில் நஞ்சை ஊட்டவில்லை. அது மட்டுமன்றி, எந்தச் செருக்களத்திலும் அவர் நின்று போரிட்டு எதிரிகளை ஓட ஓட விரட்டியதும் இல்லை. ஆனாலும் அந்த வீரர்களுக்கெல்லாம் வீரராகத் திகழ்ந்தார் என் கணவர். நான் அவரிடம் சொன்ன உண்மையைக் கேட்டுவிட்டு அமைதி குன்றாது நின்ற என் கணவருடைய வீரத்துக்கு ஒப்பான வீரம் இந்த உலகத்தில் இல்லை என்பது என் முடிந்த முடிவு. அது மட்டுமல்லாது, என்னைக் கைப் பிடித்த அன்று தொட்டு, என்னைக் கைம்பெண்ணாக்கிச்சென்ற இன்று வரை சற்றேனும் புண்படுத்தாமல் அவர் நடந்து கொண்ட பண்பு இருக்கின்றதே; அதை இன்று நினைத்துக் கொண்டாலும், அவர் சென்ற திசை நோக்கி என் கரம் குவிகின்றது.

சந்தர்ப்ப வசத்தாலோ; அல்லது வேண்டுமென்றோ என வாழ்வில் நேர்ந்துவிட்ட அந்த விபத்தை என் கணவரிடம் சொன்னதன் பின்னால் என் மனத்தில் குடி புகுந்த அமைதிக்கு அவர் என்னிடத்தில் காட்டிய பரிவுதான் காரணம். அன்று அந்தப் பெரிய மனம் ஈந்த மன்னிப்புத்தான் இன்று என் வாழ்வில் தோன்றியுள்ள ஒரு பெரிய நெருக்கடியைத் தைரியமாகச் சமாளிக்க வல்ல சக்தியைத் தந்து கொண்டிருக்கின்றதோ என்னவோ?

குழந்தை, தெய்வத்துக்கு மிக அண்மையில் இருக்கின்றதென்று கூறுகின்றார்கள். அப்படிப் பார்த்தால், என் கணவரும் தெய்வத்துக்கு மிக அணிமையில் இருக்கக் கூடியவர் என்றுதான் கொள்ள வேண்டும்! ஏனென்றால் குழந்தை போல மனத்தில் இருந்த எல்லாவற்றையும் அவர் சாகும் வரையும் சொல்லிக் கொண்டே இருந்தார். என் வாழ்வில் ஒரே ஒரு முறைதான் விபத்து நடந்தது. என் கணவரின் வாழ்விலோ; தக்க பருவம் தொட்டு செத்துப் போகும் வரையும் விபத்து! விபத்து! விபத்து! மனைவி என்ற 'லகான்' பூட்டப்பட்ட பின்னரும் தறிகெட்டு ஓடியது அவர் மனப் புரவி. என்னுடன் வாழ்ந்து கொண்டே அவர் வாழ்ந்த 'இன்னொரு வாழ்வு', உலக மாந்தரின் உள் மனத்தைப் படம் பிடித்துக் காட்டியது!

அவர் வாழ்வில் குறுக்கிட்டு பல விபத்துக்களை ஏற்படுத்திய ஒவ்வொரு பாத்திரமும், இந்த உலகத்தில் என் கணவர் பிறந்த பயனைப் பெற உதவியதாகவே என் கணவர் கொண்டார். முருகப் பெருமானுடைய உருவை வைத்துக் கொண்டே தம் கட்சியை வாதிடுவார் என் கணவர். 'அழகுக்கு வணக்க அந்தஸ்து கொடுத்தவன் என் இனத்தவன்' என்று கெக்கலி கொட்டுவார் அவர். முருகனை உபாசிப்பது அழகை உபாசிப்பது என்பார். முருகனுடன் ஐக்கியமாவது அழகுடன் ஐக்கியமாவது எனபார். நானும் அப்படித்தான் அழகை உபாசனை செய்து அதனுடன் ஐக்கியமடைகின்றேன என்பார். அப்படிச் செய்வதன் மூலம் ஆத்மாவைப் பரமாத்மா நிலைக்கு உயர்த்துகின்றேன் என்று ஏதேதோ வாதம் செய்வார்.

ஆனால் அவர் கொண்டிருந்த அந்த வேகமான அழகுணர்ச்சி அவர் உடலை எங்ஙனம் பாதித்தது என்பதற்கு என் வெறுமையான கழுத்தே இதோ சாட்சி பகருகின்றது!

ஒரு வேளை இதை அவரிடம் சொன்னால், 'அடி பைத்தியக்காரப்பெண்ணே! உடல் வேறு, ஆத்மா வேறென்பது உனக்குத் தெரியாதா? நான் செய்ததெல்லாம் என் ஆத்மாவைப் பக்குவப் படுத்துவதற்கன்றி வேறொன்றுக்குமல்ல; அந்த அரிய முயற்சிக்கு ஒரு கருவி தேவைப் பட்டது; அந்தக் கருவிதான் உடல்; அதைப் பணயம் வைத்தேன்; அழியும் ஒன்றைக் கொண்டு அழியா ஒன்றைப்பெறப் பக்குவம் பெற்றேன்; வியாபார இரகசியம் தெரிந்த கைதேர்நத வணிகன் நான்!' என்பாரோ என்னவோ?

தத்துவ விசாரணை-அழகுணர்ச்சி எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு என் கணவா சென்று விட்டார். வெறுமனே இப்படி உட்கார்ந்து கொண்டு, அங்கொன்றும் இங்கொன்றுமாக அவருடைய நினைவுகளைத் தெளிவில்லாமல் எண்ணிப்பார்ப்பதில் எந்த வித அர்த்தமும் இல்லை. இப்படித் தெளிவில்லாமல் எண்ணுவதே அவருக்குப் பிடியாத ஒன்று. எதையும் வெளியரங்கமாகச் சொல்லிவிட வேண்டும் என்பது அவர் தத்துவம். அவரைப் பூஜிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நான் இன்னமும் கால விரயத்தில் இறங்காமல், அவர் என்னுள்ளத்தில் எழுதி விட்டுச் சென்ற நாட்குறிப்பைப் பகிரங்கமாக உங்கள் முன் விரித்து வைக்கின்றேன்.

இந்த நாட்குறிப்பில் கண்டிருக்கும் 'கதை'யைப் படித்து விட்டு உங்களில் யாராவது, 'இது கணேசனின் நாட்குறிப்பா? அல்லது நம்முடைய நாட்குறிப்பா?' என்று குழப்பமடைந்தால் போதும்! என் கணவருடைய சித்தாந்தம் வலுப்பெறுகின்றது என்பதுதான் அந்தக் குழப்பத்தின் பொருள். இதோ உங்கள் முன் விரிந்து கிடக்கும் என் கணவருடைய நாட்குறிப்புப் புத்தகத்தைக் 'கடகட'வென்று புரட்டிக் கொண்டு செல்லாமல், சற்று நிதானமாகப் பார்த்துக் கொண்டு செல்லும்படி பணிவோடு உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தாயநலம் என்ற தரையில் பேராசை என்ற அடித்தளம் போட்டு மனிதக் கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளதென்றாலும், குமரப் பருவத்தில் அந்த இரண்டினதும் ஆட்சி கொடி கட்டிப் பறக்கின்றது. இந்தப் பொல்லாத பருவ ஆட்சியின்போதுதான் கணேசன் அந்த மலைப் பிரதேசத்தில் கடமை ஏற்பதற்காகக் காலடி எடுத்து வைத்தான்.

எடுத்த எடுப்பிலேயே அவனுடைய பருவ உணர்ச்சிக்குத் தீனிபோடுவது போன்ற சம்பவங்கள் வாய்த்தன அந்த மலைச்சூழலிலே! அந்தச் சம்பவங்களால் அவனுடைய நெஞ்சத்து வானில் நிலவு பவனி வந்தது. நெஞ்சப் பொய்கையில் கமலம் பூத்தது. நெஞ்சச் சோலையில் மந்தமாருதம் கொஞ்சியது. நெஞ்சயாழில் சங்கீதம் பாய்ந்தது.

பனி அரசன் ஆட்சி புரியும் அதிகாலை வேளையில் வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதை வழியாகக் கணேசன் நடந்து வந்து கொண்டிருந்தான். பஸ் அவனை இறக்கி விட்ட இடத்திலிருந்து சுமார் மூன்றரை மைல்களுக்கு அப்பால் இருந்தது அவன் கடமை ஏற்க இருந்த பாடசாலை. இந்த மூன்றரை மைல் தூரத்துக்கும் பஸ் போக்குவரத்து இல்லா விட்டாலும், நடந்துதான் போக வேண்டுமென்ற நியதியும் இல்லை; கார் மூலமாகவும் செல்லலாம்! நினைத்த நேரத்தில் வாடகைக்கார் கிடைக்காத காரணத்தால் கால் நடையாகவே கணேசன் தன் இலக்கை நோக்கி நடையைக் கட்டிக் கொண்டிருந்தான்.

அவன் இப்பொழுது வந்து கொண்டிருக்கும்புதிய சூழல், அவன் மன இயல்பைக் கூடச் சற்று மாற்றுவதாக இருந்தது. 'பரம்பரைதான் மனிதனின் தன்மையை நிர்ணயிக்கின்றதென்றாலும், சூழலும் அதற்கு நிறைந்த அளவு துணை செய்கின்றது' என்று ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இரண்டு வருடங்களாக மாரடித்த உளநூல் பாடம் கணேசனின் உள்ளத்தில் இப்பொழுது நினைவுக்கு வந்தது.

இரம்மியமான இந்த மலைநாட்டுச் சூழலும், கண்கொள்ளாப் பசுமைப் போர்வையால் தன்னை மூடிக் கொண்டு நின்ற மலைக்கன்னியின் இளந்தோற்றமும், அந்தத் தூயகன்னியைக் குளிப்பாட்டி, மேலும் அவளுடலைத் தூய்மைப்படுத்த எண்ணி 'சலசல' என்ற சத்தத்தோடு குதித்தோடி வந்து கொண்டிருந்த வெள்ளிச் சரநீருவியும் கணேசனின் உள்ளத்தில் புதிய வேகத்தை ஊட்டின. மலைச் சிகரத்தில் கண்ணுக்குத் தென்படா மறைவிடத்திலிருந்து குதித்து; முறிந்து; வடிந்து; தெளிந்து பாய்ந்து கொண்டிருந்த அருவியின் ஓட்டத்தை இடையிடையே மறித்துப் 'பீலி' பொருத்திக் குளிக்கும் இடமாக மாற்றியிருந்த காட்சியும் கணேசனின் நெஞ்சைக் கவர்ந்திழுக்கத் தவறவில்லை. ஆங்காங்கே தென்பட்ட அந்தப் 'பீலி'களில், அந்தக் காலைக் குளிரையும் பொருட்படுத்தாமல் பெண்கள் கூட்டம், துணி மூட்டைகளுடன் வந்து அழுக்குத்தேய அந்தத் துணிகளைக் கழுவிக் கொண்டு நின்ற காட்சியும், 'சதசத'என்று சிறிப்பாய்ந்த 'பீலி'த் தண்ணீர் அவர்கள் மேனியில் தெறித்ததால் உண்டான 'இயற்கைக் காட்சி'யும் கணேசனுக்கு இன்பலாகிரியை ஏற்றின.

தன்னுடன் படித்த கலாசாலை நண்பன் ஒருவன் பாடியிருந்த ஒரு கவிதையின் வர்ணனை கூட இந்த நேரத்தில் கணேசனுக்கு நினைவு வந்தது. கவிதையின் சொற்கட்டு மறந்து போனாலும், அதன் பொருள் மட்டும் நன்கு நினைவிருந்தது சணேசனுக்கு. குளித்து ஈர ஆடையோடு வரும் கன்னிப் பெண்ணை, 'முகில் மறைத்த முழுமதி' என்று உவமித்திருந்தான் அந்தக் கவிஞ நண்பன்! முகில் மறைத்த நிலவை அந்த முகிலுக் கூடாகப் பார்க்கும் போது, தெளிவில்லாமல் மிக இலேசாகத் தெரியுமாம் அந்த நிலவின் தோற்றம்! குளித்துவிட்டு ஈர உடையோடு வெளியேறும் ஒரு பெண்ணின் 'முழுத்தோற்ற'மும், முகிற்திரையினூடாக நாம் காணும் நிலவு போலத் தோற்றுமாம்!

இங்கு, 'பீலி'யடியில் நனைந்து கொண்டு நின்ற பெண்களைக் கண்டபோது நண்பனின் இந்த 'பச்சை'க் கவிதைதான் நினைவுக்கு வந்தது கணேசனுக்கு. 'அடே! என் கவிஞ நண்பா! நீ உண்மையில் ஒரு கவிஞன் தானடா' என்று மானசிகமாக அந்த மலைப் பிரதேசத்தில் வைத்துத் தன் கவிஞ நண்பனைப் பாராட்டிக் கொண்டான் கணேசன்.

இந்தச் சிந்தனை வேகத்தில் தனக்குப்பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த 'ஜீப்'பை அவன் கவனிக்கவேயில்லை!






பௌஸியா-ஈழமேகம்,
சம்மாந்துறை-3.

கே: புயல் நிவாரண நிதியிற் கூட இலர் கொள்ளையடிக்கிறார்களே, இவர்களைப்பற்றி உங்கள் கருத்து என்னவோ?

ப: விரைவில் ஒரு பயங்கரமான புயல் கிளம்பி அவர்களைக் கொள்ளைகொண்டு போகும் என்பதே என் கருத்து.

ஃ

நவீர் ஈழமேகம்,
சம்மாந்துறை-3.

கே: மூதூர் முகம்மதலி மீண்டும் மூதல வராக வருவாரா?

ப: இதில் வேறு சந்தேகமா? கைப் புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்?

ஃ

வே. சண்முகநாதன்,
திருகோணமலை.

கே: திருகோணமலையில் சு. கட்சியில் நிற்கும் சிங்களவர் வெற்றி பெறுவாரா?

ப: திருமலைத் தொகுதியைக் கைப்பற்ற வேண்டுமென்பது சிங்கள வகுப்புவாதிகளின் நீண்டகாலத் திட்டம். தன்மானமிக்கத் தமிழர்கள் திருமலையிலிருக்கும்வரை அத்திட்டம் நிறைவேருது.

ஃ

நா. சிவேந்திரன்,
நுகேகொடை.

கே: யூ. என். பி. தலைமைக் காரியாலயம் இவ்வளவு காலமும் ஐ தே க. என்று தமிழில் எழுதியது அண்மையில் தமிழை முற்றாக நீக்கிவிட்டார்கள். இவ்வித மனப்பான்மை உள்ளவர்களிடம் ஆட்சி சிக்கினல் தமிழின் நிலை?

ப: இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிற் சரிபாதிப் பேர் குடியுரிமையை இழந்தது அந்த ஆட்சியில்தானே! அத்தகையோரிடம் ஆட்சி மீண்டும் சிக்கினல் என்ன நடைபெறும் என்பதைக் கூறவா வேண்டும்?

ஃ

எஸ். எஸ். நாதன்,
ஏருவூர்-4.

கே: காங்கிரஸ்வாதியாக தேர்தலில் வெற்றிபெற்று, தமிழரசுவாதியாக வேடமிட்டிருந்த ஒருவர் இன்று பழைய பல்லவியை பாடுவதன் நோக்கமென்ன?

ப: நீங்களே கூறிவிட்டீர்கள் வேடமிட்டிருந்தாரென்று. இப்பொழுது வேடம் கலைந்துள்ளது. மீண்டும் வேடமிடாதபடி கண்காணிக்க வேண்டியது உங்கள் போன்ரேரின் பொறுப்பு.

ஃ

'தாமரையாள்'
ஏழாலை-மேற்கு.

கே: தன்னைப்போன்றதிறமைசாலிகள் பத்துப்பேரை அனுப்பினல் தமிழ் மக்களுக்கு உரிமைகள் எல்லாம் பெற்றுத் தருவதாக தனிப்பெருந் தலைவர் கூறினாரமே, அவர் குறிப்பிடும் 'திறமைசாலி' யாராக இருக்கலாம்?

ப: காலைக் கையைப் பிடித்து மந்திரிசபைக்குள் நுழையும் திறமைசாலியை-உதைத்து வெளியே தள்ளினலும் அந்த உதைதயையும் பேரின்பமாகக் கருதும் திறமைசாலியை அவர்குறிப்பிட்டிருக்கலாம். அப்படிப் பத்துப்பேரைத் தமிழ் மக்களிடம் கண்டுபிடிப்பது கடினமே.

கே: தமிழரசுக்கட்சி இதுவரை பாராளுமன்றத்தில் சாதித்தது என்ன என்று சுந்தரர் கேட்கிருரே!

ப: தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைச் சூறையாடிய இரு சிங்கள அரசாங்கங்களைக் கட்சி வீழ்த்தியதே. இப்படியொரு சாதனையைச் செய்ய இந்தச் சுந்தரரால் முடியுமா?

ஃ

வி. எஸ் ஆனந்[illegible]ன்,
காரைநகர்.

கே: வருகிற பொதுத் தேர்தலில் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை சுய இச்சைகளின் நிலை என்னவென்று சொல்வீரா?

ப: கட்சி அரசியல் வளர்ந்துள்ள நாட்டில் 3-தலைக் கழுதைகளுக்கு என்னவேலை?

கே: மாவலி கங்கையை வடக்கே திருப்புதல் பற்றி நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: வாய்வீச்சு வீரர்கள் இதற்கு முன்பும் எத்தனையோ தடவை திருப்பிவிட்டார்கள். கிளிநொச்சிப் பகுதியிற் திடீரெனத் தலைகாட்டியுள்ள ஓர் அடுப்படி முன்னணிக்காரர் இப்பொழுது திருப்பிக்கொண்டிருக்கிருராம்?

ஃ

வே. நடராசா, பளை.

கே: 'தாய் தந்தையரிடமே அடிவேண்டாத நான் தமிழருக்காகப் பட்டாளத்தாரிடம் அடிவேண்டினேன்' எனச் சுயவிளம்பரம் செய்யும் திரு. சிவசிதம்பரத்துக்கு எதிர்வரும் தேர்தலில் என்ன நடக்கும்?

ப: வாக்காளரிடம் என்றுமே மறக்காதபடி 'அடி' வாங்குவார்.

ஃ

எஸ். ஞானசபேசன், சுன்னுகம்

கே: இனி வரப்போகும் அரசாங்கத்தினுல் தமிழருக்கு நன்மை கிடைக்குமா?

ப: "நன்மை" என்பது ஒரு சில சில்லரைச் சலுகைகளல்ல. குடியுரிமை, மொழியுரிமை, பிரதேச உரிமை நில ஆக்கிரமிப்பைக் கைவிடுதல் ஆகியே ஜீவாதாரமான உரிமைகள் தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டும். யு. என். பி. அல்லது சுதந்திரக் கட்சிதான் அடுத்து பதவிக்கு வரும். தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரையில் இவ்விரண்டும் ஒரு காசின் இரு பக்கங்கள். இரண்டில் எது பதவிக்கு வந்தாலும் உரிமைகளை வாரி வழங்கிவிட மாட்டார்கள். பாராளுமன்றத்துள்ளும் வெளியிலும் மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தித்தான் அவற்றைப் பெற முடியும்.

**திருவாளர்**
**குயுக்தியார்**
**மே/பா சுதந்திரன்**
**தபால் பெட்டி இல. 1183**
**கொழும்பு-12.**

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

ஆர் எஸ். டி. லிங்கம்,
கல்குடா

கே: ஆனைப்பந்திக் காங்கிரஸ் வேட்பாளர் சிலரிடம் யு. என். பி. வாடை வீசுகிறதே! ஏன்?

ப: போட்டியிட ஆனைப்பந்திக்கு ஆள் கிடைக்கவில்லையாம். யு. என். பி. யுடன் கூடிக் குலாவியவர்களைப் பிடித்துப் போட்டிருக்கிறதாம். அதுதான் அந்த வாடை.

ஃ

எம். எச். சாகுல் ஹமீது,
கொழும்பு-15

கே: பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் அதிர்ஷ்டம் அடிக்கிறதாமே!

ப: அதிர்ஷ்டமா? ஒரு பிரபல சிங்களத் தினசரியின் ஆசிரியர் திடீரென பதவியிலிருந்து வெளியேறிவிட்டார். மற்ருெரு தினசரியில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த 11 பேர் பதவிக்குக் கல்தா கொடுத்துவிட்டனர். லண்டனில் பயிற்சி பெற்ற பிரசித்திபெற்ற நிருபர் ஒருவர் நள்ளிரவில் திடீரென "டிஸ்மிஸ்" செய்யப்பட்டார். சிங்களப் பத்திரிகாசிரியர்களின் தந்தை எனக் கூறப்படும் ஒரு புகழ் பெற்ற ஆசிரியர் வெளியேறத் தயாராகிக் கொண்டிருக்கிருர். இதுவா அதிர்ஷ்டம்? அதிபர்கள் பாடும் கஷ்டமே ஒரு தமிழ்த் தினசரியின் விற்பனை 25 வீதம் குறைந்துவிட்டது. இரு சிங்களத் தினசரிகளினதும் இரு ஆங்கிலத் தினசரிகளினதும் விற்பனை 10 வீதம் குறைந்துவிட்டது. தேர்தற் காலங்களில் கூட வேண்டிய விற்பனை குறைந்து கொண்டிருக்கிறது.

ஃ

க. மு. வேலு, பண்டாரவெளி

கே: சுதந்திரக் கட்சி, யு என். பி. என்ற இரண்டு சிங்களக் கட்சிகளில் அடுத்து எது ஆட்சிக்கு வரும்?

ப: எது வந்தாலும் நாட்டிலே சர்வாதிகாரம் தலைதூக்குவது நிச்சயம். இவ்விரண்டு முகாமுக்கும் ஏறத்தாழ சமபலம் இருப்பதே இதற்குக்காரணம். இலங்கை பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடாதலின், சமபலமுள்ள இரு கட்சிகளில் ஒன்று மற்றதை நசுக்கினலன்றி, அது நீடித்து ஆட்சி செலுத்த முடியாது. எதேச்சாதிகாரமின்றி 'நசுக்கும்' வேலையைச் சரிவரச் செய்யவும் முடியாது. எனவே இரண்டில் எது ஆட்சிக்கு வந்தாலும் சர்வாதிகாரம் தோன்றும். சர்வாதிகாரம் ஏற்படுவதைத் தடுக்கத் தமிழரசுக் கட்சியால் மட்டுமே முடியும் அத்தகைய ஆட்சியை வீழ்த்துவதின் மூலம்.

ஃ

சின்னையா,
வட்டக்கொடை தோட்டம்

கே: என்னிடம் பணம் நிறைய இருக்கின்றது அதோடு திருமணம் செய்வதற்கு பெண்ணும் இருக்கின்றது இதற்கு என்ன செய்ய வேணடும்!

ப: பேசாமல் ஒரு தொகுதியைப் பார்த்து தேர்தலில் போட்டியிடுங்கள். கையிலுள்ள பணம் சூரியனைக் கண்ட பனி போல மறைந்துவிடும். பிறகு வேண்டுமானுல் நிம்மதிக்காக ஒரு கலியாணத்தையும் செய்து கொள்ளுங்கள்.

ஃ

அக்கரையூர் ஆதம்,
அக்கரைபபற்று

கே: "நான் மீண்டும் கல்வி அமைச்சராவது உறுதி" எனக் கூறியிருக்கிருரே திரு. கலுகல்ல?

ப: கூட்டு அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வருமென்று அவர் கூறவில்லையே. தான் மீண்டும் கல்வி அமைச்சராவது உறுதி என்றுதான் கூறுகிருர். அப்படியானுல் கூடு விட்டு கூடு பாயத் தயாராகிருரோ?

ஃ

வெ. சுப்பிரமணியம்,
கொட்டாஞ்சேனை.

கே: இவ்வரசாங்கம் பஸ், பாடசாலை பெற்ருேலியம், இன்சூரன்ஸ் அனைத்தையும் தேசியமயமாக்குவதில் வெற்றிகண்டமாதிரி பத்திரிகை மசோதாக்களில் மட்டும் ஏன் வெற்றிகாணவில்லை?

ப: இதற்கு இரு காரணங்கள் உண்டு. (1) பத்திரிகைகள் பறிபோகுமாயின் சனநாயகத்தின் அடிப்படை பாதிக்கப்படுவது. (2) ஒரு குறிப்பிட்ட பத்திரிகாலயம் அரசாங்கத்தை விட சக்தி வாய்ந்ததாக இருப்பது.

ஃ

ச. சுந்தரேஸ்,
வல்வெட்டித்துறை.

கே: இம்முறையாவது வட பகுதியில் ஒரு ஸ்தானத்தைத் தானும் கைப்பற்றுவதற்கு என். எம். பெரேராவினது லங்கா சமசமாஜக்கட்சி பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. இவர்களது மனக்கோட்டை தவிடு பொடியாகுமா?

ப: சமசமாஜிகள் சம அந்தஸ்து பற்றி கூச்சலிட்ட போதே அவர்களை நம்பி, அவர்களுக்கு ஒரு ஸ்தானம் கூட கொடுக்க மறுத்துவிட்டனர் தமிழ்பேசும் மக்கள். இன்றுதாஞ மக்கள் அவர்களை நம்பப் போகிருர்கள்? அவர்களின் மனக்கோட்டை வெறும் மணற்கோட்டை தான்.

ஃ

தருமரத்தினம், பண்டத்தரிப்பு.

கே: நாளுெரு பெண்ணைக் காதலிக்கிறேன். இதனுல் எனக்கு இரவில் நித்திரையே இல்லை. எனக்கு ஒரு வழி கூற முடியுமா?

ப: உடனடியாகத் தேர்தல் களத்தில் குதித்து தமிழரசுக் கட்சியின் வெற்றிக்காகப் பம்பரம்போல சுழன்று பாடுபடுங்கள். அதனுல் நிம்மதி ஏற்பட்டு நன்ருக நித்திரை வரும். காதலும் பூத்துக் குலுங்கும்.

ஃ

க. புஷ்பராணி, மண்டூர்

கே: ஏழைக்கும் பணக்காரனுக்குமுள்ள வித்தியாசம் யாது?

ப: பசி ஏப்பத்துக்கும் புளிச்சேப்பத்துக்கும் உள்ள வித்தியாசம்.

கே: பணம் பாதாளம் மட்டும் பாயுமென்ருல் பண்பு?

ப: பணத்தை யொட்டி பண்பும் இந்நாளில் மாறுவதுண்டு ஆனுல் இன்று பணத்தின் சக்தி பண்புக்கு இல்லையாதலின் பண்பு அவ்வளவு தூரம் பாயாது.

# தமிழ் காக்கத் தருணமிதோ

—'தேன்'—

வருகிறது! வருகிறது! பொதுத்தேர்தல்! எங்கள்
வண்ணத் தமிழ்காக்க தக்கதோர் தருணம்
ஒருசிலரே தமிழெனினும் உரமுடையதவன் நெஞ்சம்
ஓராயிரம் சிங்கத்தை எதிர்க்குமத யானை
திறமையினைக் காட்டுவதில் செந்தமிழன் என்றும்
சூரனென சூழுலக மேதையினம் கூறும்
பெருமையுறு பொன்மொழியை நெஞ்சகத்தில் தாங்கி
ஆற்றல்மிகு தமிழரசை ஏற்றமுறச் செய்வீர்!

தென்னிலங்கை தீவிலுறை செந்தமிழ மக்காள்!
தாய்மொழியைசிதைத்திடவேசிங்கமெனப்பாயும்
கன்நெஞ்சற் கடிவருடும் கயவரினம் கொட்டும்
கருத்திலலாப் பொய்யுரையை குழிதோண்டிப்
புதைத்து
கண்விழியின் நிகரொத்த வாக்குரிமை கொண்டு
கன்னல்நிகர்தமிழ்மொழியின்காவலர்கள்என்று
அன்னையவள் தமிழணங்கின் தளையறுக்கத் துடிக்குமு
ஆற்றலுறு தமிழரசை வெற்றிபெறச் செய்வீர்!

அற்பர்களாய் பொய்யர்களாய் அரசியலைச் சேரும்
ஆக்கித்தினம் பற்பலவாய் பொய்யுரைகள் கூறும்
நற்பெருமை—சுயநலத்தை நாடுகின்ற நீசர்
தந்திடுவார் மதுவதனை வாக்குகளைக் கேட்டு
விற்பதற்கோர் விலைபொருளா வாக்குரிமை அந்த
வீணர்களின் கண்திறக்க வைத்திடுவீர் சூடு
நற்பெரியீர் அருந்தமிழின் பொற்புடையீர்
நம்தமிழின் உயர்வுக்கு முனைந்திடுவீர் சேர்ந்து!




விற்பனையாகின்றன:
**G. C. E. வகுப்புக்குரிய புவியியல் நூல்கள்**
★ புதிய கலைச் சொற்களைக் கொண்டு G. C. E. பாடத்திட்டத்தை மட்டும் அடக்கி ஆக்கியவை.
★ வேண்டிய விளக்கப் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளவை.
★ பேராதனை பல்கலைக் கழகப் புவியியற் பேராசான் திரு. ஜோர்ஜ் தம்பையாபிள்ளை அவர்களது அணிந்துரை கொண்டவை.

உலகப் புவியியல் 6 - 80
இலங்கைப் புவியியல் [illegible] - 75

எழுதியவர்: க குணராசா B A (Hons)
(புவியியற் பகுதி, பேராதனை பல்கலைக் கழகம்)

விற்பனையாளர்:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# சகல தேசிய வாதமும் பௌத்த சிங்கள வாதமாகப் பரிணமித்து விட்டது

## சமசமாஜப் பிரச்சாரம் ஆதாரமற்றது

தமிழ்பேசும் மக்கள் தேசியவாதம் பேசிய கட்சிகளை நம்பிப் பல தடவைகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பினார்கள்—நட்டாற்றில்விடப் பட்டதுடன், தமிழ்பேசும் மக்களின் கூட்டுப்பலத்தையும் உடைத்தெறிந்தது ஐக்கிய தேசியக்கட்சி.

இருபத்தைந்து இலட்சம் தமிழ்பேசும் மக்களிற் சரி பாதித் தொகையினரை நாடற்றவர்கள்என்றுநாமம் சூட்டியது ஐக்கியதேசியக் கட்சி. இம்முயற்சிக்கு நம்மவரில் ஒருசிலரும் (தமிழ் காங்கிரசார்) துணை நின்றார்கள் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுத்தாளுக வேண்டும்.

### பிரித்தாளும் தந்திரம்

பிரித்தானிய ஆளவந்தாரிடம் கற்ற பாடத்தை-அரசியற் சாணக்கியத்தை-ஐ. தே கட்சி நல்ல முறையிற் பயன்படுத்தி வெற்றிகண்டது. அதற்கு நம்மவர்கள் பலியானார்கள். மலைநாட்டான்-மட்டக்களப்பான்-யாழ்ப்பாணத்தான் என்ற பிரிவினை வாதத்தை உருவாக்கியது ஐக்கியதேசியக் கட்சி தமிழ்த் தலைவர்கள் என்று அன்று கூறியவர்கள் இப்பிரிவினைவாத பிரித்தாளும் தந்திரத்தில் அள்ளுண்டனர் தமிழ்பேசுமினம் சிதறுண்டது. பலமிழந்தது உரிமையிழந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மை உருவம் முழுவடிவில் பகிரங்கமாக வெளியில் தெரியும்வரை தமிழ்த்தலைவர்கள் என்று அன்று அழைக்கப்பட்டவர்கள் ஐ. தே. கட்சியுடன் கூடிக் குலாவினர்; ஒட்டி உறவாடினர்.

ஐ. தே. கட்சியின் இரகசியத் திட்டத்தை தமிழரசுக் கட்சியினர் பகிரங்கமாக கூறினர். வரப்போகும் ஆபத்து என்ன என்பதைத் தெளிவுபடுத்தினார்கள் தமிழரசுவாதிகள். பிரிவினைவாத பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாகவேண்டாம் என்று அன்றைய தமிழ்த் தலைவர்களை வேண்டினார்கள் தமிழரசுக்கட்சியினர். யாரும் அன்று தமிழரசாரின் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை.

### தீர்க்கதரிசனம் பலித்தது

ஐ. தே. கட்சியின் பயங்கரவடிவம் வெளியிற் தெரிந்ததும தமிழரசாரின் தீர்க்கதரிசனத்தை மக்கள் மெச்சினார்கள். தேசியவாதம் பேசி தமிழ்பேசும் மக்களை பிரிவினைவாத பிரித்தளும் தந்திரத்தின்மூலம் அழிதொழிக்க முற்பட்ட ஐ தே கட்சியையும், அக் கட்சிக்குத் துணைபோனவர்களையும் மக்கள் விரட்டியடித்தனர்.

தேசியவாதம் பேசிய ஐ. தே. கட்சி தமிழர்களின் நிலத்தைப் பறித்தது உரிமையைப் பறித்தது. உழைப்பைப் பறிக்க முற்பட்டது பொருள்வளத்தை சிதைத்தது இதை தமிழ்பேசும் மக்கள் நன்கு உணர்நதனர்.

### சர்வதேச தேசியவாதம்

இதே நேரத்தில் தமிழ் பேசும் மக்கள் மத்தியி தேசியவாதம் பேசும் பிறிதொரு கும்பலும் இருக்கவே செய்தது வர்க்க அடிப்படையில் இவர்கள் தேசியவாதம் பேசினார்கள். இவர்களின் வர்க்கஒற்றுமைஎன்ற வறட்டுக் கூச்சலுக்குத் தமிழ் பேசும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் மயங்கினார்கள்.

ஆரம்பகாலத்தில் ஐ. தே. கட்சி எங்ஙனம் பரந்த முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் தேசியவாதம் பேசியதோ, அதே அடிப்படையில் வர்க்கக் கண்ணோட்ட சர்வதேசிய ரீதியில் தேசியம் பேசினார்கள் சமசமாஜ-கம்யூனிஸ்டுக் கட்சியினர் இவர்களின் பசப்பு வார்த்தையில் தமிழ்பேசும் தொழிலாளர்கள் மயங்கினார்கள்.

இந்த வர்க்கக் கண்ணோட்ட தேசியவாதிகளான சமசமாஜிஸ்டுகள் மீதும் கம்யூனிஸ்டுகள் மீதும் கவனமாக இருக்கவேண்டுமென்று தமிழரசுவாதிகள் எச்சரிக்கை செய்தார்கள். அப்படி எச்சரிக்கை செய்யப்பட்டசந்தர்ப்பத்திலெல்லாம் தமிழரசாரை வகுப்புவாதிகள் என்று வைதார்கள் இந்த வர்க்கக் கண்ணோட்ட தேசியவாதிகள். என்றாலும் தமிழரசார் இவர்களின் வறட்டுக் கூச்சல் கண்டு அஞ்சவில்லை.

### இரண்டும் தோற்றது

ஐ தே. கட்சி தனது சுயரூபத்தை 56ம் ஆண்டு காட்டியது. வர்க்க ஒற்றுமை பேசிய தேசியவாதிகளான சமசமாஜிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் தங்கள் சுயரூபத்தை 60ம் ஆண்டு காட்டினார்கள். மொழிச்சமத்துவம் என்று கூறியவர்கள் மெல்ல மெல்ல சிங்களம் மட்டும் என்றார்கள் தமிழ்பேசும் தொழிலாளர்களும்வர்க்க ரீதியில் தேசியவாதம் பேசியவர்களை விட்டு மெல்ல மெல்ல விலகினார்கள்.

முதலாளித்துவ தேசியவாதம் முதலிற் தோற்றது. வர்க்கரீதியிலான தேசியவாதம் முடிவிற் தோற்றது. முதலாளித்துவ தேசிய வாதம் தமிழ்பேசும் மக்களை முதலில் ஏமாற்றியது. வர்க்கரீதியிலான தேசியவாதம் ஈற்றில் ஏமாற்றியது.

சமசமாஜக் கட்சியினர் சுதந்திரக் கட்சியுடன் இணைந்ததின்மூலம் தொழிலாளவர்க்கத்திற்கே துரோகம்செய்தனர். மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களுக்காகப் பரிந்துபேசிய சமசமா

(9-ம் பக்கம் பார்க்க)

### பூங்குன்றன்

## அம்மானின் தே(ர்தல்)ச-சஞ்சார அறிவித்தல்

தமது கட்சி அலுவல்களைக் கவனிப்பதற்காகவும், வடக்குக் கிழக்கிலுள்ள தமது வேட்பாளர்-ஆதரவாளர்கள், வாக்காளர் முதலியோரை நேரடியாகக் கலந்தாலோசிக்கவும் நமது அப்பாக்குட்டி அம்மான் தே(ர்தல்)ச-சஞ்சாரம் புறப்பட்டுள்ளார். அவர் ஆங்காங்கே கிடைக்கக் கூடிய உரிசிகரமான தகவல்களை யெல்லாம் திரட்டித்தருவார். ஆகவே இப்பகுதியில் காலகண்டனாகிய நான் இனிமேல் தலைகாட்டுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வாசகப் பெருமக்கள் எனக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவார்களென நம்புகிறேன்.

—காலகண்டன்.

## 'தகுதியிலும் அறிவிலும் நான் தரம் குறைந்தவனல்ல'

## 'அறிவாளர்' கட்சிக்கு வந்துள்ள விண்ணப்பம்

அன்புள்ள அம்யான்,

தாங்கள் அமைக்கும் அறிவாளர் கட்சியில் என்னையும் சேர்த்துக்கொள்ளத் தவறவேண்டாம் என்று தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன் நமது கட்சியில், (என்னையும் கட்டாயம் சேர்த்துக் கொள்ளுவீர்கள் என்ற துணிவினால் நமது கட்சி என்று கூசாமல் எழுதிவிட்டேன்). சேர்ந்தள்ள—கடந்த இரு வாரங்களிலும் தாங்கள் குறிப்பிட்ட—விண்ணப்பதாரர்கள் ஏதோ தங்கள் தங்களுக்கேற்ப ஒவ்வோர் துறையில்'தகுதியும் திறமையும்'உடையவர்களாக விருக்கலாம்.

ஆனால், என்னுடைய திறமையையிட்டு நானே கூறுவதைவிட உள்ளூராட்சித் திணைக்கள 'பைல்'களை ஒருமுறை புரட்டிப்பார்க்கும் சந்தர்ப்பத்தை தங்களுக்கு நானே ஏற்படுத்தித் தருகிறேன். தயவுசெய்து பார்த்துவிட்டு என்னையும் உங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

உள்ளூராட்சித் திணைக்களத்திலுள்ள பைல்கள் எப்படி எனக்குக் கிடைக்கும் என்று நீங்கள் சிறிதளவும் சந்தேகப்படவேண்டியதில்லை. எமது ஆட்கள் ஆங்காங்கே உள்ளமையினால் தான் நான் இதுவரை 'கிடைத்தவரை லாபம்' என்ற கொள்கையில் அணுவளவும் நழுவாமல் இருந்து வருகிறேன்.

### அமைச்சர் வரவேற்பு

அமைச்சர்களைத் தமிழ் பகுதிகளுக்கு அண்டவொட்டாமல் தடுத்துக்கொண்டிருந்தபோது எனது காடைப் பட்டாளத்தின் உதவியுடன் அமைச்சர்களைத் தருவித்து. தமிழ் காக்க முன்னின்ற ஒரு தலைவரையும் அகால மரணத்துக்கு ஆளாக்கிய பெருமை எனக்குண்டு.

உள்ளூராட்சி மன்றங்களில் சில பல 'லீக்' வேலைகளைச் செய்ய 'எலி'கள் வளர்க்கப்படுவதுண்டு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அத்தகைய 'எலி'கள் என்னிடம் அதிகம் உண்டு. இதனால்தான் நான் ஏறத்தாழ அரைலட்சம் ரூபாயை ஏப்பமிட்டுவிட்டு அரசாங்கத்துக்குப் டிமிக்கிவைத்து விட்டேன்.

எனக்குரிய—பொதுப் பணத்தில் தேடிய—கணக்கற்ற சொத்துக்களின் கணக்குகளை எந்தக்கணக்காளரும் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் எச் சொத்தும் என்பேரில் கிடையாது (ஏப்பம்விட்ட தொகையை என்னிடம் பிடுங்கிவிட அரசாங்கத்தால் முடியாமலிருக்கிறது. இதற்காகவேதான் எனது சொத்துக்கள் எதுவும் என்பெயரில் இல்லை—இது இரகசியம்!)

பொதுவாக என்னிடம் ஒருவகையான வசீகர சக்தி இயல்பாகவே உண்டு. பெண்கள் ஆட்சிபீடமேறும் இக்காலத்தில்—எனது இத்தகுதி நல்லமுறையில் நமது கட்சிக்குப் பயன்படுமல்லவா?

### அநுதாபம் வேண்டாம்

அம்மான்,

நீங்கள் என்மீது ஏதோ அனுதாபம் காட்டி எழுதியிருந்தது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எலச்சன் ஆசை எனக்கு இல்லாமலில்லை தனிப்பெருந் தலைவர் போன்றாரின் உருட்டுப் புரட்டுவழி வகைகளிலாவது அனுபவம் பெறலாம் என்று கடைமையினாலும், ஏதாவது சில 'சில்லறைகள்' புரளும் என்று தோன்றியமையினாலும், முக்கியமாக கட்டுப்பணச் சலுகை கிடைக்கும் என்பதனாலுமே நான் உங்களுடைய 'அறிவாளர் கட்சி'யில் சேர முற்பட்டேன்.

கிழக்கு மாகாணத்திலுள்ள சில 'பெருந் தலைகள்' கால்சட்டையையே இன்னும் நம்புகின்றன அதனால் அப் பெருந்தலைகளின் பேராதரவு எனக்கு நிச்சயம் கிடைத்துவிடும். மற்றும்படி நான் சார்ந்துள்ள மதத்தைக் கூறியாவது சிலவோட்டுக்களை எனக்குச் சாதகமாகத் திருப்பிவிடலாம் என்ற நம்பிக்கையும் உண்டு. மற்றும்படி எனக்கு இந்த 'தமிழ் கிமிழ்' என்ற சொல்லுகள் எல்லாம் கட்டோடு பிடிக்காது.

எங்களூரில் புதிதாக ஒரு திட்டம் ஒன்றைத் தொடக்கியிருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் எனது கையில் ஓரளவு பசைப்பிடிப்பும் ஏற்பட்டுள்ளது. இதுதவிர நீங்கள் குறிப்பிட்டதுபோல் நான் யாருக்காகச் செல்வத்தைத் தேடி வைப்பது?

நாம் விட்டுவிட்டாலும் நமது 'அறிவுள்ள' மருமக்கள் நம்மைக் கைவிடப் போவதில்லை என்பது என்னவோ உறுதியாகிவிட்டது இதோ பாருங்கள் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும்—இரு மருமக்கள் நயக்கு விடுத்திருக்கும் விண்ணப்பங்களை.

—அம்யான்.


## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சிவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

# பதவிக்காக இனத்தை பணயம் வைத்தவர்கள்

## பழைய செயலை மறைத்துவிட்டு படி ஏறி வருகின்றனர்

மூதூர் தொகுதியில் ஆளும் கட்சியின் வேட்பாளராக ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத் போட்டியிடுகிறார் அல்லவா? அவருடைய கனவுகள் இதுவரை நனவாகி வந்ததில் ஆச்சரியமில்லை. தம்மினம் அழிந்தாலோ, மொழி அழிந்தாலோ, மதம் சிதைந்தாலோ அவர் இவற்றுக்காகக் கலங்குபவராகத் தெரியவில்லை.

கடந்த தேர்தலில் ஆளும் கட்சியுடன் சேர்ந்து ஆட்டம் போட்டார். எப்படியாவது ஒரு அரை மந்திரிப் பதவியாவது கிடைத்து விட வேண்டும் என்பதற்காக படாதபாடுகள் அத்தனையும் பட்டார். அவர் பாடுகள் வீண்பாடுகளாகப் போகாமல் இறுதியில் ஓரளவு வெற்றி கிட்டியது. சில நாட்களாவது அரை அமைச்சராக விருந்து விட்டார்.

மூதூர்தொகுதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சிங்களவர்களின் ஆதிக்கத்துக்குள் சிக்கி வருவதை ஜனுப் மஜீத் கண்டும் காணாதவர்போல் பேசாதிருந்து விடுகிறார். ஏனென்றால் இவர் சார்ந்தரான ஜனுப் மஜீத், வாக்காளர் பட்டியலில் ஏற்பட்டுள்ள சிங்கள வாக்காளர் வீக்கத்தையும் முஸ்லீம் வாக்காளர் தேக்கத்தையும், தமிழ் வாக்காளர் நீக்கத்தையும் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?

ஆளும் கட்சிக்குள் சேர்ந்திருப்பதனால் அக் கட்சியினாலோ, அல்லது கட்சியின் தூண்டுதலின் பேரிலோ நடைபெறும் எத்தகைய இனஒழிப்பு நடவடிக்கைகளையும் பார்த்தும் பாராமுகமாக இருந்து விட வேண்டியிருக்கிறது போலும்! அப்படிப் பார்க்கப் போனால் இனத்தையோ, மதத்தையோ, மொழியையோ காக்க இத்தகையோர் பயன்பட மாட்டார்கள் என்று மக்கள் கருதுவதில் தவறில்லையல்லவா?

போன்றவர்களை புறமுதுகிட்டோடச் செய்தனர். ஆகவே, மூதூர் தொகுதி வாழ் மூத்த குடி மக்களான தமிழ் பேசும் மக்கள் தங்கள் வாக்குகளை நன்கு சீர்தூக்கிப் பார்த்துத் தக்கபடி செலுத்துவார்கள்.

### கிழக்குத் தபால்

'தமிழ்' என்ற ஒரு வார்த்தையை உபயோகித்தால் சகல தமிழ் பேசும் மக்களையும் கவர்ந்திழுத்துவிடலாம் என்ற கருத்துக்கொண்டோ, அல்லது தேர்தல் கட்டுப் பணச் சலுகை கிடைக்குமே என்பதற்காகவோ ஒரு தேர்தல் காலத்தில் மட்டும் துளிர்விடும் கட்சியான தமிழ் காங்கிரசில் சேர்ந்துகொண்டு ஏமாற்ற எண்ணியிலே திரிவார்களானால் நிச்சயமாக இத் துன்ப காலத்தில் ஏதாவது ஒரு எதிர்ப்புக் கோஷத்தை எழுப்பியிருப்பார்கள். வெந்த உள்ளங்களின் வேதனையைப் போக்கும் ஆறுதல் வார்த்தைகளையாவது சொல்லியிருப்பார்கள்.

மொழிகாக்க உரிமை வேட்கை கொண்டு தமிழரசார் அணி இரட்டி அறப்போர் தொடுத்தார்கள். ஆணவ வெறி கொண்ட ஆட்சிபீடம் அகிம்சைவழிப்பட்டு அறங்காத்த தமிழ் பேசும் மக்களை அடித்து நொறுக்கி அவதிக்குள்ளாக்கியது. தமிழ்த் தலைவர்களை சிறைக்குள் வைத்து வாட்டியது. சிங்கள வெறிபிடித்த காடையர் கூட்டம், கட்டவிழ்த்து விடப்பட்ட யானைச் சேனைக் கூட்டம் கரும்புச் சோலைக்குள் புகுவது போல் புகுந்து தமிழ் பேசும் மக்களை வதை செய்தது.

## பிரதேச பேதத்தை வளர்த்தே தம்மை வளர்த்தவர்களை புறமுதுகிட்டோட்ட கேள்விக் கணைகள் தயார்?

கட்சி எஜமான்கள் இவர் மேல் சந்தேகம் கொண்டு விடக் கூடாதென்பதற்காக.

### சிங்களவர் வீக்கம்

இம்முறைத் தேர்தலில், இத் தொகுதி வாக்காளர்கள் பதினெட்டு சிங்கள வாக்காளர்களின் தொகை அதிகமாகியிருக்கிறது. முஸ்லீம்களின் அதிகப்படி வாக்காளர்களின் விகிதாசாரத்தைவிட சிங்கள வாக்காளர் வளர்ச்சி அதிகரித்துள்ளது. தமிழ் வாக்காளர் தொகை இம்முறைத் தேர்தலில் வெகுவாகக் குறைந்திருப்பதையும் காணக்கூடியதாகவிருக்கிறது.

ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டிருந்தவ

### ஏமாற்ற முடியுமா?

மூதூர் வாழ் தமிழ் பேசும் மக்கள் நேரடியாக சிங்கள ஆதிக்க வெறி அட்டகாசங்களுக்கு இலக்காக வருவதனால் அந்த ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பது இயல்பே. தமிழ் பேசும் மக்களை நெருக்கும் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கான நிவாரண வேலைகளை நன்குணர்ந்து தக்கபடி செயலாற்ற வல்லவர்கள்—இனத்துக்காக, மொழிக்காக, மதத்துக்காக, வாழும் பிரதேசத்துக்காக உழைக்கக் கூடியவர்கள்—தமிழரசுக் கட்சியினரே என்பதை இம் மக்கள் நன்குணர்ந்தமையினாலேயே வெறும் வாய்விச்சுக்காரர்களான திரு. சுந்தரலிங்கம் பவர்களிடம் மூதூர் தமிழ் பேசும் மக்கள் எச்சரிக்கையாகவே நடந்து வருகிறார்கள்.

### கல்குடா நல்லையா

நடந்த சில ஆண்டுகளாக தமிழ் பேசும் இனம் எண்ணற்ற துன்பங்களைக் கண்டு தவண்டு துடித்துக்கொண்டிருக்கிறது. படிப்படியாகப் புகுந்த சிங்களம் தமிழ் பேசும் மக்கள் தொண்டைக்குள் திணிக்கப்படுவதால் மென்மேலும் துன்பச் சுமையைக் கூட்டுகிறது.

'தலைவர்கள்' என்று மகுடமிட்டுக்கொண்டு, யாராவது தமிழ் பேசும் மக்கள் மத்தி

இந்த வேளைகளிலெல்லாம் எந்த விதமான சஞ்சலமுமின்றி, தானுண்டு தன் பாடுண்டு என்று, விலகி நின்றனர் சிலர். அத்தகையவர்களுள் திரு. வி. நல்லையாவும் ஒருவரே!

1960ம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் முடிவு வெளியாகி, மக்கள் மன்றத்திலிருந்து விரட்டப்பட்டதால் பூரண ஓய்வெடுக்க ஓடி ஒளிந்துகொண்டவர் திரு. நல்லையா. இன்று தேர்தல் களத்திலே புகுந்து, விடுதலைவேட்கையும், தமிழ் ஆர்வமும், இன உணர்ச்சியும் கொண்டு, தமிழரசே மூச்சாகச் செயலாற்றும் வீரர்கள் நிறைந்த கல்குடா மக்களின் முன் வாக்குகளைக் கோரி வணங்கிவந்திருக்கிறார்.

### எச்சிலா தேவை?

ஒருசில கல்லூரிகளையும், சில ஆசுப்பத்திரிகளையும் கட்டி முடித்துவிட்டால் போதும் என்று அரசியல் அரிச்சுவடி தெரியாதவர்கள் கூறி மழுப்பி திரு. நல்லையா போன்றவர்களின் பண்டைய சேவைகளைப் புகழலாம்.

தமிழ்பேசும் இனம் இன்று வேண்டி நிற்பது சிங்கள எஜமானர்களின் எச்சில் இலைகளிலிருந்து விழும் எலும்புத் துண்டுகள் அல்ல.

இனத்தின் மேன்மை, மொழியின் உரிமை, உறைடத்தின் மானம் முதலியவற்றையே தமிழ் பேசுவோர் தங்கள் உயிரெனக் கருதுகின்றனர். இவற்றுக்காக என்றென்றும் பாடுபடும் இயக்கத்தில் இணைந்து அறப்போர் தொடுக்கவே தமிழ்பேசும் சமுதாயம் துடித்துக்கொண்டிருக்கிறது.

ஆளும் கட்சியை ஒட்டியிருந்ததனால் கிடைத்த பதவியையே அன்று பறிகொடுத்துவிட்ட ஒருவரை கல்குடா வாழ் தன்மானமறவர்கள் எக்காலத்திலும் தங்கள் பிரதிநிதியாக ஏற்கப்போவதில்லை என்பது உறுதி.

### பேதம் செய்தோர்

தமிழ்பேசும் சமுதாயம் பிரதேசபேதம், சாதிமதபேதம், வர்க்கபேதம் ஆகிய நோய்களைக் களைந்தெறிந்துவிட்டு ஓரே இனமாக ஐக்கியப்பட வேண்டும் என்று, அதற்கான பணியிலீடுபட்டுக்கொண்டிருந்த வேளையில், அவர்கள் ஒன்றுபட்டுவிட்டால் தங்கள் குட்டுக்கள் அம்பலமாகி, அரசியல் அனாதைகளாகி விடுவோமே என்ற அற்ப ஆசையால், பிரதேச பேதத்தை தங்கள் மூலமந்திரமாகச் செபிக்க ஆரம்பித்தவர்கள் இவர்கள்.

'யாழ்ப்பாணத்தான்—மட்டக்களப்பான் என்ற பேதத்தையே தங்கள் தாரகமந்திரமாக ஜபித்துக்கொண்டிருந்தவர்கள், இன்று யாழ்ப்பாணத்தவரான திரு. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரசில் ஒட்டிக்கொண்டு தேர்தல் களம் நோக்கி புறப்பட்ட காரணம் யாதோ?' என்று கல்குடா மக்கள் திரு. நல்லையாவின் ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டேயுள்ளனர்.

### எங்கே போயிருந்தீர்கள்?

யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திடம், ஐயா இவ்வளவு காலமும் எங்கே போயிருந்தீர்கள்? 1961ம் ஆண்டு தமிழ் பேசும் இனமே இரண்டறக் கலந்து உரிமை வேட்கைக் குரல் எழுப்பியபோது உங்கள் தலைகறுப்பையே காணோமே! 'தமிழ்' என்று கூறி இனியும் எங்களை ஏமாற்ற எண்ணமா?' என்று கேள்விக் கணைகளை அள்ளி வீசுகிறார்களாம்; அதேபோன்ற கேள்விகளை

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இலக்கிய மேதை மறைந்தார்

தமிழ்ப் பேராசானும் சைவப் பெரியாருமான திரு. சுப்பையா நடேச பிள்ளை கடந்த 15-ம் திகதி இரவு காலமானார். அன்னாரின் இழப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவேரியாற்றின் எழில் சூழ்ந்த தஞ்சை மாநகரில் பிறந்த திரு நடேசபிள்ளை திருச்சிராப்பள்ளி அர்ச் சூசையப்பர் கல்லூரியில் கல்வி பயின்று 1916-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக கலையியற் பட்டதாரியாகச் சித்தியடைந்தார். 1918-ம் ஆண்டு பி. எல். பட்டதாரியாகச் சித்தியடைந்த திரு. நடேசபிள்ளை தஞ்சாவூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகச் சில ஆண்டுகள் தொழில் புரிந்தார். இக் காலத்தில் தஞ்சை ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

1923-ம் ஆண்டு இலங்கை வந்த திரு. நடேசபிள்ளை 1924-ம் ஆண்டு பரமேசுவரக் கல்லூரி முதல்வராகப் பதவி பேற்றார். சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மகளான சிவகாமசுந்தரியை 1926-ம் ஆண்டு வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். 1929-ம் ஆண்டு சேர். பொன் இராமநாதனுடன் இலண்டன் சென்று திரும்பினார்.

1934-ம் ஆண்டு திரு. நடேசபிள்ளை அரசியல் உலகில் பிரவேசித்தார். 16 வருடங்கள் தொடர்ந்து தேசிய சபையில் உறுப்பினராகவிருந்தார். பின்னர் 1952-ம் ஆண்டு முதல் நாலு ஆண்டுகாலம் பாராளுமன்ற உறுப்பினராகவும், அக்காலத்தில் தபால் ஒலிபரப்பு அமைச்சராகவும் இருந்தார்.

கல்வித் துறையிலும் இலக்கிய உலகிலும் திரு நடேசபிள்ளை அவர்களின் சேவை தலைசிறந்து விளங்கியது. இவர்கள் அண்மையில் வெளியிட்ட சாகுந்தல வெண்பா இலக்கிய உலகில் தனித்துவம் பெற்றதாகும். இவர் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் ஒருங்கே கௌரவிக்கப்பட்டார்.

தமிழ் நாட்டில் பல இலக்கிய விழாக்களுக்கும், சமய நிகழ்ச்சிகளுக்கும் தலைமை தாங்கி சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் பிறந்தவராகிலும் ஈழத்தவராகவே சுணிக்கப்பட்டு வந்தார். தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்கள் கூறியது போன்று 'தமது வாழ்நாளின் பெரும் பகுதியை இலங்கையிலேயே திரு நடேசபிள்ளை செலவழித்துள்ளார்.'

திரு நடேசபிள்ளை அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கியதன் மூலம் இலங்கைப் பல்கலைக் கழகம் பெருமை பெற்றுள்ளது.

திரு. வ. நவரத்தினம் அவர்கள் கூறியது போன்று, 'தமிழ்லக்கிய உலகிற்கு திரு. நடேசபிள்ளை அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு தமிழிலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பணிகளை தமிழுலகம் மறக்க முடியாது. தமிழ்ப் பெரும்புலவர்களோடு சமமான இடத்தைப் பெறத்தக்க அளவிற்கு அவர் உழைத்திருக்கிறார்.'


## காய்கறி விதைகள்-பூக்கள்

இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும்
அன்றலர்ந்த மலர்கள்—காய்கறி விதைகள்
விநியோகிப்பதில் 23 வருடங்களாகப் பிரசித்திபெற்ற நிலையம்
எஸ். ஏ. பெர்னாண்டோ
23 ஆண்டுகளாக நம்பிக்கைக்கு பிரசித்தி பெற்று ஈடிணையற்று விளங்குகிறது.
எல்லோரும், எஸ். ஏ. பெர்னாண்டோவிடமிருந்து ஓடர் செய்வதற்குக் காரணம்.
அவர்களது மதிப்பு என்றும் நிலைத்திருப்பதாகும்.
தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:
எஸ். ஏ. பெர்னாண்டோ,
த. பெ. இலக்கம் 16, பழைய பஜார்,
நுவரெலியா.
தொலைபேசி : 283 தந்தி : பா...

# அரசியல் விபசாரிகளின் ஆசை பலிக்காது

## பதவி வேட்டைக்காரரின் புலம்பல்களுக்கிடமில்லை

## 'தமிழ்' என்று கூறி இனி ஏமாற்றவே முடியாது

'ஒரே கொள்கை, ஒரே குறிக்கோள், ஒரே இலட்சியம் ஆகியவற்றுடன் அன்று முதல் இன்று வரை செயற்பட்டு வரும் தமிழரசுப் பதிவிரதையுடன் அரசியல் விபசாரிகள் பொருதத் தலைப்பட்டு விட்டனர். 'தமிழ்' என்ற மூன்று எழுத்தையும் தங்கள் குருதியுடன் கலந்து விட்ட தமிழ் பேசும் மக்கள் மத்தயில், 'தமிழ்' என்ற பெயரைக் காட்டி ஏமாற்று வித்தை புரியும் எத்தர் கூட்டம் விளையாடத் தலைப்பட்டு விட்டது இவ்வெத்தர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் நல்ல பாடம் படிப்பிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.'

இவ்வாறு மட்டக்களப்பு அரசடியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. செ. இராசதுரை கூறினார்.

1949-ம் ஆண்டு தோன்றிய தமிழரசுக் கட்சி கடந்த 16 ஆண்டு காலமாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கொள்கை விளக்கும் பொதுக் கூட்டங்களை பல்லாயிரக் கணக்கில் நடாத்தி வந்திருக்கிறது. இந்நாட்டிலுள்ள பல்வேறு அரசியற் கட்சிகளும் காலத்துக்குக் காலம் தங்கள் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மாற்றிக் கொள்ளுவதுண்டு காலத்தையொட்டியும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி மாறிக் கொள்வதாலும் அக்கட்சிகள் நடாத்தும் பொதுக் கூட்டங்களில் அடிக்கடி புதிய புதிய கருத்துக்கள் மோதுவதுண்டு. ஆனால், தோன்றிய காலம் முதல் தன்னுடைய இலட்சிய நோக்கில் இம்மியளவும் மாறாது, ஒரே உறுதியான கொள்கையுடன் செயற்படும் தமிழரசுக்கட்சியின் கொள்கை விளக்கங்களைக் கேட்க வெள்ளம்போல் தமிழர் கூட்டம் என்றும் கூடுவது அரசியல் வரலாற்றிலே ஒரு அதிசயத்தையே காட்டுகிறது.

கடந்த 16-ம் திகதி சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு அரசடியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கொள்கை விளக்கக் கூட்டத்திலும் பல்லாயிரம் மக்கள் திரண்டு நின்ற காட்சி மெய் மறக்க வைத்தது.

இக் கூட்டத்துக்கு நெல் அளவைத் தொழிலாளர் சங்கத்தின் பொருளாளரான திரு செ.ரூஸ் தலைமை தாங்கினர்.

மட்டக்கப்பின் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரும் இன்று மட்டக்களப்புத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுபவருமான திரு. செ. இராசதுரை உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

### விபசார இயக்கமல்ல

"இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள், இந்



திரு. செ. இராசதுரை

நாட்டில் வாழும் பெரும்பான்மைச் சமூகத்தவர்களான சிங்களச் சகோதரர்களுடன் சரிநிகர் சமானமாக இணைந்து வாழ வேண்

**நமது விசேட நிருபர்**

டும் என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்பட்டு வருவது தமிழரசுக் கட்சி. சந்தர்ப்பவாதத்தினுல் நேரத்துக்கு நேரம் வெவ்வேறு கோலம் காட்டி சந்தர்ப்பத்துக்கேற்றபடி சதுராட்டம் போடும் அரசியல் விபசார இயக்கமல்ல தமிழரசுக் கட்சி.

## மட்டக்களப்பில் நடந்த மாபெரும் கூட்டம்

"இந்நாட்டிலே உள்ள பல அரசியற் கட்சிகள் பதவி பெறும் ஒரே நோக்குடனேயே சில சுயநலத் தலைவர்களால் ஆக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மக்களிடத்திலே தோன்றும் உணர்ச்சிகளைத் தமக்குச் சாதகமாக மாற்றி அமைத்துக்கொண்டு, ஆளும் கட்சியை அண்டி அமைச்சர் பதவி ஒன்றினையும் பெற்று, தன்னலத்துக்காகத் தம்மினத்தையே விலை கூறி விற்று வந்த எத்தனையோ தலைவர்களை நாம் கண்டிருக்கிறோம். அவர்களைத் தமிழ் பேசும் மக்கள் பொது வாழ்விலிருந்து ஒதுக்கித் தள்ளி விட்டனர்.

"வெறும் பதவியையே நோக்காகக் கொண்டு அரசியல் விபசாரம் புரியும் பாத்தையர் கூட்டம் ஒரே கொள்கை, ஒரே இலட்சியம், ஒரே குறிக்கோள் என்ற ஒரே நோக்குடன் இயங்கும் பதிவிரதை நிகர்த்த தமிழரசுக் கட்சியுடன் பொருதத் தலைப்பட்டுவிட்டது.

### காங்கிரசின் வேடம்

தமிழ், தமிழ் என்று தம் தாய் மொழியைக் காக்கத் தலைப்பட்டுள்ள தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனத்தின் இரத்தத்துடன் கலந்து விட்டது 'தமிழ்' என்ற அமிழ்தான வார்த்தையை வைத்தே தமிழ் பேசும் இனத்தை மயக்கி விடலாம் என்ற நோக்கோடு தமிழ் காங்கிரஸ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தலைகாட்டத் தலைப்பட்டுள்ளது. இத்தன்னலக் காங்கிரசுக்குத் தன்மானமே பெரிதென வாழும் தமிழ் பேசும் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்பது திண்ணம்."

### செல்லாக் காசுகள்

மூதவை உறுப்பினரான திரு. மு. மாணிக்கம் உரை நிகழ்த்துகையில், "மக்கள் மத்தியிலே செல்லாக் காசுகளாக்கப்பட்டு மூலை முடுக்குகளுக்குள் ஓடி ஒளித்துக் கொண்ட சில அரசியற் கோமாளிகள் இன்று தேர்தல் அரங்கத்திலே தங்கள் பழைய 'பகடி'களைக் காட்ட முன்வந்து விட்டனர். இக் கோமாளிகள் தேர்தற் காலத்தில் மட்டும் தான் வேடமணிந்து வேடிக்கைக் காட்டுவார்கள். வாக்காளர்களின் முடிவைக் கண்டதும் அடுத்த தேர்தல் வரை ஏதாவது ஒரு மூலையில் முடங்கிக் கொண்டு குறட்டை விடுவார்கள்.

"தமிழரசுக் கட்சி ஒன்று மட்டுமே தமிழ் பேசும் இனத்தை நல்வழியில் இட்டுச் சென்று வந்துள்ளது இனிமேலும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்ற பணி புரிய தமிழரசுக் கட்சி ஒன்றுல் மட்டுமே முடியும் என்பது இந்நாடு அறிந்த உண்மை' என்று கூறினர்.

### காட்டிக்கொடுக்கவில்லை

பட்டிருப்பு முன்னுள் உறுப்பினரும் இன்றைய தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி வேட்பாளருமாகிய திரு. சி. மூ இராசமாணிக்கம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

"தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விரும்பியிருந்தால் ஆளும் கட்சிக்கு வால் பிடித்து, அதன் மூலம் அமைச்சர் பதவிகளைப் பெற்று சொகுசாக வாழ்ந்திருக்க முடியும்.

"இனத்தைக் காட்டிக் கொடுக்கும்பணியைத்தமிழரசார் செய்திருந்தால் ஹோமகமைச் சிறைக் கூடத்தில் சிறைப்பட்டிருக்க வேண்டியதில்லை. சிங்கார வாழ்வு அவர்களுக்குக் கிடைத்திருக்கும். கொண்ட கொள்கையை இம்மியளவும்



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

விட்டுக் கொடுக்காத தலைவர்களை நாம் பெற்றிருந்தமையினுல்தான் இன்றும் தமிழ் பேசும் இனம் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

### நாயின் உறக்கம்

"நடுத்தெருவிலே ஒரு சொறி நாய் படுத்துக் கிடக்கிறது. பெரிய லொறிகள் கடபுடா சத்தமிட்டு அத்தெருவால் சென்றும் அந்நாய் தனது உறக்கத்தைக் கலைக்கவில்லை. இரு பெரிய மோட்டார் வண்டிகள் 'டணர்' என்ற சத்தத்துடன் அந்நாயருகில் மோதிக்கொண்டன. துவிச்சக்கர வண்டியில் சென்ற ஒரு பையன் இந்நாயின் அருகில் 'தடார்' என விழுந்து ஓலமிட்ட பொழுதும் நாய் எழுந்து பார்க்கவில்லை.

எங்கிருந்தோ ஒரு எச்சில் இலை தெருவில் வந்து விழுந்ததும் அந்நாய் எழுந்து ஓடிச் சென்று சோற்றுப் பருக்கைகளைப் பொறுக்கி உண்ணத் தலைப்பட்டது. இதே போன்று தான் தமிழ் பேசும் இனத்தை இத்தனை காலமும் எண்ணற்ற பிரச்சினைகள் எழுந்துவாட்டின. அவை எவற்றையேனும் ஏறெடுத்தும் பாராதிருந்துவிட்டு இன்று தேர்தல் என்ற சப்தம் கேட்ட உடனேயே எச்சில் இலைக்காக ஏங்கிய நாய் போன்று எழுந்தோடி வந்துள்ளனர் சிலர்".

16-1-65-ல் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு. அற்புதராசா ரூஸ் மேற்கண்டவாறு கூறினர்.

## மக்கள் குரல்

### காத்திடுவோம் திருமலையை

தண்டமிழர் தலைநகராம் திருகோணமலையின் சரித்திரத்தில் 1952ம் ஆண்டு தேர்தல் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி தமிழ் பேசும் இனத்தின் மத்தியிலே ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது காங்கேசன் துறையில் தமிழரசுத்தந்தை திரு சா. ஜே வே. செல்வநாயகம் அவர்களை சில சுயநலமிகள் தோற்க வைத்த போது கூட திருமலையில் மறைந்த மாபெருந்தலைவர், அமரர் ந. இ. இராஜவரோதயம் அவர்களைத் தெரிவு செய்து தங்கள் மொழிப்பற்றையும், இனப்பற்றையும் எடுத்துக் காட்டியவர்கள் திருமலை மக்கள். அன்றிலிருந்து இன்று வரை திருமலை தமிழரசுக் கோட்டையாக இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ மாட்டார்கள்.

எனினும் இன்று நேற்று உருவான சிலர் திருமலையைத் தமதாட்சியில் கொண்டு வரும் பொருட்டு முயன்று, வருகின்ற தேர்தலையும் அதற்காகப் பயன்படுத்த முன்வந்திருக்கிறூர்கள். எனவே இந்த நேரத்தில்தான் திருமலை மக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். திருகோணமலையை இதுகால வரையிற் தமிழ்க் குலத்தின் விடுதலைக் களமாக்க் காப்பாற்றி வந்த திருமலை மக்கள் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் திருமலைத் தமிழரசு வேட்பாளர் திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களைத் தெரிவு செய்வதன் மூலம் தங்கள் இன உணர்ச்சியை வெளிப்படுத்துவார்கள் என்றே நம்புகிறோம்.

—மு. சந்திரசேகரம், திருகோணமலை.

### பண்பில்லாப் பேச்சு

தீவுப் பகுதியில் வாழும் ஆண்களும் பெண்களும் தமிழர் பண்பாடு எத்தகையது என்பதை நன்குணர்ந்து வாழ்பவர்கள். எழுத்து வாசனை அற்றவர்களாய் இருந்தாலும் புத்தி நுட்பம் மிக்கவர்கள். மாற்றானையும் தன் உடன் பிறந்தவனுகக் கருதுபவர்கள். பிறர் இடத்தில் குறைகாண விளையாது நிறைகாண்பவர்கள்.

"அகழ் வாரைத் தாங்கும்
நிலம் போலத்—
தம்மை இகழ்வாரைப்
பொறுத்தல் தலை"

என்ற வள்ளுவப் பெருந்தகையாருடைய குறளுக்கமைய வாழ்பவர்கள். இத்தகை பெரு மக்கள் படித்தும் பண்பற்றவர்கள் கூறும் வசை மொழிகளுக்கு ஒரு நாளும் பயந்துவிட மாட்டார்கள்.

28-12-64ல் யாழ் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உயர்திரு எஸ். ஆர். கனகநாயகம், நியாயவாதி அவர்கள் தீவுப் பகுதி மக்களைப் பற்றிக் குறைவாகப் பேசினராம். படித்தும் பண்பாடில்லாமல் பேசுபவர்களை உலகம் வெறுக்கும் என்பது அறிஞர்கள் கண்ட உண்மை என்பதை அன்னர் அறியாதிருப்பின் இனிமேலாவது அறிந்து நன்னெறியில், வள்ளுவன் காட்டிய வழியில் வாழ்ந்து நாட்டு மக்களுக்கு நற்சேவை செய்வாரென எதிர்பார்க்கின்றோம்.

'நிலவன்'

கொழும்பு.

**உங்கள் கவலை என்ன?**

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினுலும் மந்திர சக்தியினுலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருந எண்ணெய் காரியாலயம்

கம்பளை.

**மங்கையர் சங்கம்**

அடுத்த வாரம் வெளிவரும்

# மங்கும் தீபாவளி பொங்கும் விந்தை

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களும் நானும் நிகழ்த்திய உரைகளினைப் பற்றிக் கலந்துரையாடும்பொழுது எங்களிடம் அன்பர்கள் சில ஆய்வு வினாக்களை வினவிய தோடமையவில்லை.. கலந்துரையாடலிலே சொல்லப்புகுஞ் சில பாய்ந்தன. 'கல்கியைப்பற்றித் திறனாய்வு நடத்துதற்குப் பல்கலைக்கழகம் ஏன் முற்படவேண்டும்? கல்கி நிலைத்து நிற்கத் தக்க சிறந்த இலக்கியப் படைப்புக்களை—தமிழ் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க படைப்புக்களைத் தந்திருக்கிறாரா? அவர் தமிழ்ப் புலமை நிறைந்தவரா? அவரைப் போற்றுதற்குப் பேராசிரியர்கள் ஏன் உடன்படல்வேண்டும். திரு. வி. க., மறைமலையடிகள் போன்ற தமிழ்க்கடல்களை விட்டு விட்டுக் கல்கியை ஏன் முதன் முதலில் போற்ற வேண்டும். செந்தமிழை வளர்ப்பதா கொச்சைத் தமிழைச்—சாம்பார்த் தமிழை—அம்மாமித் தமிழை, ஒப்புவதா தமிழ்ப் பேரறிஞர்களின் கடன்?...' இவ்வாறு இரண்டொருவர் சொற்களைமாறி பொழிந்தார்கள்.

இடைவேளைக்குரிய நேரம் குறுக்கிட்டதால் கலந்துரையாடல் மேலும் 'சூடுபிடிக்காமல்' நின்றுவிட்டது. மலேசியா வானொலி இந்தியத் துறைத் தலைவர் திரு. இரா. பாலகிருஷ்ணன் அவர்கள் இடைவேளைக்குப் பின் தலைமை தாங்கினார். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழில் பி. ஏ. (ஆனசு) பட்டம் பெற்றவர். தமிழ் ஆர்வமும் முற்போக்குத் துடிப்பும் நிறைந்தவர். வானொலியில் செந்தமிழ் நாடோறும் ஒலிக்கப் பெரிதும் உழைப்பவர். 'கல்கி பற்றிய கருத்தரங்கு உரைகளை கோலாலம்பூர் வானொலி நிலையமும் சிங்கப்பூர் வானொலி நிலையமும் ஒலிபரப்பும்' என்று தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். இவருடைய தலைமை உரையின் பின்னர் பேராசிரியர் தனிநாயக அடிகளார் 'கல்கியின் வரலாற்று நாவல்கள்' எனும் பொருள்பற்றி ஆய்வுரை ஆற்றினார்.


### கல்கியின் நாவல்கள்

பேராசிரியர் தனிநாயக அடிகளாரின் உந்துதலாலும் உதவியாலுமே மலாயாப் பல்கலைக் கழகத்தில் இக்கருத்தரங்கம் நடைபெற்றது என்பதை யாவரும் அறிவர். ஓயாது செய்யும் தமிழ்ப் பணிகளுக்கிடையில் கல்கியின் வரலாற்று நாவல்களையும் படித்துச் சிறந்த கருத்துரையை அவர் வழங்கி அவையோரை மகிழ்வித்தார்.

கடைசி ஆய்வுரையைச் சிங்கப்பூர் தேசிய பண்பாட்டுக் கழகப் பதிப்பாசிரியர் திரு. வை. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்த்தினார். இவர் தம் ஆய்வுரைக்குக் 'கல்கியின் வரலாற்று நூல்கள்' எனும் பொருளை எடுத்துக்கொண்டார். அமைதியாகவும் அழகாகவும் நிகழ்ந்த அவருடைய உரைக்குப்பின் கலந்துரையாடல் இடம்பெற்றது மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. எம். துரைராஜ் அவர்களின் புதுமையான நன்றி உரையுடன் கருத்தரங்கு நிறைவெய்திற்று. திரு. துரைராஜ் அவர்கள் கருத்தரங்கைச் சிறப்புற நடத்துதற்குத் தம்மோடு கூடித் தம்மிலும்கூட உழைத்த மலாயாப் பல்கலைக் கழகத்துணை விரிவுரையாளர் திரு. ச. சிங்காரவேல் அவர்களின் அருந்தொண்டுகளுக்கு நன்றிகூற முடியாதென நவின்று தம் உரையை முடித்தார்.

### தமிழ் ஒளி

கல்கிக் கருத்தரங்கு நடைபெற்ற நாளன்று மாலைப் பொழுதில் ஒரு கலை விழாவும் மலாயாப் பல்கலைகழகத்தில் நடைபெற்றது. மலாயாப் பல்கலைக் கழகத்திலே இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இவர்கள் தமிழை ஓம்புதற்கு மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரவை ஒன்றினை நிறுவித் திறம்படத்தொண்டாற்றி வருகின்றனர்; ஆய்வுரைகள், கருத்தரங்குகள், கலைவிழாக்களையும் நடத்தித் தமிழை வளர்க்கின்றனர். ஆண்டுதோறும் 'தமிழ் ஒளி' எனும் ஏட்டினையும் எழில் பொங்க வெளியிடுகின்றனர். இவர்களுடைய தமிழ்ப் பேரவையே இந்தக் கலை விழாவை நடத்திற்று. தீபாவளியைக் கொண்டாடுதற்குத்தான் இக்கலைவிழா ஒழுங்கு செய்யப்பட்டது.




## (10)

### கார்த்திகை விளக்கீடு

தீபாவளி வட இந்தியாவிலேதான் அதன் பெயருக்கேற்ப 'ஒளிவரிசை' காட்டும் நாளாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்திலே கார்த்திகை விளக்கீடே ஒளிவரிசைத் திருநாளாகும். இத்திருநாட் கொண்டாட்டம் தமிழகத்தில் எப்பொழுது தொடங்கியது என்று அளவிட்டுக்கூறமுடியாத பெரும் பழைமையுடையது திருஞானசம்பந்தர் இதன் பழைமையைப் புலப்படுத்துதற்கு இதனைத் 'தொல்கார்த்திகை நாள்' என்று குறிப்பிடுகிறார். தென்னாட்டின் இக்கார்த்திகை விளக்கீடே வடநாட்டின் தீபாவளிக்கு முன்னோடி என்பதை அறிஞர் யாவரும் ஏற்றுக்கொள்வர்.

### தீபாவளிக்கு எதிர்ப்பு

தமிழ்நாட்டுக் கார்த்திகை விளக்கீட்டின் பின் வடநாட்டிலே தோன்றித் தமிழ்நாடு புகுந்த தீபாவளி தமிழ் நாட்டிலே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கார்த்திகை விளக்கீட்டை மறைத்து ஒதுக்கித் தமிழரின் தன்மானத்தையும் தாக்கும் உயர்நிலையை அடைந்தது. காவேரியையும் வையை ஆற்றையும் மறைத்துக் கங்கையைத்தனித்து உயர்த்திற்று. இதனால் இதன் ஆட்சியைத் தமிழகத்திலிருந்து விரட்டுதற்குச் சுயமரியாதை இயக்கத்தினரும், தனித்தமிழ் அணியினரும் பகுத்தறிவுப் பாசறையினரும் முயன்றனர். இவர்களின் முயற்சியால் தமிழகத்திலும் இலங்கையிலும் தீபாவளிக் கொண்டாட்டம் பொலிவிழந்து மங்கி வருகிறது எனினும், மலாயாவிலே தமிழர் கொண்டாடும் திருநாள்களில் தீபாவளியே பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது மலாயர், சீனர் முதலிய பிற இனமக்களைத் தம் வீடுகளுக்கு அழைத்து விருந்து நல்கும் நாளாகவும் இதனைத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர். இத்தகைய சூழ்நிலை மலாயாவில் இருப்பதாலேயே மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையினரும் தீபாவளிக் கலைவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

### பிற இனத்தவர் களிப்பு

அன்று அவர்கள் கொண்டாடிய கலைவிழாவிலே இசை நிகழ்ச்சிகளும், நடன நிகழ்ச்சிகளும் சிறப்பிடம் பெற்றன. பல்கலைக்கழக மாணவர்களும் மலாயாத் தமிழ்க் கலைஞர்கள் சிலரும் கலைவிழாவிலே பங்குகொண்டனர். கோலாலம்பூரிலுள்ள தமிழ் மக்கள் தங்கள் குடும்பங்களுடன் திரண்டுவந்து கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர் பல்கலைக்கழகத்திலே ஆசிரியர்களாகப் பணி ஆற்றும் பல இனமக்கள் தமிழ்க் கலைகளைச் சுவைத்தற்கு இக் கலைவிழா பெருவாய்ப்பு நல்கிற்று.

மலாய்மொழிப் பேராசிரியர் எனக்கு அருகில் இருந்து கலை நிகழ்ச்சிகளை நன்கு சுவைத்தார். அவருடைய சுவைத் திறன் இடையிடையே அவர் கூறிய கருத்துரைகளாலும் எழுப்பிய வினாக்களாலும் நன்கு புலனாயிற்று.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் இரண்டாம் பருவம் ஒக்ரோபர்த் திங்கள் கடைசிக் கிழமையில் முடிவடையும். இதனையடுத்து மூன்று கிழமை விடுமுறை காலமாக இருக்கும். இந்த விடுமுறை காலத்திலே ஓர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுதற்கு நாங்கள் ஒழுங்கு செய்தோம். தமிழைச் சிறப்பாகக்கற்கும் மாணவர்கள் எண்மரையும் அழைத்துக்கொண்டியானும் துணைவிரிவுரையாளர் திரு. சிங்காரவேல் அவர்களும் மலாக்காவுக்குச் சென்றோம்.

### மலாக்காச் செட்டியார்கள்

'மலாக்காச் செட்டியார்' என்று வழங்கப்படுபவர்களை மலாயாவிலுள்ள மக்கள் யாவரும் அறிவர். மலாக்காவிலே நான்கைந்து நூற்றாண்டுகள் தொடர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் மக்களாகிய இவர்களுடைய வாழ்க்கையையும் வரலாற்றையும் ஆய்வதற்கே நாங்கள் சென்றோம்.

மலாயாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் மிகப் பழங்காலந் தொட்டே நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. தமிழர்களின் சமய நெறியும் பண்பாடும் கலையும் இந்து சீனாவிலும், இந்தோனிசியாவிலும் பரவி நிலைத்து விளங்குவதை இன்றுங் காணலாம்.




## தமிழ் - முஸ்லீம் தலைவர்கள்

# ஒரே அணி சேர்ந்தால் வெற்றி நிச்சயம்

## வரம்பு கட்டி பயிர் வளர்த்தால் விளைச்சல் கெடப் போவதில்லை

வயலுக்கு வரப்புகட்டி வேளாண்மைச் செய்வதால் பயிர் சேதமுறப்போவதில்லை. அதேபோல் எமது இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, சிறக்க தனியான ஒரு அரண் அமைத்துக் கொள்வதால் தேசியம் அழிந்துவிடப் போவதில்லை.

இலங்கையில் வாழுகின்ற முஸ்லீம்களும் தமிழர்களும் தொன்றுதொட்டே மொழியால் ஒன்றுபட்ட இனமாக இன்று வரையும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்; இனிமேலும் வாழப்போகிறார்கள்.

சிறிது காலத்துக்கு முன் இங்கு வாழக்கூடிய முஸ்லீம்களின் தாய்மொழி எது என்ற முரணான, அர்த்தமற்ற கோமாளிக் கூத்தை ஆரம்பித்த தலைவர்கள் இன்று நாவடைத்துப்போய் நிற்கின்றார்கள். தாய்மொழி என்பது தர்க்கத்திலோ, வாதங்களிலோ தீர்மானிக்கப்படுவது அல்ல; அது இயற்கையிலேயே இரத்தத்தோடு இணைந்துவரும் ஓர் இயக்க சக்தியாகும். அதனை வழிவந்த

**'சர்பாந்-துறைவன்'**

தமிழ்மொழி நின்று வாழ்பவர்கள்தான் இலங்கையில் வாழுகின்ற முஸ்லீம்களும். சமயம் என்னும் சுவர் தமிழர்—முஸ்லீம்களின் குறுக்கே நிற்கின்ற ஒரு காரணத்துக்காக மூச்சிலும், பேச்சிலும் ஒன்றுபட்ட இவ்வினங்களின் ஒற்றுமை ஒருபோதும் உருக்குலைந்துவிடப் போவதில்லை.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தமட்டில் முஸ்லீம் சமூகத் தலைவர்கள் ஆளுக்கொரு கோணத்தில் விரும்பிய விருப்பிய கொள்கைகளில் சேர்ந்துகொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் இவ்வாறு இவர்கள் வேறுபட்டு நிற்பதால் முஸ்லீம்களின் ஏகோபித்த குரலை பாராளுமன்றத்திலோ, வெளியிலோ கேட்கமுடியாமலிருக்கின்றது.

### குரல் கொடுத்தவர் யார்?

இலங்கையின் அரசியல் வானில் இருந்துகொண்டிருக்கின்ற இன்றைய அரசியல் கட்சிகள் யாவும், சிங்கள இனத்தின் வாழ்வுக்காகவும், வளமான சுகத்துக்காகவுமே திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கின்றன. எந்த ஒரு சிங்களக் கட்சியாவது எமது இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சிக்காக எடுத்துப் பேசியது கிடையாது.

சிங்களமொழி மட்டும் ஆட்சி மொழியாக ஆக்கப்படும்போது ஒரு சிங்களக் கட்சியாவது தடுத்துப் பேச முன்வரவில்லை.

பௌத்தமத வளர்ச்சிக்கு மட்டும் திட்டங்களைத் தீட்டும்போது; தமிழ்—முஸ்லீம் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும்போது; தமிழ்—முஸ்

(14-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரன்

SUTANTIRAN

1965 சனவரி மாதம் 24ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183


# இரட்டை வேடம்

ஐ தே. கட்சி அரசாங்கத்தில் பதவி வகித்து, தமிழ் பேசும் மக்களுக்கு என்னென்ன தீங்குகளைச் செய்ய முடியுமோ, அத்தனையும் செய்த சில பகல்வேடதாரிகள் இத் தேர்தலில் 'ஐக்கிய முன்னணி' கோஷத்தை எழுப்பி போட்டியின்றிப் பாராளுமன்றத்திற்குச் செல்ல குறுக்குப்பாதை தேட முயன்றனர். அவர்களின் தந்திரங்களையும் உபாயங்களையும் ஏற்கனவே நன்றாகத் தெரிந்து வைத்திருந்த மக்கள் அவர்களின் போலி முன்னணித் திட்டத்தைச் சுக்கு நூறாக நொறுக்கித் தள்ளிவிட்டனர்.

இதனால் ஏமாற்றமடைந்த அந்தப் பதவிப் பித்தர்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்ற மற்றொரு மாயாஜாலக் கோஷத்தை எழுப்பியுள்ளனர். இது ஐ. தே. கட்சியின் தேர்தல் கோஷம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பதவி வேட்டைக்காரர்கள் ஏற்கனவே ஐ தே கட்சி அரசாங்கத்தில் பதவி வகித்ததாலும், அதே கட்சியின் கோஷத்தை இன்று இவர்களும் எழுப்புவதாலும், ஐ தே கட்சிக்கும் இவர்களுக்கும் இத் தேர்தலில் நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடுமென்று மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

ஐ. தே. கட்சி எல்லாவிதமான தேர்தற் தந்திரங்களையும் இம்முறைகையாளுவதால், தனது கையாட்களை இறந்து பட்ட ஒரு கட்சியின் பெயரால் வாக்குபிச்சை வாங்க மக்கள் மத்தியில் நடமாட விடுவது சாத்தியமே.

அத்துடன் ஐ தே. கட்சி கிழக்கு இலங்கைத் தொகுதிகளிலும் போட்டியிட துணிவுகொண்டுள்ளது. மூன்று தமிழர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது இக்கட்சி. தமிழ்பேசும் இனத்தையே அடைத்தெறிய பெருமுயற்சி செய்த ஒரு கட்சிக்கு இந்தத் துணிச்சல் எப்படி ஏற்பட்டது?

கிழக்கு மாகாணத்தில் சில தொகுதிகளில் சிங்கள வாக்காளர்களின் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. காரணம் சிங்களக் குடியேற்றமே. கல்ஓயா, அல்லை, கந்தளாய் குடியேற்றங்களை ஐ தே கட்சி அரசாங்கம் கிழக்கு இலங்கையை ஆக்கிரமிப்பதற்காகவே தொடங்கியது. திட்டமிட்டபடி சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழ்மண்ணை ஆக்கிரமிப்பதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். தமிழரசார் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து கிளர்ச்சிகள் நடத்தியிராவிட்டால், கிழக்கு மாகாணம் முழுவதையும் என்றோ சுபளீகரம் செய்திருப்பர் ஐ. தே கட்சியினரும், அவர்களுக்குப்பின் ஆட்சிபீடமேறிய சுதந்திரக் கட்சியினரும்.

தமிழ்மண்ணை விழுங்குவதற்காகத் திட்டமிட்டுச் செயலாற்றியதோடு ஐ தே. கட்சி அரசாங்கம் நின்றுவிடவில்லை ஈழம்வாழ் தமிழ்பேசும் இனத்தின் ஒரு பகுதியினரும், தமிழ்பேசும் மக்களிற் சரிபாதித் தொகையினருமான மலைநாட்டுத் தமிழ்மக்களின் ஜீவாதாரமான குடியுரிமையையும் அபகரித்துவிட்டது ஐ தே கட்சி அரசாங்கம். உலகிலே எந்த நாட்டிலுமே நடைபெறாத இந்த மாபெரும் துரோகத்தின் பயங்கர விளைவுகளை இன்றும் அனுபவிக்கின்றனர் மலையக மக்கள். இந்த துரோகங்களுக்கெல்லாம் உடந்தையாக இருந்த பச்சோந்திகள்தான் இன்று மக்களின் 'திறமை'யையும் மதிநுட்பத்தையும் பற்றி பசப்புகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் சொந்த மண்ணை ஆக்கிரமித்த,- அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்த ஐ தே கட்சியின் வேட்பாளராக தமிழர்களே முன்வந்திருப்பது வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

ஐ தே. கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் தனது நில ஆக்கிரமிப்பு, உரிமை அபகரித்தல், இன ஒழிப்பு ஆகிய கொள்கைகளை தீவிரமாக அமுல் நடத்துமென்பது சாலநிச்சயம். இந்த வேட்பாளர்கள் அந்தத் துரோகங்களுக்கெல்லாம் உடந்தையாக இருக்கப் போகிறார்களா?

சிங்கள வகுப்புவாதக்கட்சிகளான ஜாதிக விமுக்தி பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் ஐ. தே. கட்சி போட்டியிடவில்லை அத்தோடு, அந்தத் தீவிர வகுப்புவாத சக்திகளுடன் கூடிக்குலாவி இரண்டறக் கலந்து நிற்கிறது இக்கட்சி. இது தனது வகுப்புவாதப் போக்கை மறைத்துக்கொண்டு இன்று தமிழ்ப் பகுதியிலும் போட்டியிடுகிறது. இக்கட்சியின் இரட்டை வேடத்தைத் தமிழ்பேசும் வாக்காளர் தெரிந்துகொள்வது கடினமன்று.

அடுத்து, சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்ட் கட்சியும் தங்களின் நிலையற்ற மொழிக் கொள்கையை மூடி மறைத்துக் கொண்டு தமிழ்ப் பகுதிகளிலே "இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" என்ற ரீதியில் சில தொகுதிகளிற் போட்டியிடுகின்றன.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் "சமசமாஜக் கட்சியின் சம அந்தஸ்து"க் கொள்கை தேய்ந்து தேய்ந்து சிங்களம் மட்டும் கொள்கையில் போய் தேங்கி நிற்கிறது. அக்கட்சி கூட்டரசாங்கத்தில் சேர்ந்த பின்னர், சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டதோடு அதனை தீவிரமாக அமுல் நடத்தவும் முற்பட்டது. அத்துடன் சிங்கள வகுப்பு வாதத்தையும் ஓரளவு தழுவிக்கொண்டது.

அவர்கள் அரசாங்கத்தில் சேர்ந்ததும், தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்கிவிடுவார்கள், இல்லையேல் வழங்குவதற்கு வழியாவது வகுப்பார்கள் என்று அநேகர் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வகுப்பு வாதக் குட்டையிலேயே விழுந்து நீந்திக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு பதவிக்காக 30 ஆண்டுகளாகக் கட்டிக்காத்த கொள்கையையே காற்றில் பறக்கவிட்டவர்கள்—தமிழ் பேசும் மக்களிடம் தலை காட்டவே வெட்கப்பட வேண்டியவர்கள், தமிழ்ப் பகுதியிலேயே போட்டியிட முன் வந்துள்ளனர்.

சமசமாஜிகள், கொம்யூனிஸ்டுகள் யார் என்பதை நன்றாக, தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர் தமிழ் பேசும் மக்கள். தாங்கள் மண் கவ்வப்போவது நிச்சயம் என்பது இக்கட்சிகளுக்கும் தெரியாமலிருக்க முடியாது. அவர்கள் போட்டியிடுவதால் வாக்குகள் பிரிந்து, பிற்போக்காளர் வெற்றி பெற வாய்ப்பு ஏற்படலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

"அகில இலங்கைக் கட்சி" என்ற பெயரைப் பெறுவதற்காக இவ்விரு கட்சிகளும் தமிழ் பகுதிகளில் போட்டியிட்டாலும், அவர்களின் இச்செயல் ஐ தே. கட்சியின் கையாட்களான பிற்போக்குப் பிண்டங்களின் கையைத்தான் பலப்படுத்தும் என்பதை உணர்ந்து, அதற்கேற்ப செயலாற்ற வேண்டியது மக்களின் கடமையாகும்.

சுருங்கக் கூறின், ஐ. தே. கட்சிக்கும் பழைய முகமூடியொன்றை அணிந்து கொண்டு பித்தலாட்டப் பிரசாரத்தில் இறங்கியுள்ள அவர்களின் கைப்பாவைகளுக்கும் இப்பாவைகளின் கையைபலப்படுத்தும் இடதுசாரிகள் என்போருக்கும் தகுந்த படிப்பினையைக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு தமிழ் பேசும் மக்களைச் சார்ந்ததாகும்.

# ஒதுக்கப்பட்டவர்களாலே ஒடுங்கியது இரு அரசும்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

இலங்கை அரசியல் வானில் இன்று எழுந்துள்ள குழப்பமான நிலை அரசியல் அவதானிகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. எதிர் வரப் போகும் பொதுத் தேர்தல் இந்நாட்டைச் சர்வாதிகாரச் சக்கரத்தில் சுழலவைக்கப் போகிறதா, அல்லது சர்வாதிகாரத்தை முறியடிக்கும் ஆற்றலை தமிழரசுக் கட்சிக்கு வழங்கப் போகிறதா, என்பதை முடிவு கட்டப் போகிறது.

மார்க்சிய வாதிகளுடன் இணைந்துவிட்ட சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சி பீடம் ஏறினால் தனிமனித சுதந்திரத்துக்கே உலை வைக்கப் பட்டு விடும் என்றும் எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்தை வெளிப்படுத்தும் உரிமைகள் யாவும் பிடுங்கப் பட்டு விடும் என்றும் கூறப் படுகிறது.

பழமை தழுவும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அதிகபடியான வாக்குகளைப் பெற்று ஆளும் உரிமையும் பெற்று விடுமானால், பிற்போக்குத்தனம் தான் இந்நாட்டில் பெருகும் என்றும், தொழிலாளவர்க்கம் நசுங்கி, முதலாளிகளின் கொடியே உயரப் பறக்கும் என்றும், வலதுசாரிகளின் சர்வாதிகாரம் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

## இரு வகை ஆட்சி பீடம்

இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்னர்—1948 முதல் 1956 வரையுள்ள 8 ஆண்டுகள் பிற்போக்கு வாதிகள் என்று வர்ணிக்கப் படும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஆட்சியையும், 1956 முதல் இன்று வரையுள்ள எட்டு ஆண்டுகளிலும் ஆட்சி செலுத்திய, நடுவு நிலைமை என்று தங்களை வர்ணித்துக்கொண்டு இடதுசாரிகளுடன் இணைந்துவிட்ட சுதந்திரக் கட்சியினரின் ஆட்சி முறையினையும் நாம் அனுபவித்துப் பார்த்து விட்டோம்.

இந்த இரு சாராருடைய ஆட்சி முறைகளையும் ஏறத்தாழ ஒரே அளவான கெடுக்களில் நாம் பார்த்தாகி விட்டது. இரு தரப்பினரின் ஏற்றத் தாழ்வுகளையும் குறை நிறைகளையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்ற வேண்டியது வாக்காளப் பெருமக்களின் கடமையே.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வலதுசாரி—இடதுசாரிகளும், சனநாயகவாதிகளும்—சர்வாதிகாரவாதிகளும் முட்டி மோதிக் கொண்டுள்ளனர் இவ்வேளையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பிரச்சினை, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையினை உருவாக்குவதை அனைவரும் அறிவர்.

## பகடையானோம்

மேற்படி வலதுசாரி—இடதுசாரிச் சக்திகள் கடந்த காலத்தை சரி அரைவாசியாகப் பங்கு போட்டு அரசியற் குதிரையாடியபோது அவ்விரு சக்திகளின் மோதல்களுக்கு இடை நடுவே சிக்கித் தவித்தவர்கள் தமிழ் பேசும் மக்களே! அவ்விரு சாராரும் வடக்கு—கிழக்கு—மலைநாடு ஆகிய பிரதேசங்களில் பண்டு தொட்டு வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களையே தங்கள் அரசியல் சூதாட்டத்தில் பகடைக் காய்களாக உருட்டி விளையாடினர்.

'எலிக்கு மரணம் பூனைக்குக் கொண்டாட்டம்' என்ற முதுமொழிக்கு இலக்கணமாக வலது-இடதுசாரிகளின் அரசியல் விளையாட்டுக்கு வேடிக்கைப் பொருளாக ஆக்கப்பட்டுத்தவித்தனர் தமிழ் பேசும் மக்கள்.

## ஆசை வார்த்தைகள்

"நாடெங்கும் சம உரிமை நாம் தருவோம் தமிழுக்கு" என்று எம் முன்னோர் 'தலைவர்'களை மயக்கு மொழியால் மருட்டி நாடாளவந்த யூ.

# எதிர்கால ஆட்சியினை எம்மவரே எடை போடுவர்

என். பிக்கட்சியினர் தமிழையும் தமிழ் பேசும் இனத்தையும் பூண்டோடு ஒழிக்கும் திட்டங்களை அந்தரங்கமாகச் செய்யத் தலைப்பட்டனர். ஒத்துழைப்புக் கொடுத்து வந்த அந்தத் 'தலைவர்'களுக்கு யூ. என். பி. திட்டங்கள் தெரிந்திருந்தும் பதவி எனும் பற்று பல்லிடுக்கில் சிக்கிக் கொண்டிருந்தமையினால் அவர்களின் கருத்து மழுங்கியிருந்தது போலும் ஒவ்வொன்றாக நமது உரிமைகள் யாவும் பிடுங்கப்பட்டன.

1956ம் ஆண்டு ஆட்சி பீடம் ஏறிய பண்டாரநாயக்க அரசாங்கம் நடுவழியை-நேர்மை நெறியைக் கடைப் பிடிக்கப் போவதாக பறை சாற்றியது ஆனால் சிறுபான்மை இனத்தோரைச் சீரழிக்கும் திட்டங்களை இடமுடனே நடத்தியது.

வகுப்புவாதப் பூதம் கிளப்பப்பட்டு விட்டதனால் கலவரங்களும் தொடர்ந்தன. இன்று இன ஒழிப்பு நடவடிக்கைகள் பெருகுவதையன்றி வேறேதும் காண்பதற்கில்லை.

இதனாலே தான் தமிழ் பேசும் இனம் இந்நாட்டிலுள்ள இடதுசாரிகளையோ வலதுசாரிகளையோ என்றும் நம்பிப்பயனியல்லை என்பதைக் கண்டது. இன்னல்களைப் போக்கடிக்க இயக்கம் ஒன்று கண்டு அன்று முதல் இன்று வரை அறப்போர் புரிந்து வருகிறது.

## இயக்கத்தின் இன்றைய நிலை

எட்டு வருடகாலம் ஆட்சி நடத்திய வலதுசாரி இயக்கமான ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்த கொடுமைகளினால் அக் கட்சி மீண்டும் ஆட்சிபீடம் ஏற முடியாது முறியடித்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும்.

அன்று அவர்கள் தொடங்கிய இன ஒழிப்புப் பணியினை பின்னருள்ள எட்டு ஆண்டுகளில் தொடர முற்பட்ட-இடதுசாரிகள் கோட்டமாக மாறிய சுதந்திரக்கட்சியின் ஆணவப் பற்களைப் பிடுங்கிய பெருமையும் தமிழரசுக் கட்சியையே சாரும்.

எந்த இனத்தை வேரறுக்க விழைந்தனரோ, அந்த இனத்தின் ஒப்பற்ற சக்தியினாலேயே அடிக்கப்பட்டனர். ஆகவே, இரு சாராரும் தமிழ் பேசும் இனத்தின் உயிரனைய இயக்கமான தமிழரசுக் கட்சியிடம் நல்ல பாடம் படித்துள்ளனர்.

எம்மை உதாசீனம் செய்து, எமது உரிமைகளைப் பறித்து வந்த இரு தரப்பினரும் இன்று ஓரளவாவது எமது ஒப்பற்ற சக்தியை உணர்ந்து வைத்துள்ளனர். அதனாலேயே இன்று இவ்விருசாராரும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் வழங்கப் போகும் தீர்ப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

## சக்தியை உணர்ந்தனர்

கடந்தகாலங்களில் மேற்படி இரு சாராரும் நடந்து கொண்ட முறையினால், எந்த ஒரு சாராரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியை இப் பொதுத்தேர்தலில் பெறமாட்டார்கள் என்றே அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இம்முறை அமையப் போகும் அரசாங்கம்மட்டுமல்லாமல், இனிமேல் இந்நாட்டில் ஏற்படக்கூடிய சகல அரசாங்கங்களும்தமிழ் பேசும் மக்களின் சக்தியை உதாசீனம் செய்யவே முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எத்தகைய ஆட்சியும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வழங்காமல் நிலையாக நிற்கமுடியாது என்பது தெளிவாகிறது. எந்த இனத்தின் எழுச்சிகளை அடக்கி ஒடுக்கி நசித்துவிடப் பார்த்தனரோ அதே இனத்தின் கருணைகடாட்சமின்றி ஆட்சி பீடமேற முடியாத சூழ்நிலை

(9-ம் பக்கம் பார்க்க)

# பதவிகளை மூலம் தமிழரசாரை ஏமாற்றி விட முடியாது

## ஊர்காவற்றுறையில் தமிழரசுத் தந்தை பேச்சு

'இன்று வட-கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சி எத்தனை தொகுதிகளில் வெற்றி பெறும் என்பதை ஐ. தே. கட்சி ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கிறது' என்று தமிழரசுத் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு டட்லி சேனநாயக்கா அவர்கள் 1960 ம் ஆண்டு நம்மிடம் வந்து தமது அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கும் வண்ணம் வேண்டிய பொழுது நாம் இரண்டு விடயங்களை முக்கியமாக வற்புறுத்தினேம். ஒன்று மொழிப்பிரச்சினை, மற்றது குடியேற்றப் பிரச்சினை. இவ்விரண்டு பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டுமென்றும் அவரிடம் திட்டவட்டமான முறையில் பதில் கேட்டிருந்தோம். நமது கோரிக்கைக்கு முடிவான ஒரு பதிலைக் கொடுக்காத காரணத்தினால் நாம் அவரை ஆதரிக்க மறுத்தோம்.

திரு. டட்லி சேனநாயக்கா தமிழர்களைப் பதவி மூலம் மாற்றிவிடலாம் என்று எண்ணி அவரே முடிவில் ஏமாற்றமடைந்தார். இப்பொழுது ஐ. தே. கட்சியினரும் ஏனைய சிங்களக் கட்சியினரும் தமிழ் பேசும் மக்களை தமிழரசுக் கட்சி உள்ளவரை பதவி மூலம் வாங்கிவிட முடியாது என்பதை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பதவிகள் மூலம் தமிழரசுக் கட்சியினரை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏமாற்றி விடவும் முடியாது.

### தடுப்புக் காவல் அனுபவம்

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் பேசுகையிற் கூறியதாவது:

"நாம் தடுப்புக்காவலில் உல்லாச வாழ்வு வாழ்ந்ததாக ஒருசில மாற்றுக் கட்சியினர் பிரச்சாரம் செய்து வருகிறார்களாம். விடுதலைப் போராட்டத்தை விளம்பரமாகக் கருதுபவர்கள் அப்படிக் கூறலாம். நாம் விடுதலைப் போராட்டத்தை தூய்மையானதாகக் கருதுகிறோம். நாம் இவர்களின் விமர்சனங்களைக் கண்டு ஒதுங்கிவிடப் போகிறவர்களல்ல. என்றாலும் எனது தடுப்புக்காவல் அனுபவத்தை கூறுவதனால் பொங்கிக் குமுறும் உள்ளத்திற்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கும்.

நான் தடுப்புக்காவலில் இருந்தபோது நான்கு மாதங்களாக எனது கண்ணின் மணிகளான, நான் பெற்றெடுத்த இரு செல்வங்களையும் பார்க்க முடியவில்லை நான்கு மாதங்களின் பின்னர் எனது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது அப்பொழுது எனது பிள்ளைகளை எனது பெற்றோர் அழைத்து வந்தார்கள். மூத்தமகன் ஓடிச்சென்று தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான். இளைய மகன் என்னிடம் வர மறுத்து விட்டான். என்னை மறந்துவிட்டான். நான் பெற்ற செல்வம் என்னை மறந்துவிட்டது நான் பாலூட்டி தாலாட்டி வளர்த்த எனது மகன் என்னை மறந்து விட்டான். பெற்ற தாயைப் பிள்ளை மறந்து விட்டது. என் தாய் தந்தையர் எனது மகனுக்கு என்னைத் தாயென்று அறிமுகப்படுத்தியும் கூட எனது மகன் என்னிடம் வர மறுத்து விட்டான். இதிலும் பார்க்க கொடுமையான சோதனை ஒரு தாய்க்கு உலகத்தில் வேறு உண்டா?

இத்தனை இன்னல்களையும் நான் எதற்காக அனுபவித்தேன்? இதுதானா நாம் தடுப்புக்காவலில் உல்லாசவாழ்வு வாழ்ந்தது என்று கேட்க ஆசைப்படுகிறேன்?"

ஊர்காவற்றுறைத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் இன்றைய தமிழரசுக்கட்சி வேட்பாளருமான திரு. வ. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழினத்தின் இக்கட்டான நிலையில் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட வேண்டுமென்கிறார்கள். இந்த ஒற்றுமை தமிழினத்தின் ஒற்றுமையல்ல தமிழ்மக்கள்தான் ஒன்றுபடவேண்டும். தமிழினத்தின் நலத்திற்காகவே நாம் உழைப்போம்-எங்கள் ஒத்துழைப்பின்றி எந்த அரசாங்கமும் செயற்படமுடியாது.

வழக்கறிஞர் பி. கதிரவேலு பேசுகையில் 'தமிழரசுக்கட்சி போன்ற ஒரு கட்சியாற்தான் நமது உரிமைகளைப் பெற முடியுமென்'றார்.

வழக்குரைஞர் திரு. பி. எம். போல்பிள்ளை பேசுகையில் 'தமிழர் விடுதலைக்கு தமிழரசுக் கட்சியொன்றே பாடுபடும்' என்று கூறினார்.

## ஒதுக்கப்பட்ட...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வருங்கால அரசியல் வாதிகள் திக்குமுக்காடப் போகின்றனர்.

### சர்வாதிகாரத்தை முறிக்கும் சக்தி

பொருளாதாரத் துறையில் பின் தங்கிய ஒரு நாட்டிலே இரு சமபலம் பொருந்திய கட்சிகள் ஆட்சிபீடம் ஏறப் போட்டியிட்டு ஏதாவது ஒரு கட்சி வெற்றியீட்டிவிட்டால், அடுத்த கட்சி மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் ஆட்சிபீடம் ஏறும் வாய்ப்பை முறியடிக்க ஓர் சர்வாதிகார அமைப்பினையே ஏற்படுத்த எத்தனித்திருக்கும் இது உலக அரசியல் வரலாறு காட்டும் உண்மை. இதே முறையை பொருளாதாரத்துறையில் பின்தங்கிய நாடான இலங்கையில் அடுத்து ஆட்சி பீடம் ஏற வாய்ப்பினைப் பெறும் கட்சியும் அமுலாக்க முயற்சிக்கலாம்.

இத்தகைய சூழ் நிலையில் தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள்தான் இந்நாட்டின் தலைவிதியினை நிர்ணயிக்கவல்ல தகுதி பெறப் போகின்றார்கள்.

இந்நாட்டில் ஏற்படப் போகும் ஓர் சர்வாதிகார ஆட்சி முறையினை அடித்தளத்திலேயே வெடி வைத்து வீழ்த்தக் கூடிய பலம் தமிழ் பேசும் மக்களின் தலைவர்களுக்கே ஏற்படப்போகிறது ஒரு கட்சியின் அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லுமாயின் அந்த அரசாங்கத்தை வீழ்த்தி, ஒரு பொதுத் தேர்தலைக் கொண்டு வருவதின் மூலம் நாட்டை மீண்டும் ஜனநாயகப் பாதையில் திருப்பிவிடக் கூடிய சக்தி தமிழரசுக்கட்சி பிரதிநிதிகளிடமே இருக்கும்—இருக்க வேண்டும். சுருங்கக் கூறின் இந் நாட்டில் சர்வாதிகாரம் ஏற்படாது தடுக்கக் கூடிய மாபெரும் சக்தி தமிழரசுக் கட்சியே!

## ஆதரவாளர் கூட்டம்

கொழும்பு வாழ் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த தமிழரசு ஆதரவாளர்களின் கூட்டமொன்று இத் திங்கள் 27-ம் நாள் புதன்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் 16, அல்பிறட் கவுஸ் தோட்டம், கொழும்பு-3 இல்லத்தில் நடைபெறும் என்று கூட்ட அமைப்பாளர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். கொழும்பு நகரைச் சுற்றியுள்ள உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் அனைவரையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் கூட்ட அமைப்பாளர் கேட்டுள்ளார்.

## தமிழரசுக் கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

25-1-65-துணுக்காய்
26-1-65-வரணி உடுப்பிட்டி.
28-1-65-திருநெல்வேலி.
29-1-65-மண்டதீவு
30-1-65-உடுப்பிட்டி, பருத்தித்துறை.
31-1-65-யாழ்ப்பாணம் மானிப்பாய்

## சகல தேசிய வாதமும்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜின்டுகள் இன்று ஐந்தேகால் இலட்சம் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை நாடுகடத்தும் திட்டத்திற்கு தலைபோயயுள்ளனர்; அத்திட்டத்தை செயற்படுத்த உழைக்கின்றனர்.

### இடதுசாரிகளின் பிரச்சாரம்

இந்த நிலையில்சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த வடமாகாணத்திலுள்ள ஒருசிலர் கூட்டரசாங்கம் தமிழர்களுக்கு உரிமை வழங்கவிருந்ததாகவும் அதைத் தமிழரசுக்கட்சியினர் கெடுத்துவிட்டதாகவும் பிரச்சாரம் செய்துவருகிறார்களாம்.

சுதந்திரக் கட்சி நடாத்திய இன வொழிப்பு ஒருபுறமிருக்க கூட்டரசாங்கம் நடாத்திய இனவொழிப்பு மிகக் கொடியதாக உள்ளது. கூட்டரசாங்க காலத்திலேயே தமிழ் பேசும் அரச ஊழியர்கள் பதவியிலிருந்து வெளியேறறப்பட்டார்கள் திரு. கே. எம். பி. இராசரத்தினா நெற்காணிச் சட்டத்திற்குக் கொண்டுவந்த மூழு வகுப்புவாத இனவொழிப்புத் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது கூட்டரசாங்கத்தினரால். கூட்டரசாங்கத்தின பதவி காலத்திலேயே ஐந்தே கால இலட்சம் மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை நாடு கடத்தும் அநாகரீகமான ஒப்பந்தம் உருவாகியது

புத்தமதத்திற்குஉரியஇடம் கொடுக்கவேண்டுமென்பதற்காக சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக உள்ள அரசியல் அமைப்பின் 29ம்பிரிவைத்திருத்த வேண்டுமென்று முதல் முதலாக அரியணை உரையிற் குறிப்பிட்டது கூட்டரசாங்கம் பதவியேற்ற பின்னர்தான்.

### பொய்ப்பிரச்சாரம்

இந்த நிலையிற்தான் திரு. திருச்செல்வம் அரசாங்கத்துடன் தமிழ் உரிமை பற்றி பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கையில் கூட்டரசாங்கத்தை தோற்கடித்து விட்டதாக சமசமாஜிஸ்டுகள் கதையளக்கிறார்கள் வட-கிழக்கில்.

கூட்டரசாங்கம் தமிழருக்கு உரிமை வழங்குமென்ற பேச்சு வெறும் கேலிக்கூத்து. தேசிய வாதம் பேசியவர்களெல்லாம் சுண்டியெடுத்த வகுப்புவாதிகளாக மாறிய பின்னர், வகுப்புவாதம் பேசியவர்கள் தமிழருக்கு உரிமை வழங்குவார்களா? தீவிர இனவொழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கூட்டரசாங்கம் தமிழருக்கு உரிமை வழங்குவது பற்றி திட்டம் தீட்டியது என்ற பேச்சுக்கே இடமேது?

சகல தேசிய வாதமும் இன்று நிர்வாண கோலத்தில் வாகமாகிவிட்டது. எனவே வட-கிழக்கில் எந்த உருவத்தில் தேசியவாதம் பேசினாலும் அதை மக்கள் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நம்பவோ தயாராக இல்லை.

## பதவிக்காக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. நல்லையாவிடமும் கல்குடா மக்கள் கேட்டுக் கொண்டேயுள்ளனர்.

'காலத்துக்குக்காலம் தோன்றி மக்களை ஏமாற்றி எப்படியாவது வாக்குச்சீட்டுகளைச் சம்பாதித்து பதவி பெற்று, அதையும் பறிகொடுத்துப்போகும் ஏமாற்றுக்காரர்களையெல்லாம் இனி நாம் நம்பத்தயாரில்லை', என்று கல்குடா வாக்காளர்கள் சபதமெடுத்துக் கொண்டுள்ளனர்.


திரு. நல்லையா அவர்களுக்காக பிரசாரம் செய்யப் புறப்பட்டுள்ள சிலர் தலைமறைவாகி விட்டதாகவும் அறியவருகிறது.

—பாடும்மீன்

## போட்டியிட...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மைதானத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய தமிழ் காங்கிரஸ் முக்கிய பிரமுகரும் முன்னாள் மூதவை உறுப்பினரும் பிரபல வழக்குரைஞருமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் தீவுப்பகுதியில் வாழ்பவர்கள் கல்வியறிவோ, அரசியலறிவோ அற்றவர்கள் என்றும் தீவுப்பகுதிப் பெண்கள் அறப்போர் என்பதைச் சரியாக உச்சரிக்கத் தெரியாது "அறுப்போம்" என்று கூறியதாகவும் பேசி, தீவுப்பகுதி மக்களை ஏளனம் செய்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

# இனும்!

'குருண்டிக்' ரேடியோ செட் ஒன்றையும் மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் இலவசமாக பெறுங்கள்.

அத்துடன் பெருவாரியாக பாட்டரிகளை வாங்கும் விற்பனையாளர்களுக்கும் பிரத்தியேக பரிசுகள்




## "குருண்டிக் ரேடியோ பாட்டரி சீட்டிழுப்பு"

1-12-64 தொடக்கம் இந்த சீட்டிழுப்பு திகதி முடிவடையும் வரை "குருண்டிக்" ரேடியோ பாட்டரி ஒன்றை வாங்கும் ஒவ்வொரு வாடிக்கைக்காரர்களுக்கும் ஒரு தொடர் இலக்கமிடப்பட்ட கூப்பன் இலவசமாக வழங்கப்படும்.

நீங்கள் கொள் முதல் செய்யும் நேரத்தில் உங்கள் விற்பனையாளரிடமிருந்து இந்த இலவச கூப்பனை தயவுசெய்து வற்புறுத்தி பெற்று அவைகளைப் பத்திரமாக உங்களுடன் வைத்திருங்கள்.

முடிவு திகதிக்குப் பின் உங்கள் பரிசுகளைக் கோருவதற்கு வசதியாக, அதிர்ஷ்ட இலக்கங்களைக் கொண்ட கூப்பன்களின் விபரங்களை பத்திரிகை வாயிலாக பிரசுரிக்கப்படும்.

**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,**
516, ஸ்கின்னர்ஸ் ரோடு-தெற்கு,
கொழும்பு-10.

நிரமை பிடித்தவன் போலிருந்த நாகராஜன், சுய நினைவு பெற்ருன். யோசித்த பிறகே, உள் மனத்தில் அப்பிக் கொண்டிருந்த ஏதோ ஒரு திகைப்பில், தன்னை மறந்து இருந்தது தெரிந்தது. பஸ்ஸிற்குள் பிரயாணம் செய்யும் உணர்வும் தட்டியது.

பஸ், எகிறி எகிறி ஓடிக் கொண்டிருந்தது. அவ்வோட்டத்திற்கேற்ப, வெளியே இருந்து வீசிய காற்று; உள்ளேயோ, பகல் உக்கிரம் சிந்தி மறைந்த வெப்பத்தின் நெடி; இரண்டும் சேர்ந்த ஒரு விஞேதமான கலவை, விட்டு விட்டு வந்து முகத்தை அழுத்தியது.

அவன் தன் 'கோம்ரேட்டு'களுடன் நாவலப்பிட்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தான். அங்கு வசதியற்ற நிலையில் இருக்கும் தோட்டச் சிறுவர்களுக்குக் கல்வி போதித்துவிட்டு பேராதனை - கம்பெசுக்குத் திருப்பிப் போய் கொண்டிருந்தனர். 'கல்விப் போதனை'-மனத்தில் அதே காட்சி.

தோழன் குருநாதன், தோட்டக் குழந்தைகளை வரிசையாக அமர்த்தி விட்டு தன் 'போதனை'யை நடத்துகின்ருன். 'உலகப் பெரியார்கள்—'மார்க்ஸ் லெனின், ஸ்டாலின், மா-சே-துங் நீங்களும் அவர்களைப் போல'...பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த அவனுக்கு 'சுரீல்' என நெஞ்சில் ஏதோ இறங்கியது. பிஞ்சு நெஞ்சங்களில் படியுப்படி சொல்லிக் கொடுக்கும் படிப்பு இதுதாஞ?

அவஞல் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. பஸ் ஸ்டாண்டுக்கு வரும்பொழுது குருநாதனிடம் இதைக் கேட்டே விட்டான். 'அதுக்கு என்னடா? இதுதான் எங்கட பிரச்சாரம். எங்கட கொள்கைகளை எப்பிடியும் புகட்ட வேணும். அவ்வளவுதான்.' தன் கட்சிக்காரன் என்ற உரிமையில், அவனிடம் குருநாதன் உண்மையை அப்படியே பச்சையாகச் சொல்லி விட்டான்.

தூய பயன் கருதாப் பணி என வெளியில் சொல்லிக் கொண்டு பல்கலைக் கழகத்திலிருந்து இங்கு வருகின்ருர்களே! அந்தத் தூய்மையின் விலை இவ்வளவுதாஞ?

புனிதமான சேவை என்ற உணர்வும், அது அளித்த உற்சாகமுமாய் அவன் தோட்டத்திற்குள் நுழைந்தானே, தன்னருமைத் தோழர்களோடு. இவர்கள் கட்சி என்றகுறுகிய எல்லைக்குள்ளேயே எல்லாவற்றையும் அடக்கும் திறமை பெற்றவர்கள். புனிதம் என்ற சொல்லே இவர்களுக்குத் தெரியாது. தெரிந்ததெல்லாம் கட்சி ஒன்றுதான்.

மனத்தைச் சமாதானப் படுத்த முயன்ருன். இவர்களின் இலட்சிய நாடுகளில் கையாளப்படும் கல்வி முறை இத்தகையதுதான், இதை இங்கும் பிரத்தியட்சமாகச் செய்து பார்க்கின்ருர்கள். அவ்வளவுதான். இப்பொழுதே இப்படி என்ருல்... இலங்கையும் இவர்கள் விரும்பியமாதிரி வந்துவிட்டால்... ஐயய்யோ வேண்டாம்!

என்ன ஐயய்யோ வேண்டிக்கிடக்கின்றது. தானும் அவர்களில் ஒருவஞக இதுவரை இருக்கும் பொழுது......

பஸ், ஒரு குலுக்கலுடன் ஒரு ஸ்டாப்பில் வந்து நின்றது. விழப் போனவன் பக்கத்து சீட்டின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு சமாளித்தான்.

ஒரு தோட்டத் தொழிலாளக் குடும்பம், ஏறி வந்தது. அதில் ஒரு சிறுமி, இருக்க இடம் தேடி அவன் சீட்டருகில் வந்து ஒதுங்கிஞள். தள்ளியிருந்து அவளுக்கு இடவசதி அளித்தவன், கேட்டான். 'தங்கச்சி எங்க போறீங்கள்?' —'சினிமா பார்த்திட்டு தோட்டத்துக்குத் திரும்பிட்டுஇருக்கோம்' இலங்கைத் தமிழும் இந்தியத் தமிழும் சங்கமமாயின.

# இவ்வாரச் சிறுகதை

மான நடையினால் தூரம் குறுகியது. சதுரக் கோடுகளாய் வழிந்த விசயவர்த்தஞ விடுதியின் மின் சாறு, அவனுக்கு வழி காட்டுவது போல ஒளிர்ந்தது. அதை நோக்கி நடக்க நடக்க மனம் தெளிவாவது போல இருந்தது.

எல்லா நினைவுகளையும் விலக்கி மேடிட்டு எழுந்த ஒரு தீர்மானம் குழப்பத்தைக் கலைத்து மனத்தை தெளிவாக்கி தெம்பளிப்பது போல இருந்தது அத் தீர்மானம் சரியானதே என்பதால் எழுந்த ஒருவித துணிவு உணர்ச்சி, நெஞ்சுக்குத் தைரியம் ஊட்டி முட்டிக் கொடுத்தது.

ஒரு கிழமை கழித்து—

அன்றும், அதே மாதிரி நாகராஜன் கட்டிலில் படுத்திருந்தான். ஆஞல் இப்பொழுது முன்போல் எண்ணங்கள் குமுறிக்கொண்டு அலை

**"அவனுக்கு எங்கோ, ஸ்டாலின்கால 'இரும்புத் திரை' நாடுகளின் தெரு ஒன்றில் நடப்பது போலிருந்தது. ஆஞல் நல்ல வேளையாக இலங்கை அப்படிப்பட்ட நாடு இல்லை. 'தோழர்'களின் சொற்கள் வெறும் ஆத்திரத்தின் ஒலிவடிவங்களே".**

அவன் சிறுமியை நோட்டமிட்டான் சீத்தைத் துணியில் தைத்த நீண்ட சட்டை; தலைப் பின்னலை, நுனியில் வெள்ளைத் துணி வைத்து முடிந்திருந்தது. கையில் சண்ஞடி வளையல். அவளிலும், பக்கத்து ஆசனத்தில் இருந்தஅவள் தாய், தமக்கை ஆகியோரிடமும் வறுமையின் தேக்கத்தினையும் அறியாமையின் வெகுளித் தோற்றத்தையும் காண முடிந்தது.

எண்ணிக்கைப் பொருளாகி, ஐந்து வருடத்திற்குள் நாடு கடத்தப்படப் போகும் ஐந்து லட்சம் பேரில் இக் குடும்பமும் ஒன்ருய் இருக்கலாம். கடும் உழைப்பைக் கொட்டி தாம் வளமாக்கிய நாடு, இப்பொழுது குடி இருக்கக்கூட உரிமைஅளிக்க மறுத்து தம்மை துரத்துவதற்காகவே எடுக்கும் கல்நெஞ்ச நடவடிக்கைகளை இவர்கள் இன்னும் உணரா

அறையை அடைந்ததும் அவன் படுக்கையில் விழுந்தான். சாப்பாட்டுக்கும் போகவில்லை. 'ரூம் மேட்' விளக்கை அணைத்து விட்டுப் படுக்கும் வரை காத்திருந்து விட்டு எழுந்து, இருட்டோடு இருட்டாக கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

பழைய நினைவுகள் அசைந்து ஊர்ந்தன. முதன் முதலாகத் தமிழ்ச் சங்கப் பேச்சுப்போட்டியில் கலந்து கொண்ட பொழுது அவன் கற்றுக் குட்டிதான். பெயரளவில் அவனுக்கு தெரிந்திருந்த மார்சீய தத்துவங்கள், அப்பொழுது இனிக்கவே செய்தன. அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு அவன் தன பேச்சு வன்மையால் முதல் பரிசைத் தட்டிய பொழுது, அவனை வந்து பாராட்டி, தாமாகவே தம்மை அறிமுகம் செய்து

பாயவில்லை. குழப்பம் இல்லை. மாருக வெளியேற்றப்பட வேண்டிய ஏதே ஒரு இடத்திலிருந்து, வெற்றிகரமாக தப்பித்து வெளியேறிய திருப்தியும், அமைதியாகவே ஏதோ அபூர்வ சாதனையைச் செய்தவிட்டு பெருமிதமும் நெஞ்சில் நிறைந்து ததும்பியது.

இனம் தெரியாத பரவசம் ஊறி வந்து சுழி பரப்புகையில் அந்த சுழிப்பிலே குமிழ் காட்டிப் பொடியும் வளையங்கள்—அந்த ஒரு கிழமைக்குள் அவனுக்குக் கிடைத்த அனுபவங்கள்.

இதுவரை காலமும் தன் குருவாக இருந்த குருநாதனிடம், அவன் தன் முடிவை —கட்சியிலிருந்து விலகி நிற்கப் போவதைக் கூறிய அடுத்த நாள், குருநாதன், வேருெருவஞேடு வந்து அவனை கண்டிக்கு வரும்படி அழைத்தான்.

தனும் தன்ரை கட்சியிலை இருக்கிற சின்னக் குறைகளை பாராட்ட மாட்டான். இதுகளாலை ஆரும்தன்ரை கட்சியை குறைச்சுச் சொல்லவும் விடமாட்டான்'

பஸ் ஸ்டாண்டு வந்து விட்டது. நாகராஜனுக்கு மூளை குழப்பப்படுவது போலிருந்தது. அவன் எதிர் பார்த்த திசைக்கு எதிர்ப் புறமாக வந்து நின்ற பஸ்ஸில், குருநாதன், அவனையும் தள்ளிக் கொண்டு ஏறிஞன். 'இதிலா?' என நாகராஜன் திகைப்பிற்கு, 'ஏறடா சொல்றன்' என்பதே பதிலாகக் கிடைத்தது.

சீட்டில் அமர்ந்த பிறகுதான் குருநாதன் சொன்ஞன் 'எங்கட 'சொர்க்கத்திற்கு' போறம். 'ஹிந்துகலைக்கு'. இண்டைக்கு என்ரை 'றிற்' உனக்கு நீ கட்டாயம் குடிச்சுத்தான் பார்க்கோணும்'

நாகராஜனுக்குத் தெற்றென ஏதோ புலப்படுவது போலிருந்தது. மூளையை 'பண்படுத்துப்' முறையில் இதுவும் ஒரு அம்சமோ?

உடனேயே, வாய், நினைத்தவற்றுக்கு, ஏதோ ஒரு உத்வேகத்துடன் சொல்லுருவம் கொடுத்தது. 'சில நாடுகளிலை 'மூளைச் சலவை' முறை கையாளப்படுறதாய் கேள்விப்பட்டிருக்கிறன். அந்த முறை இப்ப என்னிலை நேரில் பரீட்சித்துப் பார்க்கப் படப்போகுது போல கிடக்கு'.

குருநாதன், உள்ளுக்குள்ளே திகைத்துப் போனது தெரிந்தது. "தம்பி! நீ என்னமோ கனக்க தெரிஞ்சது மாதிரி கதைக்கிருய்"

நாகராஜனும் தயங்கவில்லை. அடுத்த ஸ்டாப்பிலேயே 'விருட்' என இறங்கிக் கொண்டு விட்டான்.

அடுத்த கட்டம்-பயங்கரமானது.

பயமுறுத்தல்; எச்சரிக்கை. ஒரு நாள் அந்தி நேரம். அவனைத் தனியே வழி மறித்தனர் பழைய 'தோழர்கள்'.

அவர்கள் பேசிய தோரணையைக் கண்ட பொழுது. அவர்களிடமிருந்து பத்திரமாக தப்பி வர முடியுமென்ற எண்ணம் அவனுக்கு இருக்கவில்லை. "எங்களைப் பகைச்சா, உனக்கு கம்பெசுக்குள்ளை, நல்லகாலம் இல்லை. இங்கையிருந்து நீ உருப்படியா பாஸ் பண்ணிக்கொண்டு போக ஏலாது. இதை நினைவிலை வைச்சுக்கொள்".

"உங்களை நான் எங்கை பகைச்சன்? என்ரை கருத்து உங்களுடைய தோடை ஒத்து போகல்லை எண்டு சொல்றது கூடப் பிழையா?" அவன் அமைதியாக, ஆஞல் ஏகத்தானமாகக் கேட்டான்.

"டேய்! கனக்க கதையாதையடா! எங்களைப் பற்றி உனக்கு தெரியேல்லை. நாங்க என்னவும் செய்வம்".

"ஓ! செய்வீங்கள். பார்க்கத்தான் தெரியுதே" அவன் எட்டி நடக்க முயன்ருன். நல்ல வேளையாக, விதி வழியாக யாரோ தெரிந்தவர்கள் வர்வே, அவர்களும் விலகிச் செல்ல நேரிட்டது.

அவனுக்கு எங்கோ, ஸ்டாலின் கால 'இரும்புத் திரை' நாடுகளின் தெரு ஒன்றில் நடப்பதுபோலிருந்தது. ஆஞல், நல்ல

(14-ம் பக்கம் பார்க்க)

# மீட்சி

தும் இருக்கலாம் இவர்களைப் பற்றி ஏன் கட்சி ஏன்றும் சொல்லவில்லை? கட்சியின் நிலைதான் என்ன? தமக்குள்ளேயே வெட்டுப் பழி; குத்துப்பழி.

அக் குடும்பமே, பக்கத்து இரு சீட்டுகளிலும் ஏகாதிபத்தியம் செலுத்தியது. 'ஏகாதிபத்தியம்' கட்சியின் 'றெடிபேட்' சொல் அடிக்கடி உச்சரிப்பதால் நினைவில் கூட இச் சொல்லே வருகின்றது உண்மையாகப் பார்த்தால் இவர்கள் தான் ஏகாதிபத்தியவாதிகள். தம் கொள்கையைத் தோட்டச் சிறுவர்களுக்கும் திணித்து ஆதிக்கம் பெற முனைபவர்கள், ஒன்றையே திருப்ப திருப்பச் சொல்வதன் மூலம் சுய அறிவை மழுங்க வைத்து......

பக்கத்திலிருந்த குருநாதன் உசுப்பிஞன். 'என்னடா மச்சான். பெரிய யோசினை? எங்களுக்கு படிப்பிச்ச அலுப்பு கண்டியோ. அதை போக்காட்ட ஹிர்துகலையிலை இறங்கிறம். நீதான் 'நல்ல பிள்ளை'யாச்சே பத்திரமாக கம்பெசுக்குப் போய்ச் சேர். நாளைக்குப் பின்நேரம் கட்சிக் கூட்டம் மறந்திடாதை' என்னவென்ருே எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்டான.

புங்கா, வாசலில் இறங்கி கோலை நோக்கி நடந்தான். இரு புறமும் உயர்ந்த மேடுகளுக்கு நடுவான பாதையில், இருண்ட அமைதியில் 'விறுவிறு' என நடப்பது உள்ளயும் மனத்துக்கு ஏற்றதாக இருந்தது. ஆவேச

சொண்ட கம்யூனிச மாணவர்கள்:

பின் அவர்கள் கூட்டிச் சென்ற கூட்டங்கள்; போதஞ வகுப்புகள். முதற் கட்சிப் போதஞ வகுப்பிலிருந்து அவன் வெளியே வந்த பொழுது ஒரு புதிய உலகைத் தரிசித்து விட்டது போல அவனுக்கு ஏற்பட்ட மலைப்பு.

ஆஞல் நாள் ஆக ஆக கட்சி வகுப்புகள் யாவும் ஒன்றையே திரும்பச் சொல்லிச் சொல்லி அதன்படியே நடப்பிப்பது போல அவனுக்குப் படும். பாதகமான கருத்துக்கள் யாவும் பழுப்பி மறைக்கப்படுவதாகவும் அவனுக்கு சில வேளைகளில் தோன்றும் இந்த நினைவை அவன் கஷ்டப்பட்டு வேறு பக்கம் திருப்பிக் கொள்வான். இன்றுதான் சட்டவிழ்த்து உசுப்பி விடப்பட்ட அவன் சுய சிந்தனை...

ஏதோ ஒரு ஆவேசத்துடன் லைட்டைப் போட்டு விட்டு மேசையில் கிடந்த மார்க்சீயப் புத்தகங்களைப் புரட்டிஞன். அவைஎல்லாம் வெறும் பிரச்சாரங்களாகவே இப்பொழுது அவனுக்குத் தெரிந்தன. மனிதனை சிந்திக்கத் தேவையற்றவஞக்கி, அவன் சுய அறிவை மழுங்க அடிப்பவையாக அவை காட்சி அளித்தன.

புத்தகங்களை மூடிவிட்டு படுக்கையில் குடைந்து கொண்டு படுத்துக் கொண்டான்.

அவனின் பெருந்தன்மையான போக்கை மெச்சிக் கொண்டு, அவர்களோடு புறப்பட்ட நாகராஜனுக்கு வழி நெடுகக் கிடைத்தவைகள் எல்லாம் 'போதனை களே'.

'கொள்கை என்று சொல்லிக்கொண்டு, இவ்வளவு நாளும் எங்களோடை திரிச்சு போட்டு, இப்ப நீ விலகிறது பிழை, பச்சோந்தித்தனம் எண்டுதான் சொல்லுவங்கள்'

'ஓம் பிழைதான்' நாகராஜன் ஒத்துக் கொண்டான். 'என்ரை அறிவு சரியா சிந்திக்க முன்னம், உங்கட கொள்கையாலை கவரப்பட்டனன் தான் இப்ப யோசிக்க, யோசிக்க உங்கட கொள்கை — அதைவிட நீங்கள் அதுக்காகக் கையாளுற முறை எல்லாம்...'

'யோசி, தம்பி யோசி, உன்ரை அறிவு இன்னும் சரியா பண்படுத்தப்படவில்லை. அதுதான் திர்க்கமா, ஒரு முடிவுக்கு வர முடியாமை, இப்படி அவதிப்படுருய்' என்றவன், நாகராஜன் அதை மறுத்து ஏதும் சொல்ல முன், உடனே தொடர்ந்தான். 'எல்லா கொள்கையிலும் சில குறைகளிருக்கத் தான் செய்யும். கொள்கை எண்டு வந்திட்டா, அதை எப்பிடியும் விட்டுக் கொடுக்கக் கூடாது. அதுக்காக எதையும் செய்யக் கூடிய தீவிர ஆவேசம் வேணும். கட்சிகளிலை ஈடுபடுற எவனும் இப்பிடித் தான் செய்யிருன். ஒருத்

|குந்தவை|

# (2) குடியுரிமை மசோதா




1948-ம் ஆண்டு தமிழின வரலாற்றில் சோகமும் துரோகமும் நிறைந்த ஆண்டு என்று முன்பு கூறினேன். தமிழினத்தின் சரிபாதியல்ல, சரிபாதிக்கு மேற்பட்ட மலைநாட்டு தமிழ் மக்களது உழைப்பாளிகளது குடியுரிமை நீதி நியாயத்துக்கு முற்றிலும் மாறாக, வஞ்சகமாக பறிக்கப்பட்டு 'நாடற்றவர்கள்' என்ற நாமகரணத்துக்கு ஆளாக்கப்பட்டதன் மூலம் இலங்கைத் தமிழ்பேசும் இனத்தின் சோக வரலாற்றில் மற்றுமொரு வேதனை அத்தியாயம் தொடக்கி வைக்கப்பட்டது. அதே நேரத்தில் மலைநாட்டுத் தமிழர்களது குடியுரிமைக்கு பாடுபடுவேன்—போராடுவேன் என்று 1947ம் ஆண்டு கையெழுத்திட்டு எழுதிக்கொடுத்த உறுதிமொழி—, கேவலம் ஒரு அமைச்சர் பதவிக்காக காங்கிரஸ் தலைவர் திருவாளர் பொன்னம்பலம் அவர்களால் கிழித்தெறியப்பட்டதன் மூலம் தமிழினத்தின் வரலாற்றில் இன்னொரு இருண்ட துரோக அத்தியாயமும் எழுதப்பட்டது.

## இரகசியத் திட்டங்கள்

தமிழ்மக்களது அரசியற் பலத்தை குறைத்து. சிங்களவர்களது கையில் ஏகபோக அரசியல அதிகாரத்தைகாலமெல்லாம் வைத்திருக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டுவந்த பெரிய சேனநாயக்காவின் சாணக்கிய மூளை 1948 முற்பகுதியில் இலங்கை 'சுதந்திரம்' பெற்றதும் மிகத் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. 25 இலட்சம் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளில், ஒரே நேரத்தில் கைவைப்பது ஆபத்தானது என்பதைப் புரிந்துகொண்டு வெள்ளையன் படித்துக் கொடுத்துவிட்டுப் போன பிரித்தாளும் தந்திரத்தை பெரிய சேனநாயககா மிக நுட்பமாகக் கையாண்டார். அவரது மூளையின் ஒரு பாதியில் தமிழ்காங்கிரஸ தலைவரை, சிங்களவர் அஞ்சும் சிங்கமென்று அப்போது வர்ணிக்கப்பட்டவரை, அமைச்சர் பதவியென்ற எலும்புத் துண்டைவீசி தன்பக்கம் இழுப்பது என்று திட்டமிட்டார். அவரது மூளையின் மறுபாதியில் இந்தியத் தமிழர்கள் என்று அழைக்கப்பட்ட தமிழ்மக்களை நாடற்றவர்களாக மாற்ற இரண்டு அநாகரீக சட்டங்களை உருவாக்க அடிகோலினர்.

இரண்டிலும் பெரிய சேனநாயக்கா பூரண வெற்றி கண்டார். அதன் பலனை இன்னும் நாம் அனுபவிக்கிறோம். தனது அரசியற் சாணக்கியம் சிங்களவரை ஆள்வோராகவும் தமிழர்கள் ஆளப்படுவோராகவும் மாற்றி விட்டதைப் பார்த்து பெரிய சேனநாயக்காவின் ஆவி இன்று நிச்சயம் நிம்மதியாக உலவும்!

## குடியுரிமை மசோதா

தமிழினத்தின் சரிபாதிக்கு மேற்பட்ட தொகையினரை பிறந்த நாட்டில் அநாதைகளாக்கிவிட்ட இலங்கைக் குடியுரிமை மசோதா 1948ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 19ம் நாள் இரண்டாம் முறை வாசிக்கப்பட்டது.

பெரிய சேனநாயக்கா தனக்கே உரிய பாணியில் மசோதாவின் விதிகளை வாசித்து, ஆங்காங்கு சில வார்த்தைகளில் விளக்கம் மட்டும் கொடுத்துவிட்டு அமர்ந்துவிட்டார். அவரது சுருக்கமான கருத்து சுதந்திரம் பெற்றுவிட்ட இலங்கைக்கு தனது குடிமக்கள் யார் யாரென்பதை நிர்ணயிக்கும் கடமையும் உரிமையும் இருக்கென்றும், அதை மட்டுமே அம்மசோதா நிறைவேற்றுகின்றதென்றும், எந்தவொரு குறிப்பிட்ட மக்களையும் மனதில் வைத்து அம்மசோதா கொண்டுவரப்படவில்லையென்றும் 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்ற விதத்தில் பேசினார். இப்படி நோக்கம் ஒன்றாக இருக்க பேச்சு பிறிதொன்றாக அமையுமாறு தந்திரமாக நடித்து காரியத்தை சாதித்துவிடும் குள்ளநரிப் புத்தி பெரிய சேனநாயக்காவுக்கு கைவந்த தனிக்கலை!

## இடதுசாரியினர் அன்றும்-இன்றும்

மசோதாவை எதிர்த்து அன்றைய டாக்டர் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பீட்டர் கெனமன் முதலியோர் காரசாரமாகப் பேசினர்.

குறிப்பிட்ட மசோதா படுபிற்போக்கானதென்றும் மலைநாட்டு தொழிலாளர்களது குடியுரிமைக்கு உலை வைக்கவே கொண்டுவரப்பட்டதெனப் பகிரங்கமாக மூவரும் குற்றம்சாட்டினர்.

'இட்லருடன் இனத்துவேசம் ஒழிந்ததென்று நினைத்தேன். ஆனால் உலகத்தின் கடைசி இனத்துவேசி தான் தான் என்ற 'பெருமையை' முதலமைச்சர் தட்டிக் கொண்டு போகப் போகிறார்' என்றார் டாக்டர் பெரேரா (பாராளுமன்றக் குறிப்பேடு 19/8/48-பக்கம் 1686).

'கனம் முதலமைச்சர் இம் மசோதாவைப்பற்றி பேசிவிட்டு அமர்ந்தபொழுது வெண்ணெயை தின்றுவிட்ட பின் பூனைக்கு ஏற்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் அவரது முகத்தில் தாண்டவமாடுவதை அவதானித்தேன்' என்று டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா (வெண்ணெயைதின்றுவிட்ட பூனையின் மகிழ்ச்சியையும், திருப்தியையும் மிஞ்சும்வண்ணம் டாக்டரது முகத்தில், ஐந்தேகால் இலட்சம்தோட்டத் தொழிலாளர் கப்பல் ஏறுவதைப்பார்த்து இன்று 1965ல் களிப்பு நர்த்தனமாடுவது வேறு கதை!) சொல்லம்பு கொண்டு சாடினார்! (குறிப்பேடு-பக்கம் 1716).

## உண்மையை மறைக்கவில்லை

களனிப் பிரதிநிதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் காலம்சென்ற பண்டாரநாயக்காவும் பேசியபொழுது சட்டம் இந்தியத் தமிழர்களுக்கெதிரானதென்பதை மறைக்க துளியும் எத்தனிக்கவில்லை.

இலங்கை இந்திய காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அறுவரும் மசோதாவை ஆவேசமாக எதிர்த்தார்கள்.

தமிழ்காங்கிரஸ் சார்பாக தந்தை செல்வநாயகம் பேசினார். அரசியலில் அக்கறை உள்ளோரும் கட்சியின் இளம் தோழர்களும் தந்தையின் பேச்சை ஆற அமர முழுதாகப் படித்துப் புரிந்து கொள்ளவேண்டும். அவரது பேச்சின் சுருக்கத்தையோ-சாராம்சத்தையோ தருவது அவரது தெளிவான தர்க்க ரீதியான வாதத்துக்கு ஊறு செய்துவிடும் என்றே அஞ்சுகிறேன். இருந்தும் அவரது பேச்சை முழுதும் படிக்கும் ஆவலை தூண்டவேண்டுமென்ற எண்ணத்தில் அவரது பேச்சின் சில பகுதிகளை மட்டும் தருகிறேன்.

## தந்தையின் பேச்சு

'7 இலட்சம் மக்களும் நாளையே சிங்கள இனத்துடன் ஒன்றுகலந்து விடுவதாக இருந்தால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டே இருக்கமாட்டாது. ஒருகுறிப்பிட்ட இனத்தின்மீது பாரபட்சமாக சட்டம் ஏவப்படுவதே, நான் இதனை எதிர்ப்பதற்கு பல காரணங்களில் ஒன்றாகும்.

கனம் நிதிஅமைச்சர் (ஜே. ஆர். ஜெயவர்த்தன) அவர்கள் ஐக்கிய இலங்கைபற்றி கொண்டிருக்கிற எண்ணத்துக்கு வேறு மாதிரியான ஐக்கிய இலங்கை பற்றி நான் பல ஆண்டுகளாக என் மனதில் எண்ணி வந்திருக்கிறேன். அதைப்பற்றி வெகு சமீபகாலமாக கனவு கண்டு கொண்டிருந்தேன். கனம் நிதி அமைச்சர் தலைமை தாங்கிய மொழிக்குழுவுக்கு முன் நான் சாட்சியமளித்தேன் அப்போழுது நான் சொன்னேன் "தமிழ்—சிங்களம் இரண்டு மொழிகளும் நீதிமன்றம் சட்டசபை போன்ற இடங்களிலும் மற்ற ஏனைய இடங்களிலும் உபயோகிக்கப்பட வேண்டும். அவை இரண்டும் சரிசமமான அந்தஸ்தில் வைக்கப்படவேண்டும்..." ஆனால் நிதி அமைச்சர் வேறுவிதமான முறையில் அறிக்கை தயாரித்தார்... ... இதற்கும் (அறிக்கைக்கும்)இந்த மசோதாவுக்கும் நெருங்கிய தொடர்பு—சம்பந்தம் இருக்கிறது. அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட இனமக்களை பல முனைகளில் நசுக்க முற்படுகிறது.

எனது கட்சியின் சார்பாக இம் மசோதாவை கடுமையாக எதிர்க்கிறேன். காரணம் சகல விதத்திலும் குடியுரிமைபெற தகுதியுடைய இந்த நாட்டு குடிமக்களை அப்படி செய்யவொண்ணாது இச்சட்டம் மறுக்கிறது'.

## புறமுதுகில் கத்திபாய்ச்சினார் பொன்னம்பலம்

தந்தை செல்வநாயகம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மசோதாவைக்கடுமையாகஎதிர்ப்பதாக பேசினாலும், கட்சியின் தலைவர் பொன்னம்பலம் அவரது பின் முதுகில் ஏற்கனவே கத்தி பாய்ச்சி விட்டார் இதை தந்தை அப்போது தெரிந்து வைத்திருக்கவில்லை.

தெரியவும் நியாயமில்லை. மசோதாவின் 'விதி'யை ஏற்கனவே செனநாயக்கா பொன்னம்பலத்தின் உதவியுடன் நிர்ணயித்து விட்டார்.

குடியுரிமை மசோதாவை எதிர்த்து இரண்டு தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் மட்டுமே வாக்களிப்பார்கள் என்று இரகசியமாக டி. எஸ் செனநாயக்காவுக்கு பொன்னம்பலம் முன்பே வாக்குக் கொடுத்து விட்டார். அதற்கு போதிய காரணமும் இருந்தது. அமைச்சர் பதவிக்கு அவர் ஏற்கனவே இரகசியமாக 'பேரம்' பேசித்தீர்த்து விட்டார். அதன்படி ஏனைய தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகளை வாக்கெடுப்பு நேரத்தில் பாராளுமன்றத்துக்கு வெளியே அனுப்பினர் திரு. பொன்னம்பலம்.

## குளியலறையில் வன்னியசிங்கம்

இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரையும் சந்தேகப் பிரசைகளாக்கும் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப் பாராளுமன்றத்துக்கு வந்திருந்த அன்றைய கோப்பாய் பிரதிநிதி திரு வன்னியசிங்கம் அவர்கள் தனிப்பெருந்தலைவரது கட்டளைக்கிணங்க பாராளுமன்ற குளியலறையில் ஓடி ஒழிந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் வாக்கெடுப்புக்கு சில விநாடிகளுக்கு முன் ஏற்பட்டது! திரு. வன்னியசிங்கம் மசோதாவை எதிர்த்து வாக்களிக்க முயற்சித்தால், பெரிய செனநாயக்காவுக்கு கொடுத்த 'வாக்குறுதியை'க்காப்பாற்ற தானே ஓடி ஒழிய வேண்டியிருக்குமென்று பொன்னம்பலம் காலில் விழாத குறையாக கெஞ்சி மன்றாடினார்! இவ்வளவிற்கும் காங்கிரஸ் பாராளுமன்றக்குழு மசோதாவை எதிர்த்து அனைவரும் வாக்களிப்பதென அதற்கு முதல் நாள் கூடிய கூட்டத்தில் முடிவு செய்திருந்தது!

## பொன்னம்பலம் பெற்ற பரிசு

குடியுரிமைச்சட்டம் நிறைவேறி இரண்டு கிழமைகள் முழுதாக நகரவில்லை. தங்கள் துரோகத்திற்கு பரிசாக திரு. பொன்னம்பலம் முழு அமைச்சர் பதவியும் திரு. கனகரத்தினம் துணை அமைச்சர் பதவியும் பெற்று டி. எஸ். செனநாயக்காவின் பாதாரவிந்தங்களில் படைக்கலங்களை போட்டுவிட்டு நிபந்தனையின்றிச் சரண்புகுந்தனர்.

## அரசியல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளவந்தார் தொடுக்கும் அழிவுப் பாணங்களைத் தடுத்து நிறுத்த முடிகிறது.

தமிழரசுக் கட்சியின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தமிழ் பேசும் மக்கள் பரிபூரணமாக உணர்ந்தமையினாலேயே தேர்தற் களத்தில் தமிழரசுத் தலைவர்கள் வெற்றிவாகை சூடவும் வீணர்கள் வீழ்ச்சியடையவும் முடிகிறது.

சந்தர்ப்பவாதங்களை தமிழ் பேசும் மக்கள் இன்னும் நம்பி ஏமாற மாட்டார்கள் என்பதை எடுத்துக் கூறுகிறேன்.

கவிஞர் காசி. ஆனந்தன், திரு சாம். தம்பிமுத்து, திரு. என். அருளானந்தம், திரு ஜே என் கென்றி, திரு. இ இராசதுரை, திரு. சாமிமுருகமூர்த்தி, திரு. வ. பாலசிங்கம், திரு எஸ். கே. பாவிலுப்பிள்ளை, திரு அற்புதராசா குரூஸ் ஆகியோருட்பட வேறு பலரும் இக் கூட்டத்தில் பேசினார்கள்.




ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174 SEA STREET, COLOMBO 11

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்கால வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நெ. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் சில வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், கொள்கைகள் உண்டு. இவற்றை அடைவதற்கு ஒவ்வொரு கட்சியும் உழைப்பது அரசியல் நியதி. ஒவ்வொரு கட்சியும் பொதுத் தேர்தல் நடைபெறுங் கால் அவ்வக் கட்சிகளின் கொள்கைகளை முன் வைத்துத் தேர்தலில் போட்டியிடுவது வழக்கம். தேர்தலிற் போட்டியிடுவதற்காக ஒவ்வொரு கட்சியும் நிறுத்தும் வேட்பாளர்கள் அக்கட்சியின் கொள்கைகளில் ஓரளவு ஊறித்திளைத்தவர்களாக இருப்பது வழக்கம் இது அரசியற் பொது நியதியுமாகும். ஆனல், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், இந்த பொது அரசியல் நியதிகள் அனைத்தையும் சிறிதேனும் ஏற்றிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் காங்கிரஸ் கட்சி ஆரம்ப நாள் முதல் நிலையான ஒரு கொள்கையற்ற கட்சியாகவே இயங்கி வந்திருக்கிறதென்ற உண்மையைப் பல சந்தர்ப்பங்களிலும் பலர் எடுத்துக் கூறி விட்டார்கள். இன்று தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக தேர்தலிற் போட்டியிடுபவர்கள் எந்தளவு தூரம் கட்சி விசுவாசம் உடையவர்கள் என்பது இப்பகுதியில் பரவலாகக் கேட்கப்படும் கேள்வியாகும்.

—வட மாகாணப் புதினம்—

# தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள்

## கங்கையுடன் வந்தவர்
## தமிழ் காங்கிரசில் கலந்தார்

### கிளிநொச்சி

கிளிநொச்சித் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவர் முன்னாள் தமிழர் அடிப்படை உரிமைகள் முன்னணிக் கட்சித் தலைவராவர். ஆரம்பகாலத்தில் திரு. பொன்னம்பலம் அவர்களுடன் இணைந்திருந்த திரு. குமாரசாமி, 1953ம் ஆண்டு அமைச்சரவையிலிருந்து திரு பொன்னம்பலம் வெளியேற்றப்பட்ட பொழுது அவருடன் சேர்ந்து வெளியேறியிருக்க வேண்டும். ஆனல் திரு. பொன்னம்பலம் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னரும் திரு. குமாரசாமி துணை அமைச்சராக திரு. கொத்தலாவலையின் அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்துள்ளார். 1956 ம் ஆண்டு களனி மாநாட்டில் ஐ. தே கட்சி சிங்களம் மட்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட பின்னரே திரு குமாரசாமி ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேறினர்.

ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேறிய திரு குமாரசாமி இந்த இடைக் காலத்தில் தமிழர் அடிப்படை உரிமைகள் முன்னணி என்ற ஒரு கட்சியையும் அமைத்தார். 1960ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிற் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக சாவகச்சேரித் தொகுதியிற் போட்டியிட்டார். தேர்தல் முடிவடைந்ததும் தமிழ் பேசும் மக்களையும் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் மறந்தார். ஓராண்டு காலத்திற்கு முன்னர் மீண்டும் தமிழர் அடிப்படை உரிமைகள் முன்னணிக்கு உயிரூட்ட முற்பட்டார். பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றுவிட்டதுடன் அம் முயற்சியும் நின்றது.

மீண்டும் பொதுத் தேர்தல் வந்ததும், சாவகச்சேரித் தொகுதியில் இருகட்சைகளாகப்பட்ட அடியின் நிமித்தம் கிளிநொச்சித் தொகுதியை நாடி ஓடிவந்துள்ளார்.

கிளிநொச்சித் தொகுதியை நாடிவரும் பொழுது திரு குமாரசாமி மஞ்சள் கொடியுடனும் "மாவலிகங்கையுடனுமே" வந்தார். 1965ம் ஆண்டு சனவரித்திங்கள் 11ம் திகதி காலை 10 மணிவரைக்கும் மஞ்சள் கொடியுடன் காணப்பட்ட திரு குமாரசாமி, 10 மணிக்கு மேல் காங்கிரஸ் கொடியையும் சின்னத்தையும் ஏற்றுக் கொண்டு காங்கிரஸ் வேட்பாளராக மாறினர்.

### திடீர் மாற்றம்

சனவரித் திங்கள் 10ம் திகதி இரவு கிளிநொச்சியில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டம் திரு. சிவசுந்தரத்திற்கு ஆதரவாகவே நடைபெற்றது கூட்டத்தில் உரை நிகழ்த்திய அனைவரும் தமிழரசுக் கட்சியையும் திரு. குமாரசாமியையும் வைது தீர்த்தார்கள் ஆனல் 11 ம் திகதி குமாரசாமி அவர்களை தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக அதே தொகுதியில் போட்டியிட, தமிழ் காங்கிரஸ் கட்சி அனுமதி வழங்கியுள்ளது.

பத்தாம் திகதி இரவு நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றன தமிழ் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், 1960 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிற் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட திரு அன்ரன் பொன்னம்பலம் கூட்டத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்தாராம். திரு. அன்ரன் பொன்னம்பலம் வந்து நிற்பதை அறிந்ததும் திருவாளர்கள் ஜி. ஜி பொன்னம்பலமும், சிவசுந்தரமும் மேடையிலிருந்து இறங்கிச்சென்று திரு அன்ரன் பொன்னம்பலத்தை மேடைக்கு அழைத்து வந்தார்களாம். அன்ரன் பொன்னம்பலம் மேடைக்கு வந்ததும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த திரு. யோகலிங்கம் என்பவர் "திரு. அன்ரன் பொன்னம்பலம் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்" என்று ஒலிபெருக்கியில் அறிவித்தாராம்.

திரு. அன்ரன் பொன்னம்பலம் தான் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு குமாரசாமியை ஆதரிப்பதாகவும், காங்கிரஸ் கூட்டத்தைப் பார்க்க வந்தபொழுது திரு ஜி ஜி பொன்னம்பலம் தன்னை மேடைக்கு அழைத்துவந்ததாகவும், இக்கூட்டத்திற்கு தான் தலைமை தாங்க முடியாது என்றும், தமிழ் மொழியின் உரிமைக்கு போராடக் கூடியவருக்கு கிளிநொச்சி வாக்காளர் வாக்களிக்க வேண்டுமென்றும் கூறிவிட்டு, வெளியேறிவிட்டாராம்.

அன்றைய தினம் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டம் அமைதியற்ற சூழ்நிலையிலேயே முடிவுற்றதாம் இவற்றைக் கவனித்த திரு. ஜி ஜி பொன்னம்பலத்துக்கு திரு. சிவசுந்தரம் மதிநுட்பம் நிறைந்த அறிவாளியாகத் தென்படவில்லை போற்தெரிகிறது எனவேதான் திரு. குமாரசாமியைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்துவதென்று முடிவுசெய்தாராம்.

மாவலிகங்கையுடன் கிளிநொச்சித் தொகுதிக்கு வந்த குமாரசாமி அதை (மாவலிகங்கையை) இடையில் நிறுத்திவிட்டு காங்கிரசுடன் தன்னை இணைத்துக் கொண்டாராம் கிளிநொச்சித் தொகுதி வாலிபர்களுக்கு வேலை தேடித் தருவதாகக் கூறிவந்த திரு. குமாரசாமி தமிழ் காங்கிரஸ் கட்சியில் தற்காலிகமாகத் தனக்கு ஒரு வேலை தேடிக் கொண்டார்.

முன்னாள் காங்கிரஸ் பிரதிநிதியாகவும், ஐ. தே. கட்சியில் அரை அமைச்சராகவும், அடிப்படை உரிமை முன்னணித் தலைவராகவும் இருந்த திரு. குமாரசாமி இரண்டு பணி நேர இடைவெளிக்குள் காங்கிரஸ் கட்சியின் புதிய கொள்கைகளில் ஊறித்திளைத்து இன்று தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடுகிறார்.

## வேலை தேடித் தருவேன் என்றவர்
## காங்கிரசில் வேலை தேடிக்கொண்டார்

### பருத்தித்துறை

தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடுபவர் திரு. நடராசா அவர்கள் இவர் கடந்த பொதுத் தேர்தலிலும் இதே தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டுள்ளார். ஆனல் திரு. நடராசா அவர்கள் இந்த இடைக் காலத்தில் திரு. பொன்னம்பலத்தின் காங்கிரஸ் கட்சியையோ, அல்லது திரு மு. சிவசிதம்பரத்தின் காங்கிரஸ் கட்சியையோ ஆதரிப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அறுபதாம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் திரு. நடராசா தன்னை ஒரு தமிழ் காங்கிரஸ் வாதியாக எந்தச் சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொள்ளவில்லை. குறிப்பாக 1962-ம் ஆண்டு அமைச்சர் திரு இலங்கரத்தின பருத்தித்துறைக்கு வருகை தந்திருந்தபொழுது திரு நடராசா அவர்கள் மாலை சூட்டி வரவேற்றுள்ளார். திரு. நடராசா அவர்கள் தொடர்ந்து தமிழ் காங்கிரஸ்காரராகவே இருந்திருக்கிருர் என்றல் அமைச்சரை வரவேற்பது தான் தமிழ் காங்கிரசின் கொள்கையா என்ற கேள்வி எழுகிறது.

அமைச்சர்களை வரவேற்பது தமிழ் காங்கிரசின் கொள்கையென்றல் 1959ம் ஆண்டு அமைச்சர் ஜெயசூரியா யாழ் நகர் வந்த பொழுது பொன்னம்பலம் எதிர்ப்புத்தெரிவித்ததுஏன்? தமிழ் காங்கிரஸ் கட்சி அமைச்சர்களை வரவேற்று மாலை சூட்டுவதென்று இடைக் காலத்தில் முடிவு செய்திருந்தால் தமிழ் காங்கிரஸ் உறுப்பினரான திரு. மு. சிவசிதம்பரம் 1962-ம் ஆண்டு அமைச்சர் இலங்கரத்தினவை வரவேற்க பகிரங்கமாக முன் வராதது எதற்காக?

பருத்தித்துறைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராக இன்று போட்டியிடுகின்ற திரு. நடராசா அமைச்சர் இலங்கரத்தினவை வரவேற்ருர். அதே நேரத்தில் உடுப்பிட்டித் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. மு சிவசிதம்பரம் அமைச்சர் இலங்கரத்தினவின் வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை. இவர்கள் தான் இன்றைய தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள்.

### உடுப்பிட்டி

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் 'வெண்சுருட்டு வீரர்' திரு சிவசிதம்பரத்திற்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள உறவு முறை பற்றி நாடறியும். கடந்த பாராளுமன்ற காலத்தில் திரு. சிவசிதம்பரம் எப்படி நடந்துகொண்டார் என்பதை தமிழ் பேசும் மக்கள் தெரிந்துவைத்திருக்கிருர்கள். 1961-ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தை பொன்னம்பலம் "நன்சென்ஸ்" என்று கூறிய பொழுது திரு. சிவசிதம்பரம் சத்தியாக்கிரகத்தில் நிற்கிருர் ஏன்? 1960ம் ஆண்டு மார்ச் மாதம் எதிர்கட்சிகளுடன் சேர்ந்து வாக்களிக்க வேண்டாம் என்று திரு பொன்னம்பலம் ஐ தே. கட்சிக்கு ஆதரவாக அறிக்கைவிட்டாராம். அதைச் சிறிதும் மதிக்காது திரு. சிவசிதம்பரம் நடந்துள்ளார். இவர் இன்று தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்.

### காங்கேசன்துறை

காங்கேசன்துறையில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுபவர் திரு. க. சிறிபாஸ்கரன். 1957-ம் ஆண்டு பெப்ரவரி 4 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடையடைப்பு கடை திறப்புப் போராட்டத்தில் திரு. பொன்னம்பலத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர் திரு பாஸ்கரன். அன்றைய தினம் பிற்பகல் தமிழ் காங்கிரசைச் சேர்ந்தவர்களெனக் கூறப்பட்ட காடையர்கள் தமிழரசுக் கட்சித் தொண்டர்களை யாழ்ப்பாணம் ஆனைப் பந்தியடியில் வைத்துத் தாக்கிய பொழுது திரு பாஸ்கரனும் அந்தக் காடையர்களின் கைவரிசைக்கு இலக்கானர் திரு பாஸ்கரன் மோட்டார் சைக்கிளில் வரும் பொழுது அவரின் சைக்கிளைக் காங்கிரஸ் காடையர்கள் பிரட்டினர்களென்றும். இதனல் திரு. பாஸ்கரனின் கை உடைந்ததென்றும் அன்று கூறப்பட்டது. அன்றைய தினம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற துக்கதினக் கூட்டத்திற்கு முறிந்த கையுடன் வந்து திரு பாஸ்கரன் தலைமை தாங்கினர் இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலத்தைக் கடுமையாகத் தாக்கினர் திரு. பாஸ்கரன்.

கடந்த இரு வருடங்களாக திரு பாஸ்கரன் தன்னை ஒரு இடதுசாரியென்று பல இடங்களிலும் கூறிவந்துள்ளார் என்பது பலருக்குத் தெரியும். இச்சந்தாபபத்தில் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி எல்லாம் வகுப்புவாதக் கட்சிகள் என்று கூறியுள்ளார் இப்பொழுது அதே பாஸ்கரன் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகியுள்ளார்.

### நல்லூர்

நல்லூர்த் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவர் திரு. சி. அருளம்பலம் இவர் நீண்ட காலமாக திரு. பொன்னம்பலத்துடனும், தமிழ் காங்கிரஸ் கட்சியுடனும் இணைந்து செயற்பட்டு வருவதாகவும், தமிழ் காங்கிரஸ் கொள்கையில் ஊறித் திளைத்த ஒருவர் என்றும் தமிழ் காங்கிரஸ் வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு. அருளம்பலம் தான் பழம் பெரும் தமிழ் காங்கிரஸ் வாதியென்றும் கூறியுள்ளாராம். 1947ம் ஆண்டு திருவாளர்கள செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றோரை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களாக நிறுத்த வேண்டாம் என்று திரு ஏ. வி. குலசிங்கம் போன்ற பெரியார்கள் கூறியும் திரு. பொன்னம்பலம் அவர்களை நிறுத்தியதாகவும், தான் (திரு. அருளம்பலம்) கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அமைய திரு வன்னியசிங்கத்தின் வெற்றிக்காக உழைத்ததாகவும் கூறினராம்.

திரு. பொன்னம்பலத்தினதும் தமிழ் காங்கிரஸ் கட்சியினதும் முடிவைச் சிரமேற் கொண்டு கடமையாற்றி வருவதாகக் கூறிக்கொள்ளும் திரு அருளம்பலம் அவர்கள் 1954ம் ஆண்டு அன்றைய பிரதமர் திரு. ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பொழுது வரவேற்றது ஏன்?

திரு பொன்னம்பலம் தான் பட்ட அடியின் காரணமாக திரு. கொத்தலாவலையை வரவேற்க

(13ம் பக்கம் பார்க்க)

## அமைச்சருக்கு ஆலவட்டம் பிடித்தவர்
## அசல் தமிழ் காங்கிரஸ் வாதியாம்




# மகளின் மணத்துக்காக மகனை வெறுத்த தந்தை



வயது வந்த பெண்ணை எத்தனை நாளைக்குத் தான் வீட்டில் வைத்திருக்க முடியும்? தருமலிங்கம் தனது மகளை எப்படியாவது ஒருவனின் கையில் பிடித்துக் கொடுத்துவிட எத்தனம் பண்ணுகிறார். ஆனால் முடியவில்லை.

இளமையிலேயே படிக்காமல், முரடனாகவும் தடியனாகவும் வளர்ந்துவிட்ட தருமலிங்கத்தின் மூத்த மகன் சோமு ஊரில் ஒரு ரௌடி என்ற பட்டத்தோடு உலவினால், அவன் தங்கையை எவன் மணம்முடிக்க வருவான்? சோமுவின் ரௌடித்தனம் நீங்க வழி பிறக்காததைக் கண்டு தருமலிங்கம் ஒரு முடிவுக்கு வந்தார். தனக்கு ஆண் பிள்ளைகளே இல்லை என்றும் சிவகாமி ஒருத்தியே மகள் என்றும் பெண்பார்க்கவந்த மணமகனின் சுற்றத்தாரிடம் கூறிவிட்டார்.

ஆயிரந்தான் முரடனானாலும் சிவகாமி தன் அண்ணனின் மேல் உயிரையே வைத்திருந்தாள். மணமகனும் அவன் சுற்றத்தாரும் போனவுடன் தன் தந்தையை நெருங்கிய சிவகாமி, 'ஏனப்பா, மலைபோல எனக்கு அண்ணன் ஒருவன் இருக்கையில, 'எனக்கு ஆண்மகனே இல்லை', என்று கூறுவதா? அப்படி ஒரு பொய் சொல்லித்தான் எனது திருமணம் நடைபெற வேண்டுமா?' என்று விம்மலுக்கிடையே கேட்டாள்.

இதைக்கேட்ட தருமலிங்கம், 'எனக்குமட்டும் நான் பெத்தமகன்மேலே பாசம் இல்லையா? எல்லாம் உன் நன்மையைக் கருதித்தான் பொய்சொல்லவேண்டியிருந்தது' என்று சொல்லி சிவகாமியைத் தேற்றினார்.

ஏ. எல். எஸ். தயாரிக்கும் 'சாந்தி'க்காக இக்கட்டம் சாரதா ஸ்டுடியோவில் சுடப்பட்டது. சோமுவாக ராஜேந்திரனும், சிவகாமியாக மணிமாலாவும், தருமலிங்கமாக சகஸ்ரநாமமும், மணமகனாக குமாரும் நடித்தனர். பீம்சிங் டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை வசனத்தை சோலைமலை எழுதியுள்ளார்.

## ஸ்டுடியோவில்

## தஞ்சை ராமையாதாஸ் மறைந்தார்

நூற்றுக்கும் அதிகமான தமிழ் படங்களுக்கு கதை வசனம், பாடல்கள் எழுதியவரான தஞ்சை ராமையாதாஸ் கடந்த வெள்ளிக்கிழமை 15-ம் தேதி மாலை வேலூரில் காலமானார் என்ற செய்தி திரை உலகத்தையே துணுக்குற வைத்தது.

டப்பா சங்கீதம் தமிழ் சினிமாக்களில் புகுந்த பொழுது 'ஜாலிலோ ஜிம்கானா' போன்ற தமாஷ் பாடல்களை இயற்றி ரசிகர்களிடத்தில் தனியான மதிப்பைப் பெற்றவர் தஞ்சை ராமையாதாஸ். சொந்தமாகவும் தமது மகன் பேரில் 'ரவி புரொடக்ஷன்ஸ்' என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை நிறுவிச் சில படங்களைத் தயாரித்துள்ளார்.

சென்னை கோடம்பாக்கத்தில் (ஜெமினி படம் அலுவலக அருகாமை) உள்ள கவிஞர் ராமையாதாஸின் இல்லத்திலிருந்து கடந்த சனிக்கிழமை பிற்பகல் கவிஞர் ராமையாதாஸின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ஏ வி எம். ஸ்டுடியோவின் பின்புறத்தில் உள்ள சாலிக் கிராமம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது சினிமா உலகப் பிரமுகர்கள் அனைவரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

திரு. ராமையாதாஸ் எப்பொழுதும் நெற்றியிலே விபூதி அணிந்தே காணப்படுவார். கதர் ஆடையே அணிவார். பழுத்த காங்கிரஸ் வாதியும் கூட. அவருடைய இழப்பு தமிழ் சினிமா உலகத்துப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததில் வியப்பில்லை.



தமிழகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிக் கொடி நாட்டிய 'கற்பகம்' என்ற தமிழ்ப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது. கே. ஆர். விஜயா, இப்படத்தில் சிறப்பாக நடித்துள்ளார். கற்பகத்தில் சாவித்திரியுடன், பேபி ஷகிலா இப்படித் தோன்றுகிறார்.

## மணி பாகவதரின் சீடர் கணேசசுந்தரம்

இலங்கையில் கதாப் பிரசங்கம் செய்வதில் தலைசிறந்து விளங்கும் வண்ணை திரு. சி எஸ் எஸ். மணிபாகவதர் அவர்களின் பிரதம சீடரான திரு. வி. எஸ் கணேசசுந்தரம் அவர்களின் கதாப் பிரசங்கங்களை கொழும்பிலுள்ள ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலும், தட்டாரத் தெரு பால சுப்பிரமணிய சுவாமி கோயிலிலும் கேட்கும் வாய்ப்புக் கிட்டியது.

சைவத்தின் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை மிக எளிய நடையில் யாவரும் விளங்கும் முறையில் இவர் எடுத்துக்கூறும் திறன் பாராட்டத்தக்கது. தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்றபடி சிறு கதைகளையும் உபமானங்களையும் சேர்த்து, நன்கு இரசிக்கும்படி கதாப் பிரசங்கம் செய்கிறார் நல்ல சாரீர அமைப்புக் கொண்டிருப்பதனால் கேட்போர் உள்ளத்தில் இன்பலாகிரியை ஏற்றும் வண்ணம் தமிழ்ப் பாடல்களைப் பாட முடிகிறது.

பார்ப்பதற்கு இளைஞராகக் காணப்பட்டாலும் பக்குவமான கருத்துக்களை தமது குருநாதரைப் போன்றே எடுத்துக் கூறுவதனால் இத்துறைக்கு வயது முக்கியமல்ல என்பது தெளிவாகிறது. வளர்ந்துவரும் இவ்விளம் கலைஞரை ஈழத் தமிழகம் நன்கு பயன்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

கொழும்பில் திரு. கணேசசுந்தரம கதாப்பிரசங்கம் செய்த வேளையில் பக்கவாத்தியக் குழுவில் ஒரு சிறுவன் மிருதங்கம் வாசித்தார். செல்வன் பி. கணேசன் என்ற இச் சிறுவன், எவரிடத்திலும் சிட்சை பெறாமலே தாள வாத்தியத்துறை ஞானம் பெற்று விளங்குகிறான். பார்ப்போர் வியக்கும்படி தாளம் முழங்கும் செல்வன் கணேசனுக்கு வருங்காலம் சிறந்த இடம் வழங்கியே தீரும்.

—பானு.

# பணம் தரும் பரிசு: புதுமுகங்களே

பல கொள்ளைகளை நடாத்தும் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தலைவியே இயக்குபவளாக ஒரு பெண் இருக்கிறாளென்றால் ஆச்சரியப்படாமலிருக்க முடியாதல்லவா? அப்பெண்மணியை எப்படியாவது தங்கள் வலைக்குள் சிக்கவைத்துவிட பொலிஸ் படை எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

இக் கொள்ளைக் கூட்டத்தை மடக்க புதிய யுக்தியை பிரபல படத்தயாரிப்பாளர் சாண்டோ சின்னப்பாதேவரின் சகோதரரான சுப்பையா தேவர் ஏற்படுத்தியிருக்கிறார் எல்லாம் அவருடைய நிறுவனமான சூர்யா பிலிம்ஸ் தயாரிக்கும் 'பணம் தரும் பரிசு' படத்துக்காகத்தான். பொலீசுக்கு டிமிக்கி கொடுத்துவரும் பெண் கொள்ளைக்காரியை மடக்கும் அசகாய சூரத்தனங்களை வைத்தே கதையை அமைத்துள்ளனராம்.

புதுமுகங்களான திருச்சி சௌந்தரராஜன், மணவழகன், ராமன், ராமலிங்கம், பிரபாகரன் சிட்டிபாபு, திலகம், ரமணதிலகம், ரத்னா ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

இப்படத்தின் பாடல்கள் எழுதியவர்கள், இசையமைப்பாளர், டைரக்டர், முதலிய சகலரும் திரை உலகுக்கு ஓரளவு புதியவர்களே என்பது விசேட அம்சமாகும். படம் அடுத்தமாதம் திரைக்கு வந்துவிடுமாம்.

## நடக்கவிருப்பவை

## இருபது நாழிகை

கண்டி ஐக்கிய வளர்ச்சிக் கழகத்தாரின் 'இருபது நாழிகை' நாடகம் 6-3-65 ல் புஸ்பதான மண்டபத்தில் மேடை ஏற இருக்கின்றது. இதற்கான ஆரம்ப வேலைகள் 16-1-65 சனிக்கிழமை காலை 10 மணியளவில் கழகக் காரியாலயத்தில் நடைபெற்றன. இதன் கதை வசனத்தை மகிந்தன் எழுத, பாடல்களையும் இசை அமைப்பையும் எஸ் யேசுநாயகம் ஏற்றுள்ளார்.

இந்நாடகத்தில் சில்லையூர் மரியநாயகம், மகிந்தன், கணேசன், விஸ்வநாதராசா, நினைவுச்சின்னம், பெருமாள், காஞ்சனமாலா ஆகியோர் நடிக்கின்றனர். இயக்குநர்: நா. செல்லத்துரை, திசா—மூர்த்தி.

## 'பாபத்தின் பரிசு'

எதிர்வரும் பெப்ரவரி மாத முற்பகுதியில் சம்மாந்துறை 'நண்பனுக்கு நாடக மன்றத்தினர் 'பாபத்தின் பரிசு' நாடகத்தை அரங்கேற்றும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் இதன் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை யூ. செயின் ஏற்றுச் செய்து வருகிறார்.



சர்வதேசத்திரை வானில் இன்னும் ஒளிர் விட்டுக் கொண்டிருக்கும் ராஜ்கபூர் தயாரித்தளித்த வர்ணச் சித்திரமான 'சங்கம்' சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது. ராஜ்கபூருடன், வைஜயந்தி எவ்வாறு நெருங்கி நடித்துள்ளார் என்பதை இப்படம் எடுத்துக்காட்டுகிறது.

## கலாபிவிருத்திக் கழகம்

சம்மாந்துறைக் கலாபிவிருத்திக்கழகத்தின் 1965ம் ஆண்டின் வருடாந்தப் பொதுக் கூட்டம்மேற்கு அ. மு. க. பாடசாலை மண்டபத்தில் ஜனாப் யூ எம் முஸ்தபா ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களின் விபரம் பின் வருமாறு:

தலைவர்: ஜனாப், எஸ். ஏ, ரூசீக், உபதலைவர்: ஜனாப். எம். இஸட். பளீல்காரியப்பர், செயலாளர்: ஜனாப், ஐ உதுமாலெவ்வை, துணைச் செயலாளர்: ஜனாப். எம். மீராமுகையதீன், பொருளாளர்: ஜனாப். ஏ எம் இஸ்மாயீல். நிர்வாகசபை உறுப்பினர்கள்: ஜனாப்களான ஏ. எல். எம். யாசீன், எம். முகம்மது தம்பி, ஏ. அலியார்.

## தமிழ் காங்கிரஸ்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம் என்று கூறினாராம். ஆனால் திரு. பொன்னம்பலத்தின முடிவை ஏற்றுச் செயற்படுவதாகக் கூறிக்கொள்ளும் திரு அருளம்பலம் பந்தலிட்டு பூமாலை சூட்டி திரு கொத்தலாவலையை வரவேற்றார். இவர்தான் தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கையில ஊறித் திளைத்தவராம். திரு. பொன்னம்பலத்தின் முடிவுக்கு மாறாக திரு. கொத்தலாவலையை வரவேற்ற திரு அருளம்பலம் இன்று தமிழ் காங்கிரஸ்கட்சி வேட்பாளர்.

## வவுனியா

வவுனியாத் தொகுதியில் தமிழ்காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுபவர் திரு டி. சிவசிதம்பரம். இவர் கடந்த பொதுத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டவர். கடந்த நாலு ஆண்டு காலமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர் தன்னைத் தமிழ் காங்கிரஸ்வாதியாகக் காட்டிக்கொள்ளவில்லை. பல சந்தர்ப்பங்களில் தமிழ் காங்கிரஸ் உறுப்பினராக இருந்த முன்னைள் உடுப்பிட்டிப்பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரத்தின் முடிவிற்கும் மாறாகவும் பாராளுமன்றத்தில் நடந்துள்ளார். ஒரு சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் நடந்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் யாழ். அகற்றிச் சங்கமொன்றை இவர் இயக்கிவருவதாகவும் ஒரு குற்றச்சாட்டு இவர்மீது சுமத்தப்பட்டது.

திரு. டி. சிவசிதம்பரம்எந்தக் காலத்திலும் தமிழ் காங்கிரசுடன் தொடர்புகொண்டவராகத் தன்னைக் காட்டிக்கொண்டதுமில்லை, திரு பொன்னம்பலத்தை ஒரு தலைவராகக்கருதி ஏற்றுக்கொண்டதாகவும் கூறியதில்லை இவர்தான் இன்று வவுனியாத் தொகுதியில் போட்டியிடும் தமிழ்காங்கிரஸ் வேட்பாளர்

இவர்கள்தான் திரு பொன்னம 'பலத்தின், மதிநுட்பம் நிறைந்த அறிவாளிகள்!

—சகுனியன்.

## ஆயிரத்தில் ஒருவன்

பத்மினி பிக்சர்ஸ் படத்தில் முதன் முறையாக புரட்சி நடிகர் எம் ஜி ஆர். தோன்றுகிறார் அல்லவா? அப்படத்துக்கு 'ஆயிரத்தில் ஒருவன்' என்று பெயரிட்டுள்ளனர். நடிகை சந்தியாவின் மகளான ஆடலழகி ஜெயலலிதா புரட்சி நடிகருக்கு இணையாகத் தோன்றி நடிக்கிறார். கதாநாயகி பிறந்த நாட் காட்சிகள் அண்மையில் விஜயா ஸ்டுடியோவில் சுடப்பட்டன

நாகேஷ், விஜயலட்சுமி, நம்பியார், மாதவி ஆகியோரும் தோன்றுகின்றனர். இப்படம் முழு நீள வர்ண இசைச் சித்திரமாகத் தயாரிக்கப்பட்டுவருகிறது

# மலையகத் தமிழரும் பொதுத் தேர்தலும்

காணி அமைச்சராகவல்ல
## பி. மாணிக்கவாசகர்



'தமிழ் பேசும் மக்கள் கோரும் கூட்டாட்சி ஏற்பட்டு, அவ்வேளை தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அமைச்சர் அவை அமையப் பெறுமானால், அந்த மந்திரி சபையில் காணி, காணி அபிவிருத்தி-நீர்ப்பாசனம் முதலியவற்றைக் கண்காணிக்கும் அமைச்சராக இருக்க வல்லவர் திரு. பொன்னையா மணிக்கவாசகர் ஒருவரே' என்று தமிழரசுத் தந்தை உட்பட, திரு. மாணிக்கவாசகரை அறிந்த பலரும் கூறுவதுண்டு.

வீண் ஆடம்பரம் எதுவுமின்றி மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்து கொண்டு ஆளமான காரியங்களை முடித்துக்கொள்ளுவதில் மிகவும் திறமைசாலியான திரு. மாணிக்கவாசகரின் அரிய பல தொண்டுகளை பலரும் அறியமாட்டார்கள். அவர் செய்துவரும் தொண்டுகளை நாம் கூறுவதானால் இந்த இடமே போதாது.

அரசாங்க நில அளவைப் பகுதியினர்க்கோ, நீர்ப்பாசன இலாகாவுக்கோ தெரிந்திராத பாழடைந்த தூர்ந்து போய்க் கொடிய வனத்தின் நடுவே இருக்கும் பண்டையப் பெருமை வாய்ந்த குளங்களைப் பற்றிய தகவல்கள் யாவும் திரு. மாணிக்கவாசகருக்கே தெரியும். கிழக்கு மாகாணத்திலுள்ள எந்த அரசாங்க மேலதிகாரியும் நீர்ப்பாசன—கிருஷிகத் துறையில் திரு. மாணிக்கவாசகரை முறியடித்து விட முடியாது.

மட்டக்களப்புமாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களில் சகல புள்ளி விபரங்களையும் தொகுத்துக் கொடுத்து அதிகாரிகளையே திணறவைத்து வருபவர் திரு. மாணிக்கவாசகர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மனிதரே புக முடியாத காடடர்ந்த பிரதேசங்களுள், துப்பாக்கியைத் துணையாகக் கொண்டு, அலைந்து திரிவதே திரு. மாணிக்கவாசகரின் பொழுது போக்காக இருந்துள்ளது.

தமது கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டதும் நாடுசுற்றும் பணியை மேற்கொண்ட திரு. மாணிக்கவாசகர் இலங்கையை மீண்டும் ஒரு 'தானியக் களஞ்சிய'மாக அமைக்க ஏதுவான—பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடிய திட்டங்களை அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளார். ஆட்சியின் பாரபட்சக் கொள்கைகளால் அவருடைய திட்டங்கள் இன்று நிறைவேற்றப் படாமலிருக்கலாம். ஆனால் கிழக்கு மாகாணத்தின் வருங்காலம் அத்தனையும் திரு. மாணிக்கவாசகரின் திட்டங்களிலே தங்கியுள்ளன என்பதை மட்டும் கூற விரும்புகிறோம்.

அடுத்த மார்ச் 22-ம் நாள் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலில் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வாழ்விலே ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ண வேண்டும். (உண்டு பண்ணும்)

ஏமாற்றத்திற்கு ஆட்பட்டு, அதனால் ஏமாளிகளாகி, அடிமைப்பட்டு, அதே நேரம் கொடுமைப் படுத்தப்பட்டு, வாழ்வதா? அன்றி மாள்வதா? என்ற சுட்டத்தில் ஊசலாடும் நேரத்திலே, ஏதோ நீதியின் ஆணைப்படி தேர்தல் வந்துள்ளது.

### யாருக்கு வாக்களிப்பது?

ஆனால், மலையகத்தில் வாழும் தமிழ் பெருங்குடி மக்களான தோட்டத் தொழிலாளர்கள் இந்த அரசியல் மாற்றங்களை கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மலையகத்து மக்கள் சின்னா பின்னப் படுத்தப் பட்டுச் சிதறி தன்னம்பிக்கை இழந்த நிலையில் தான் இருக்கிறார்கள்.

மலையகத்து மக்கள் தோட்டங்களையே தங்கள் சொந்தக் கிராமம் என்று இன்னுமின்னும் வாழ்ந்து வருபவர்கள்.

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையற்று விட்டார்கள். அதைப் பற்றி இப்போது சொல்வதில் ஒரு பயனுமில்லை. அவைகள் 19ம் நூற்றுண்டுப் பழங் கதைகள்.

இதுவரையும் மலையகத்தார்கள் நம்பி இருந்து வந்த காங்கிரஸ் தலைமை ஒழுங்காகக் குழைந்து, பட்டைபட்டையாக, நாமங்களை அழியா வண்ணம் தீட்டிவிட்டார்கள். போதாக்குறைக்கு இப்போது பாராளுமன்றத் தேர்தலில் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடித் திணறிக் கொண்டிருக்கிறார்கள். மலையகத் தமிழ் மக்களின் சீவாதாரமான உரிமையை—பிரசா

## எஸ். எஸ். நாதன்
தொண்டன் ஆசிரியர்

வுரிமையைப் பறித்த யு. என். பிக்கு வாக்களிப்பதா? மலையக மக்களை இந்தியாவுக்கு நாடு கடத்த வழி தேடும் கூட்டாட்சிக்கு வாக்களிப்பதா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை காங்கிரஸ் தலைமையால்.

### சிந்தனை வேண்டும்

இந்தத் தேர்தலில் மலைநாட்டு வாலிபர்கள் வேட்பாளர்களாக முன் வந்திருந்தால் இப் பிரச்சினை இலகுவில் தீர்ந்திருக்கும்.

ஏன் தெரியுமா?

மலைநாட்டுக் காடுகளை வளமாக்கி, நாடாக்கிய மக்




களினத்திற்குத்தானே மலைநாடு.

மலைநாட்டு மக்கள் அடியோடு அப்படியே கப்பலேறி விடுவார்கள் என்று எவரேனும் கனவு காணுவார்களாயின் அது வீண் கனவாகவே முடியும். இயற்கை தனது திருவிளையாடலை இப்போது தெளிவுறக் காட்டியுள்ளதை கண்முன் கண்டு விட்டோம்.

### நமது குரலும் ஒலிக்க வேண்டும்

சுதந்திரம் அடைந்த இலங்கையில் கடந்த 16 ஆண்டுகளா காங்கிரஸ் இயக்கம் மலையகத்தாரின் பிறப்புரிமைக்காக எந்தக் களத்தில் குதித்து தியாகம் செய்தது? எத்தனை எத்தனை வாய்ப்புகளையெல்லாம் தவற விட்டு விட்டது என்பதைச் சொல்லிக் காட்ட வேண்டுமா?

பெரும்பான்மை மக்களின் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மலையகத்தாருக்கு, ஏன்? இலங்கைத் தமிழினத்திற்கே விடிவு ஏற்படாது என்பது உண்மையே. ஆகையாற்தான் சிந்தித்துச் செயலாற்றுமாறு வேண்டுகிறேன்.

சுதந்திர இலங்கையின் 1965-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சிறிமாவோ—சாத்திரியார் ஒப்பந்தம் பற்றிய பிரச்சினை எழும்போது, மலைநாட்டுத் தமிழ் மக்களின் குரல் அங்கே தொனிக்க வேண்டும்.

மலையகத்தார் எடுப்பார் கைப் பிள்ளையாக இருக்க மாட்டார்கள் என்பதை நிரூபிக்க வேண்டியவர்கள் மலைநாட்டு படித்த வாலிபர்கள்.

தொண்டில் சிறந்த
## வி. தருமலிங்கம்



கொழும்பிலுள்ள சட்டக் கல்லூரியிலே ஒரு உயர்தரமான தமிழ் மாணவ மன்றம் அமைக்க திரு. அ. அமிர்தலிங்கத்துடன் திரு. வி. தருமலிங்கமும் அயராது பாடுபட்டுவந்தார். இளமையிலிருந்தே தேசியப் பற்றுக் கொண்ட திரு. தருமலிங்கம் தமிழ்ப் பற்று மேற் கொண்டமையினால் தமிழரசுக் கட்சியின் தலைவர்களுள் ஒருவராக இன்று திகழ்வதில் ஆச்சரியம் இல்லை.

உடுவில் கிராமச்சங்கத் தலைமைப் பதவியில் எட்டு ஆண்டுகள் இருந்து சிறந்த பணிகளைப் புரிந்திருக்கிறார். கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும்சில காலம் முகாமையாளராகப்பணி புரிந்திருக்கிறார். சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் சற்றேனும் தயங்காது உழைக்கும் திரு. தருமலிங்கம் இந்துக்கலாபிவிருத்திச் சங்க முக்கியஸ்தர்களுள் ஒருவராகவும் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

கடந்த பாராளுமன்றத்தில் திரு. தருமலிங்கம் தமிழரசுக் கட்சியின் பிரதம கொறடாவாக இருந்து, சிறந்த முறையில் கடமையாற்றியுள்ளார். பாராளுமன்ற விவாதங்களில்பெருமளவில் கலந்து கொண்ட இவர் அரசாங்கக் கட்சியினரும், அமைச்சர்களும் தமிழினத்தின் உரிமைகளுக்கு முரணாகப் பேசுகையில் குறுக்கிட்டு அவர்களைப் பல தடவை மட்டம் தட்டியுள்ளார். அரசாங்க ஊழியர் பிரச்சினை பற்றி கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் பேசுகையில் 'பிரதமர் மக்களைப் பெற்ற மகராசி என்று எண்ணியிருந்தோம், ஆனால் அவர் ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணியாகி விட்டார்' என்று கூறினார்.

1958ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது கொழும்பிலும், தென்—மத்தியமாகாணங்களிலுமிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அகதிகளுக்குத்தக்க நிவாரணங்களை அளிப்பதில் திரு. தருமலிங்கம் இரவுபகலாக ஈடுபட்டிருந்துள்ளார்.

தமிழரசுக்கட்சி அறப் போராட்டங்களில் எல்லாம் திரு. தருமலிங்கம் பெரும் பங்கு கொண்டு உழைத்து வந்திருக்கிறார். தமிழ்த் தொண்டே செயலாகவும், இனச்சேவையே தொழிலாகவும் கொண்டு எவ்வகை இடர்வரினும் அத்தனையையும் துச்சமாக மதித்து முன்னேறும் துணிவு படைத்த தமிழரசுத் தலைவர்களுள் ஒருவரான திரு தருமலிங்கம் மீண்டும் இம்முறை உடுவில் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடுகிறார். பல்லாயிரக்கணக்கில் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டி தமிழ் அன்னைக்குச் சேவை செய்வார் என்பது திண்ணம்.

## ஒரே அணி சேர்ந்தால்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லீம்களின் பாடசாலைகள், பயிற்சிக் கலாசாலைகள் மூடப்படும்போது எந்த ஒரு சிங்களக்கட்சி யாவது ஏன்? என்று கேட்க முன்வரவில்லை.

சிங்கள ஆளும் கட்சிகள் எமது இனத்தை நோக்கிச் சீறிப்பாய்ந்த போதெல்லாம் சிறிதும் அஞ்சாது எதிர்த்து நின்று பாராளுமன்றத்திலும், ஊராரின் முன்னிலையிலும் போதனைகளையும், போராட்டங்களையும் செய்த கட்சியென்றால், அது தமிழரசு கட்சி ஒன்றைமட்டுந்தான என்று உறுதியாகச் சொல்லமுடியும். தமிழர்களுக்காகவும், முஸ்லீம்களுக்காகவும் தலை நிமிர்ந்து போராடுவதில் தமிழரசுக்கட்சிக்கு நிகர் எதுவுமே இல்லை.

### ஏகதேசியம் உதவுமா?

நமது கலாச்சாரத்தையும், மொழியையும், இனத்தையும் முற்றிலும் பாதுகாக்க எமக்கென்று ஒரு ஏற்பாடு அவசியம் தேவையாகும். இவற்றையெல்லாம் எண்ணிப்பாராமல் ஏக தேசியம், என்று இங்கிதமில்லாமல் பேசுவது கொஞ்சமும் பொருத்தமுடையதாகாது. ஓர் இனத்தில் உயிர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கும்போது அவர்களிடத்தில் பிரச்சினையில்லாத அமைதியான வாழ்வை எப்படி எதிர்பார்க்கமுடியும்? அவர்களைக்கொண்ட ஒரே தேசியத்தை எவ்வாறு உருவாக்க முடியும்?

வேளாண்மைச் செய்கைக்கு வயல் நிலத்தை வரம்புகளால் தெரித்து செய்கைபண்ணுவதன் மூலம் வயல் நிலம் வளமிழந்து அழிந்துவிடப் போவதில்லை; விளைச்சலும் குறைந்துவிடப் போவதில்லை. இதேபோல்தான் இனத்தின் பாதுகாப்புக்கென்று சில ஏற்பாடுகள் தேவை. இதன்மூலம் ஏக தேசியம் சிதறிவிடும், நாடு கெட்டுவிடும் என்று ஓலமிடுவது அர்த்தமற்ற ஒன்றாகும்.

வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்—முஸ்லீம் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒரே முகாம் அமைத்தால் தான் எதையும் சாதிக்கமுடியும். இப்போதைய நிலமையில் ஏதேதோ காரணங்களுக்காக புதுப்புதுக் கட்சிகளை உருவாக்கிக்கொண்டிருப்பதைவிட உருவாகிப் பலம் பொருந்தி இயங்கும் தமிழரசுக் கட்சியின் கீழ் ஒன்றுபடுவதே இன்றைய நிலமையில் தகுந்த பரிகாரமாகும்.

### பண்பாளரைத் தெரிவோம்

கொள்கையற்றவர்களைத் தலைவர்களாகத் தெரிந்தனுப்பினால் குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்ததையாக முடிந்து போகும். அரசியலைப்பற்றியும் மக்களைப்பற்றியும் அக்கரை இல்லாதவர்களை அனுப்பிவைப்பது அர்த்தமுள்ள, அறிவுள்ள செயலாகாது. இனத்தை ஏலம் போட்டு விற்கும் எட்டப்பர்களை, எமது தாய்மொழியை இகழ்ந்துரைக்கும் இதயத்தில் ஈரமில்லாதவர்களை, மதத்துக்கு மாறுபுரியும் மனச்சக்தி இல்லாதவர்களை

## மீட்சி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையாக இலங்கை அப்படிப்பட்ட நாடு இல்லை. 'தோழர்'களின் சொற்கள், வெறும் ஆத்திரத்தின் ஒலி வடிவங்களே. அவர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது. பலாத்காரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் தான். ஆனால், அதை இங்கு இவர்களால் செயற்படுத்த முடியாது. இது பொதுவுடமை நாடல்ல.

வேறுபட்ட கருத்துடையானை 'திருத்தி' எடுக்க, தம் லட்சிய நாடுகளில் கையாளப்படும் முறைகளை இங்கும் அப்படியே செய்து பார்க்கும் ஒரு கூட்டத்தாரிவிருந்து, தான் பங்கு பெறாது தப்பிவிட்டதை நினைக்க, நினைக்க, படுத்திருந்த நாகராஜனுக்கு பெருமை பிடிபடவில்லை.

இந்த நிறைவினை, அப்படியே தனியாக கொஞ்ச நேரம் அனுபவிக்க வேண்டுமென்ற துடிப்புணர்ச்சி, அவ் உணர்வினுள் இருந்த இதமே, மெல்லமாக வந்து அவன் கண்ணிமைகளை அழுத்தியது.

(யாவும் கற்பனை)

இந்தப் பொதுத் தேர்தலில் புறமுதுகிட்டோடச் செய்ய வேண்டும். நம்மையும் நமது இனத்தையும் காக்கின்ற கண்ணியமிக்க தலைவர்களை நாம் அனுப்பிவைக்கவேண்டும். மொழியையும் சமய வழியையும் பாதுகாக்கின்ற சிறந்த பண்புள்ளவர்களை இந்தத் தேர்தலில் நாம் தெரிவு செய்யவேண்டும்.




குட்டிக் கதை:

# மாய மனிதன்

வை. மொகமட்

"ஆ......" என்ற பயங்கரச் சிரிப்பைக் கக்கிக் கொண்டு, கம்பீரமாகக் கையில் கைத்துப்பாக்கியுடன் செமீன்தார் சம்புலிங்கம் முன்னால் நின்று கொண்டிருந்தான் ஒரு முரடன். அவன் மீண்டும் பலமாகச் சிரித்தான்.

"செமீன்தார்வாள் மணி இப்பொழுது எத்தனை தெரிகிறதா?" என்று கோபமாகக் கேட்டான். செமீந்தார் ஓநாயிடம் சிக்கிக் கொண்ட ஆட்டுக் குட்டியைப் போல் தலை குனிந்து பயத்துடன் என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ? என எண்ணிக் கொண்டு பேசாமல் இருந்தார்.

மீண்டும் அந்த முரடன் உரத்த குரலில் 'செமீன்தார் எனக்கு நேரமாகிறது. உம்... சீக்கிரம் பணத்தையெல்லாம் அள்ளித் தாருங்கள். என்னைப் பற்றி அறிமுகம் தேவையில்லை என்று நினைக்கின்றேன். சுருக்கமாகக் கூறப் போனால் நான்தான் மாய மனிதன்'.

மாயமனிதன் என்ற பெயரைக் கேட்டதும் செமீந்தார் நடுங்கினார். 'பாவிப் பயல் இவனா என் வீட்டில் பணத்தை அபகரிக்க வந்திருக்கிறான் இவன் வந்த இடத்தில் ஒரு கொலை நடக்காமல் இருக்காதே!' என்று எண்ணிய அவர், முரடனைப் பார்த்து. 'ஐயோ என்னை ஒன்றும் செய்து விடாதே! பணத்தையெல்லாம் தந்து விடுகிறேன், என்று கெஞ்சினார். அவன் மிஞ்சினான். புன்னகை பூத்தவாறே 'பணம் தந்தால்' உம்மை ஒன்றும் செய்யப் போவதில்லை, என்று அவன் கூறியதும், செமீந்தார் இரும்புப் பெட்டியை நோக்கி நடந்தார். அதைத் திறந்தார்.

நோட்டுக்கள் குவிந்து கிடந்தன. அதன் ஓரத்தில் ஒரு சிறு கைத்துப்பாக்கி இருந்தது. முன் எச்சரிக்கைக்காக அதை வாங்கி வைத்திருந்தார். அதில் சத்தம் வருமே தவிர, குண்டு வராது. திடீரென அவருக்குத் தைரியம் பிறந்தது. துப்பாக்கியை பின்னால் மறைத்துக் கொண்டு முரடனை நோக்கினார். அவன் அப்போதுதான் பீடி ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டிருந்தான். செமீன்தார் இலேசாக கனைத்தார். முரடன் தலையை நிமிர்த்தி, 'எங்கே பணம்?' என்று கேட்டான். அதற்கு செமீன்தார் 'இதோ பெற்றுக் கொள்' என்று துப்பாக்கியால் இருமுறை சுட்டார். பணத்தை எதிர்பார்த்த முரடன் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும் அதிர்ச்சியினால் மயங்கி விழுந்தான். செமீன்தார், 'தொலைந்தான் பாவி' என்று சொல்லி முடித்ததும்—

'கட் கட்' என்று சொல்லியவாறே ஓடி வந்தார், இயக்குனர் திவாகர். அவர் செமீன்தாரைப் பார்த்து, 'சபாஷ் சந்திரன், உன் செமீன்தார் நடிப்பு அபாரம்'' என்று பாராட்டினார். மயங்கிக்கிடந்த முரடனை நோக்கி "டேய் செல்லப்பா ஏண்டா இன்னும் மயங்கி விழுந்தவன் மாதிரியிருக்கே! எழும்படா" என்று சொன்னதும், "இயக்குனர் சார்! உங்கள் பதிலுக்காகத்தான் காத்திருந்தேன்" என்று சொல்லியவாறு எழுந்தான்.

ஒரு காட்சியை திறமையாக செய்து விட்டோம். என்ற எண்ணத்தில்மகிழ்ச்சியுடன் "பிறிஸ்டல்" வெண்சுருட்டு ஒன்றைப்பற்றவைத்தார் இயக்குனர் திவாகர்.

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(31)

—அன்ரனி பெர்னுண்டோ, கிரிலப்பனை—

## படுக்கையே பள்ளிக்கூடம்

சில மாணவர்களுக்குப் படிப்பு எட்டிக்காயாகக் கசக்கும். அவர்கள் பள்ளிக்கூடம் போவது படிப்பதற்காகவல்ல. பெற்ருேருக்கும் ஆசிரியருக்கும் பயந்தே அங்கு போகிருர்கள்.

வேறு சிலருக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசையிருக்கும். ஆனால், விழுந்து விழுந்து படித்தாலும் படிப்பு அவர்கள் மூளையில் ஏருது. ஆசிரியர் மனப்பாடம் செய்து கொண்டு வரச்சொன்ன பாடத்தை மறுநாள் வகுப்பில் ஒப்பிக்க முடியாமல் நாற்காலியின் மீது ஏறி நிற்கவும் பேச்சு வாங்கவும் நேர்வதுண்டு. இரவு நீண்டநேரம் தூங்காமல் படித்தேன் என்று உண்மையைச் சொன்னாலும் ஆசிரியர் நம்புவதில்லை.

வருங்காலத்தில் மாணவர்கள் தூங்காமல் படிக்க வேண்டிய அவசியமே இல்லை. பள்ளிக்கூடத்திற்கும் போகாமல் வீட்டில் அமைதியாகத் தூங்கிக்கொண்டே படிக்கலாம். நமது படுக்கையறைதான பள்ளிக்கூடம். நமது மேசைமேல் இருக்கும் ஒலிப்பதிவுக் கருவி('டேப் ரெக்காடர்') தான் ஆசிரியர்.

ஒலிப்பதிவுக் கருவியைக் கட்டிலருகில் உள்ள மேசைமேல் வைத்துவிட்டுப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு கட்டிலின்மேல்படுத்து உறங்க வேண்டியதுதான் மாணவர்களின் வேலை சுவாசஅலைகளின் துடிப்பைக்கொண்டு மாணவன் உறங்கி விட்டதை ஒரு கருவி ஒலிப்பதிவுக் கருவிக்கு உணர்த்தும். உடனே அது தானாக இயங்கி மாணவன் படிக்கவேண்டிய பாடத்தை ஒப்பிக்க ஆரம்பிக்கும்.

உறக்கத்தை உணர்த்தும் கருவியின் மூலம் உறக்கத்தின் அளவையும் தன்மையையும் ஒலிப்பதிவுக்கருவி உணர்ந்து அதற்கு ஏற்றபடி ஒலியைக் கூட்டியும் குறைத்தும் பாடத்தை ஒப்பிக்கும். உறக்கம் கலைந்தவுடன் அது தானாகவே நின்றும் விடும்.

மாணவன் காலையில் கண்விழித்தபின் இரவு என்ன நடந்ததென்று தெரியாது. நாம வழக்கமாகத் தூங்கி எழுந்ததுபோல் தான் இருக்கும். எவ்விதமான களைப்போ மாறுதலோ இருக்காது. ஆனால் மாணவனை அறியாமலே ஒலிப்பதிவுக் கருவி ஒப்பித்த பாடங்கள் அவன் மனதில் பதிந்திருக்கும். அப்பாடம் சம்பந்தமான எல்லாக் கேள்விகளுக்கும் மாணவனிடமிருந்து பட்பட்டென்று பதில் வரும.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நவீன கல்வி முறையில் சிறுவர் முதல் பெரியோர்வரை எவரும் மிக எளிதாகவும் விரைவாகவும் கல்வி கற்க முடியும். இது இன்றே பாவனைக்கு வராதா என்று நமது உள்ளம் ஆவலுடன் துடிக்கிறது அல்லவா?

# தென்கடலே! வன்கடலே! தீய வெறிக் கடலே!

(புத்தனேரி சுப்ரமணியம்)

தென்கடலே! வன்கடலே! தீய வெறிக்கடலே!
தின்கொடுமை எண்ணுகையில் நெஞ்சம் கொதிக்கிறதே!

கோடிவகைப் பேய்க்குணங்கள் கூடிவெறி ஆடியந்
சாடி தனுக்கோடி தனைவிழுங்க நாடியதேன்?

தண்ணீரோ! நீயே தங்கும் உனைநீரோ!
விண்ணதிரக் கொந்தளித்து விசித் தமிழ்மண்ணை
உண்ணும் பசித்தீயை உன்வயிற்றில் ஏன் வளர்த்தாய்?

பண்டுநீ தென்குமரிக் கண்டமதை உண்டவெறி
மண்டியதோ! மீண்டும் இந்த மண்ணசைகொண்டனையோ!
கோரப் புயலென்னும் கூட்டாளித் திருடனால்
ஈரம் இழந்தனையோ! ஊரழிக்க மிறினையோ?

ஆயிரத்தின் மேலோர் அலறி உயிர் இழக்க
வாய்பிளந்து நின்றாய்! வயிறு வலிக்காதோ?

நின்னைச் சபிக்கின்றோம்! நீர்வற்றி நீ தேய்க!
மண்விரிக! மக்கள் வளமாக வாழ்க!

செந்தமிழர் நாடின்னும் தேயாமல் வாழ்கவே!
கொந்தளிக்கும் சீறும் குறைவாய் கடல் அணங்கே!

# உங்கள் உளச் செவிக்கு!

-செட்டிநகர் மதியரசு-

வினுக்கள்:

(1) கைத்தறியைக் கண்டு பிடித்தவர் யார்?

(2) அம்மை நோய்த் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

(3) பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தின் உயரமென்ன?

(4) நைல் நதியின் நீளமென்ன?

(5) சோமியூலியத் என்னும் நூலை எழுதியவர் யார்?

(6) மேற்கு சேர்மனியின் தலைநகரம் எது?

(7) இலங்கைக்கு முதன் முதல் வந்த புத்தகுரு யார்?

(8) திசமகாராமையின் மறுபெயர் என்ன?

(9) "பேங்சின்யுங்கா"சிகரம் எந்த மலையில் அமைந்துள்ளது?

(10) குருந்தெல நீர் வீழ்ச்சியின் உயரமென்ன?

சரியான விடைகள்:-

(1) கட்றைட். (2) ஜென்னர். (3) 179 அடி. (4) 4037 மைல். (5) செக்பியர். (6) பொன். (7) மகிந்தன். (8) மாகம. (9) இமயமலையில். (10) 347.5 அடி.

—

# விநோத விடுகதைகள்

(1) ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்த தாம்மண்டபம். அது என்ன?

(2) கருப்புச் சட்டைக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன். அவன் யார்?

(3) கனதனத்தானைக் கடையிலே கண்டேன், கண்வுடனே கொண்டேன், கொண்டவுடனே அடித்தேன், அடித்தவுடனே சிரித்தாள், சிரித்தவுடனே கடித்தேன். அது என்ன?

(4) சன்னல் பின்னல் கயிறு சாதிலிங்கக் கயிறு எண்ணெய் படாத கயிறு என்ன கயிறு?

# மூத்தோர் மொழி

'அன்பு என்பது தியாகமே. அது எதையும் எடுத்துக் கொள்வதில்லை; கொடுத்துக் கொண்டே யிருப்பதுதான் அதன் இயல்பு.'

—சுவாமி விவேகானந்தர்.

'சுதந்திரத்துக்கும், கௌரவத்திற்கும் முழு விலையைக் கொடுத்தாகவேண்டும் என்பதை மக்கள் நினைவில் கொள்ளவேண்டும். நாம்கடினமாக உழைக்க வேண்டும்; மிகுந்த உற்பத்தி செய்ய வேண்டும். காலத்திற்குத் தேவையான எந்தத் தியாகமும் புரியத் தயாராக இருக்கவேண்டும்.'

—நேரு.

'வம்மினோ துணைவிர்! மருட்சிகொள்ளாதீர்! தம்மனோர் ஆற்றலை நாழிகைப் பொழுதெனும் புல்லிய மாற்றவர் பொறுக்கவல்லார்கொல்?"

—பாரதியார்.

பேசுவதற்கு விடயமில்லாவிட்டால் பேச மேடை ஏருதே, சொல்லவேண்டியதைச் சொல்லி முடித்ததும் உடனே உட்கார்ந்துவிடு.

—விதர்ஸ்பூண்.

முதலில் உன்னை அடக்கியாளப் பழகு. பிறகு உன் மனைவியை சுலபமாக அடக்கியாள முடியும்.

—புல்லர்.

பெண்களுடன் சிறிது ஒதுங்கியிருந்து பழகுவதே ஆண்களுக்கு அழகு.

—ரவீந்திரநாத்தாகூர்.

இ. கிறிஸ்டி, அரியாலையூர்.

# கீழ்க்கணக்கு நூல்கள்

முப்பொருளையும் ஒருங்கே பெற்று, கீழ்க்கணக்கு நூல்களாகப் பதினெட்டு நூல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அந் நூல்களின் பெயரே கீழ்வருவனவாகும்:-

நாலடியார்,
நாண்மணிக்கடிகை,
இன்னா நாற்பது,
இனியவை நாற்பது,
கார் நாற்பது,
களவழி நாற்பது,
ஐந்திணை ஐம்பது,
திணைமொழி ஐம்பது,
ஐந்திணை எழுபது,
திணைமாலை நூற்றைம்பது,
திருக்குறள்,
திரிகடுகம்,
ஆசாரக்கோவை,
பழமொழி,
சிறுபஞ்சமூலம்,
இன்னிலை,
முதுமொழிக்காஞ்சி,
ஏலாதி.

விடைகள்:-

1. டுகூன்தே.
2. டுட்பூ.
3. ய்காங்தே.
4. பும்பா.

அனுப்பியவர்:
செல்வி,
மரகதவல்லி சரவணமுத்து,
திருநெல்வேலி.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யில் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 7

பெயர் ____________________

பாடசாலை ____________________

முகவரி ____________________

____________________

____________________ ____________________

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

# மகத்தான 2-வது மாதம்!

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா விஜிதா விஜிதா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (அட்டன்) (மஸ்கெலியா)

ஆகிய திரைகளில்!

தேரோட்டி மகன் என்று தார்வேந்தரால் இகழப்பட்டும்
போரிலே ஒப்பற்ற வீரனாய்த் திகழ்ந்த வள்ளலின் கதை

சிவாஜி கணேசன்—அசோகன்—ராமராவ்—முத்துராமன்
சாவித்திரி—தேவிகா—எம். வி. ராஜம்மா
ஓ. ஏ. கே. தேவர்—ஜாவர் சீதாராமன்
மற்றும் பலர் நடித்த



பத்மினி பிக்சர்ஸ் **கர்ணன்** (ஈஸ்ட்மன் கலர்)

கதை வசனம் : சக்தி கிருஷ்ணசாமி
பாடல்கள் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன் : பி. ஆர். பந்தலு





## சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது

ஜெமினி கணேசன்—சாவித்திரி—பேபி பத்மினி
முதலியோர் நடித்த
புதுமைச் சித்திரம்!

கலாசித்ராவின்

# ஆயிரம் ரூபாய்

கதை—வசனம்—டைரக்ஷன் : கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

| | | |
|---|---|---|
| முருகன் ஜிந்துப்பிட்டி<br>ஜெமினி கணேசன்—சாவித்திரி<br>நடிக்கும்<br>**பிரேம பாசம்** | ராஜா யாழ்ப்பாணம்<br>ஜெமினி கணேசன்—தேவிகா<br>நடிக்கும்<br>**சுமைதாங்கி** | பத்மினி மட்டக்களப்பு<br>சிவாஜி கணேசன்—ஜமுனா<br>நடிக்கும்<br>**நிச்சய தாம்பூலம்** |



## வெற்றி முரசு கொட்டும் 2-வது மாதம்!

ஜீவராணி—ரவீந்திர ரூபசேன—ஆனந்த ஜயரத்ன—லீனடி சில்வா—சாந்திய குமாரி நடித்த

# சுயாகே ரஹச (சுயாவின் ரகசியம்)

4வது கடைசி வாரம்!
**எல்பின்ஸ்டன்** மற்றும் 8 திரைகளில்!



# கல்யாணியின் கணவன்

## 29-ம் திகதி வெள்ளி முதல்!

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை)
**வின்சர்** (யாழ்ப்பாணம்)
**இம்பீரியல்** (மட்டக்களப்பு)
**நெல்சன்** (திருகோணமலை)
**ரீகல்** (கம்பளை) **கிங்ஸ்** (பதுளை)
**தாஜ்மகால்** (மாத்தளை)



எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—அசோகன்
புஷ்பலதா—சௌகார் ஜானகி — நாகேஷ் நடித்த

# அல்லி

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 எ, இலக்கத்தில் 1965 ம் வருடம் சனவரி மாதம் 24 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.